# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"



ஓங்கி உலகளந்த உத்தமன்.

மாலை 10] கீலக - ஆனி - ஜூலை, 1968 [மணி 10

சென்னை அரசாங்க அறநிலையப் பாதுகாப்புத் துறை வெளியீடு.



நன்னிலம் வட்டம் அம்பல் ஸ்ரீ பிரமபுரீசுவரர் கோயிலில், நடைபெற்ற 'அதிதீவிரச் சாகுபடித் திட்டத் துவக்கவிழா'விலும், 'வடிமுனைக் குழாய்த் திறப்பு விழாவிலும்', தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் திரு சி. ஜி. ரங்கபாஷ்யம், I.A.S., அவர்களும், அறநிலைய ஆணையர் திரு. ஆ. இராதாகிருஷ்ணன், M.A., B.L., அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தல்.

*(18—5—1968)*

## பொருளடக்கம்


1. சேக்கிழார் விளக்கும் செம்பொருள்
2. "நம்பி யாரூரன் நாம்தொழும் தன்மையான்"
3. தமிழ்நாடு தெய்விகப் பேரவை
4. திருப்பாவைச் செழும் பொருள்
5. ஸ்ரீ ராமாநுஜர்
6. மகாபாரதம்
7. ஸ்ரீ ராமாயண ரஸப்ரவாகம்
8. திருவரங்கத்தின் சிறப்பு
9. கொங்கு நாட்டுத் தலங்கள்
10. மதிப்புரை
11. முப்புரம் எரித்த முதல்வன்


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

**ஆண்டுச் சந்தா ரூ. 10/-**

தனி இதழ் விலை ரூ. ஒன்று

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள், "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

8 - JUL 1968


# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 10] கீலக - ஆனி - ஜூலை, 1968 [மணி 10


## சேக்கிழார் விளக்கும் செம்பொருள்

**முன்னுரை:**

தெய்வப் புலவர் சேக்கிழார் பெருமானுக்குப் பலதிறச் சிறப்புகள் உண்டு. சேக்கிழார் பெருமானின் வாயிலாகவே, நாம் நமது சைவ பரிபாடைச் சொற்களையும், சிறந்த சம்பிரதாய ஒழுக்கங்களையும் தெரிந்து கொள்ளப்பெறுகின்றோம்.

'பார்கொண்ட தொண்டர் வரலாறு சொல் புராணம் அம்பலவர் அருளால் அமைந்தபடி தெரித்திட, உலகெலாம் எனும் சுருதி நாப்பண்ணும் ஈற்றும் பொருத்திப் பேர் கொண்ட சைவபரிபாடை, அறிவரிய சம்பிரதாயம் முதல் யாவும் பிறங்கத் தெரித்து எம்மை ஆண்ட குன்றைப்பிரான்' என வரும் சேக்கிழார் பிள்ளைத் தமிழ்ச் செய்யுள் இவ்வுண்மையைச் செவ்விதின் வலியுறுத்தும்.

**சேக்கிழார் சிறப்பு:**

இதுபற்றியே சேக்கிழார் பெருமானை நூலாசிரியர், உரையாசிரியர், போதகாசிரியர், ஞானாசிரியர் எனப் பலவகைகளில் அறிஞர்கள் புகழ்ந்து போற்றுகின்றனர்.

'நாடிய விரிநூல் சொற்றிடு திறனால் நல் நூலாசிரியன்; நகு பாசுரம்முதல் உரை செய்தலினால் நவில் உரையாசிரியன்; நீடிய பரசமயக் குழி வீழ்ந்தவர் நீப்பப் போதனை செய் நிலையாற்போதகாசிரியன்; இவை புகழ்தொறும் ஆடிய ஞானத்திறன் உறலால் ஞானாசிரியனும் நீ என்று; ஆன்றோர் பலரும் புகழப் படுபவ! அகிலம் எலாம் சென்று கூடிய புகழ்சால் குன்றைப் பிரான் கொட்டுக சப்பாணி! கொற்றச் சேவையர் காவல நாவல கொட்டுக சப்பாணி!' என்று பாராட்டிப் பெருங் கவிஞர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் மிக மகிழ்வுறுகின்றார்.

சேக்கிழார் பெருமான், திருமுறைகளை நன்கினிது பயின்று உணர்ந்தவர்களுள் தலைசிறந்த பெரும்புலவர்! திருமுறைகளின் சீரிய செம்பொருள்களை விளக்கும் செயலினும், சேக்கிழார் சுவாமிகள் பெறலருந்திறன் பெற்றுயர்ந் தொளிர்ந்தவர்.

'அநபாயன் அவையகம் வியக்கும் முப்புலவர் அருள் முக்கனி அருந் தமிழ்ச் சுவையனைத்தும் ஆராய்ந்து எடுத்துப்பல செய்யுள் முகமா அறிய அறிவித்த பெருநாவலன்' எனவும்,

"தமிழ் மறை யடங்குபல மந்தணமும் தவிரும் வெற்பென விளங்க, வெப்பரிய முழுமதிக் குடை நிழற்று அநபாயன்மேய அவையகம் நயந்து வியந்து மெய்ப் பாட்

டினெடு பாராட்டி மகிழ, மேல் மேல் விரித் தருளிய பிரான்! செப்பரிய குன்றையம்பதி அருள் மொழித் தேவன்" எனவும் வரும் பொருண் மொழிகளால், இவ்வுண்மை யினை யாவரும் இனிதுணரலாம்.

சேக்கிழார் பெருமான் தெய்வம் மணக் கும் தமது பெரிய புராணத்தின்கண், பல பல தேவாரத் திருப்பாடல்களுக்குத் திரு வருள் உணர்வு கொண்டு, தமது சீரிய கூரிய நுண்மாண் நுழை புலம் தோன்ற, அரிய பெரிய பொருள் விளக்கங்களைச் செய்தருளுகின்றார்.

தமது வாழ்நாள் முழுவதும் பெரிய புரா ணத்தினைப் பயின்றும் பயிலுவித்தும் மகிழ்ந்த பெருமை சான்ற பெருங் கவிஞர் ஆகிய மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள், அவற்றின் அருமை பெருமைகளை யெல் லாம் உணர்ந்தே 'நகுபாசுரம் முதல் உரை செய்தலினால் நவில் உரையாசிரியன்' எனத் திறன் தெரிந்து பாராட்டிச் சிறந் தெடுத்துப் புகழ்ந்து பாடினார். பாம்பின் கால் பாம்பன்றோ அறியும்?

**மண்ணில் நல்ல வண்ணம் :**

இங்ஙனம் சேக்கிழார் பெருமான் செம் பொருள் காட்டி விளக்கம் செய்தருளிய தேவாரத் திருப்பாடல்கள் பலவற்றுள் ஒன்றினை மட்டும் ஈண்டுக் குறிப்பிடுதல் சாலும்

"மண்ணில் நல்ல வண்ணம்
வாழலாம்; வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு
யாதும் ஓர் குறைவிலை;
மண்ணில் நல்லஃதுறும்
கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும்
பெருந்தகை இருந்ததே"

என்னும் தேவாரப் பாடல், சைவ மெய் யுணர்வு சிறிதேனும் உடையவர் யாவரா யினும், அவர்கள் அனைவரும் அறிந்த தொன்று. திருமண அழைப்பிதழ்களிலும், திருமண நிகழ்ச்சிகளில் வாழ்த்துரை கூறும் காலங்களிலும், இத் தேவாரப் பாடலை இந்நாளில் எல்லோரும் மிகுதியா கப் பயன்படுத்தி வருதல் பெரிதும் மகிழ் தற்கு உரியது.

இப்பாடல் நம் அனைவராலும் நன்கினிது உணரப் பெற்ற தொன்றே யாயினும் இப் பாடல் சம்பந்தரால் எங்கே பாடப்பெற்றது என வினவினால், நம்மிற் பெரும்பாலோர் 'கழுமலம்' என அப்பாடலில் வருவது கொண்டு, அது சீர்காழியிற் பாடப் பெற் றது எனவே விடைகூறுவோம். இந்தப் பாடல் திருஞான சம்பந்தப் பெருந்தகை யால் எப்போது? எங்கு? எந்தச் சூழ்நிலை யில்? பாடப் பெற்றது என்பதனை, நாம் சிந்தித்துணர்ந்து கொள்ளப் பெருமை யால், இங்ஙனம் நாம் தவறான விடை யையே கூற முற்படுதல் இயல்பாகும்.

சேக்கிழார் சுவாமிகள் திருஞான சம்பந் தப் பெருந்தகையின் உணர்வினோடு, தம் முணர்வும் ஒன்றி இயைந்து நின்று உணர்ந்த அனுபவத்தினைத் தெய்வத் திரு வருளால் பெற்று, இத் திருப்பாடல் சம்பந் தர் மதுரையில் இருந்த போது பாடப் பெற்றதென்றும்; அதற்குரிய சூழ்நிலை இது வென்றும்; நம்மனோர் உய்யத் தெருட்டி யருளுகின்றார். அத் திறம் அவர்க்கே யன்றிப் பிறர்கட்கும் அமைதல் இயலுங்கொல்?

**ஏகாரத்தின் பொருள்கள் :**

"மண்ணில் நல்ல வண்ணம்" என்னும் தேவாரப் பாடல் மதுரையிற் பாடப் பெற் றது என்பதனைச் சேக்கிழார் பெருமான் எங்ஙனம் அறிந்தனர்? "பெண்ணில் நல் லாளொடும் பெருந்தகை இருந்ததே" என வரும் அடியில் ஈற்றிலுள்ள ஏகாரமே, திரு வருள் துணையினால் சேக்கிழார்க்கு அக் குறிப்பைப் (Clue) புலப்படுத்தியது.

"தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே
ஈற்றசை எனவைந்து ஏகாரம்மே"

என்பது தொல்காப்பியம். இதனோடு 'இசை நிறை' என்ற ஒன்றையும் சேர்த்து, ஏகாரப் பொருள்கள் ஆறு என்று, நன்னூல் இயற் றிய பவணந்தி முனிவர் கூறுவர்.

'அவர்களுள் இவனே நல்லவன்' என்பது பிரிநிலை. 'நீயே இங்ஙனம் கூறினாய்?' என்பது வினா. 'இவனே அதனை எடுத்தான்' என்பது தேற்றம். 'என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே' என்பது ஈற்றசை. 'நிலனே நீரே தீயே வளியே விசும்பே' என்பது எண். 'ஏயே இவள் ஒருத்தி பேடியோ' என்பது இசைநிறை. ஏகார இடைச் சொல் குறிக்கும் இந்த ஆறு வகைப் பொருள்களுள் 'பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே' என்னும் வரியின் இறுதில் உள்ள ஏகாரம், ஈற்றசை (பொருளில்லாதது) எனவே, நாமெல்லாம் பெரும்பாலும் கொள்வோம். ஆனால், சேக்கிழார் சுவாமிகளோ திருவருளின் துணையால், அது வேறு பொருள் குறிப்பது என உணர்ந்து கொண்டு, நமக்கும் விளக்கிக் காட்டியருளுகின்றார்.

### சிவ பாத இருதயர் :

திருஞான சம்பந்தப் பெருமான் பாண்டி நாட்டில் சிவநெறியைச் செழிப்பித்துத் திருநீற்றொளி பரப்பி, மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் மகிழ்ந்து வணங்க, மதுரையின்கண் அரசாங்க விருந்தினராகச் சில நாள் தங்கியிருந்தார்.

அப்போது தம் அருமைத் தவப் புதல்வரின் பிரிவைத் தாங்கலாற்றாத சிவபாத இருதயர், அவரைக் காணுதற்குக் கழி பெரு வேட்கை மீதூர்ந்து, பாண்டி நாடு நோக்கிப் புறப்பட்டு மதுரையைச் சென்று அடைந்தார். மதுரையில் திருஞான சம்பந்தர் தங்கியிருந்த திருமடத்தை வினவித் தெரிந்து கொண்டு தேடியடைந்தார். அங்கிருந்த அன்பர்கள் அவரை வணங்கி வரவேற்று, அவர்தம் வரவினைத் திருஞான சம்பந்தர்பால் ஓடிச்சென்று மகிழ்ச்சியுடன் அறிவித்தனர்.

பெருமான் அதுகேட்டு 'எப்பொழுது வந்தருளிற்று' என வினவி எதிர் எழுந்தருளினார். சிவபாத இருதயர் முன் தொழுது சென்றணைந்தார். பெருமான் அவரை எதிர் தொழுது மகிழ்ந்தார்.

உலகியல் தந்தையைக் கண்ட திருஞான சம்பந்தருக்குத் தம்முடைய அருளியல் தந்தையின் நினைவு எழுந்தது. தம் 'தாயும் தந்தையும் நலமா?' என்று உசாவியறியும் வேட்கை, அவர்பால் மிக்கெழுந்தது. ஏனைய உயிர்கட் கெல்லாம் பொதுவாக அம்மையப்பனாய் விளங்கும் இறைவன், திருஞான சம்பந்தர் திறத்தில் உண்மையிலேயே அம்மை அப்பனாய் எழுந்தருளி, இளங்குழவிப் பருவத்திற்றானே அவரை ஆண்டுகொண்டு தண்ணளி புரிந்தனன் அல்லனோ? அத்தகைய அம்மையப்பரின் நலத்தை வினவியறிய அவருள்ளம் விரைந்தது. அம்மன எழுச்சியால், பெருமான் சிவபாத இருதயரை நோக்கி,

> "அருந்தவத்தீர்! எனையறியாப்
> பருவத்தே எடுத்தாண்ட
> பெருந்தகை; எம்பெருமாட்டி
> யுடன் இருந்ததே?"

எனத் திருப்பதிகம் போற்றிசைத்தார். அத்திருப்பதிகமே "மண்ணில் நல்ல வண்ணம்" எனத் தொடங்குவதாகும். அத்திருப்பதிகம் இத்தகைய ஒரு பொருந்திய சூழ்நிலையிலேயே திருந்த அருளிச் செய்யப்பட்டது என்பதனைச் சேக்கிழார் பெருமான், "காலம் இடை யிட்டவற்றையும், தேயம் இடையிட்டவற்றையும் காணும் ஞானக்கண் (Intuition) கொண்டு திருவருள் துணையால் உணர்ந்து நமக்கும் உணர்த்தியருள்கின்றார்.

### வினாப் பொருள் :

திருஞான சம்பந்தரின் உணர்வோடு, சேக்கிழார் பெருமானின் உணர்வும் ஒன்றி இயைந்து நின்று திளைத்திருந்தாலன்றி, இச்சூழ்நிலையை அவர் இனிதுணர்ந்திருத்தல் இயலுமோ? சேக்கிழாருக்கு இச்சூழ்நிலையின் பெற்றியுணர்தற்குப் பெரிதும் உதவியது, "பெருந்தகை இருந்ததே" எனவரும் ஈற்றடியில் உள்ள ஏகாரமே யாகும். நம் போன்றோர் அவ்வேகாரத்தினை "ஈற்றசை" என்றோ, "பிற" என்றோ எளிதாக எண்ணி, எள்ளித் தள்ளிவிடுவோம். ஆனால், சேக்கிழார் பெருமான் தேவாரத் திருப்பாடல்களில் ஒரு சிறு எழுத்தினையும் பொருளற்றதெனப் புறக்

கணிக்க உள்ளம் ஒருப்படுவரோ? சேக்கிழார் அவ்வேகாரத்தினை வினுப்பொருள் குறித்ததென நுண்ணிதின் எண்ணியுணர்ந்தார்.

"மண்ணில் நல்ல என்றெடுத்து
மனத்தெழுந்த பெருமகிழ்ச்சி
உண்ணிறைந்த காதலினல்
கண்ணருவி பாய்ந்தொழுக
அண்ணலார் தமைவினவித்
திருப்பதிகம் அருள் செய்தார்
தண்ணறும்பூஞ் செங்கமலத்
தார்அணிந்த தமிழ்விரகர்"

எனத்தாம் நுண்ணிதின் எண்ணியுணர்ந்த செம்பொருளைச் சேக்கிழார் சுவாமிகள், நாமும் உணர்ந்து மகிழ விளக்கியிருத்தல் காணலாம்.

இச்செய்யுளின்கண் "அண்ணலார் தமை வினவித் திருப்பதிகம் அருள் செய்தார்" எனவரும் வரியில் அமைந்துள்ள வினவி என்னும் ஒரு சொல்லே மிகவும் உயிர்ப்புடையதாய், அத்திருப்பதிகத்தின் கருத்து முழுவதனையும் சுருக்கித் தொகுத்துத் திரட்டி யுணர்த்தி நிற்கின்றது. இங்ஙனம் இங்கு ஏகாரம் வினுப்பொருள் உணர்த்தி வந்தது என்பதனைக் குறிப்பதற்கு, வினவி என்னும் ஒரு சொல்லைப் பெய்து பொருளைத் தெளிவு படுத்தி அருளிய சேக்கிழாரின் அருமைப்பாடு அனைவரும் வியக்கத் தகுவது. அன்றியும்,

"போதையார் பொற்கிண்ணத்து அடிசில்
பொல்லாது எனத்
தாதையார் முனிவுஉறத் தான் எனை
ஆண்டவன்
காதையார் குழையினன் கழுமல
வளநகர்ப்
பேதையாள் அவளொடும் பெருந்தகை
இருந்ததே?"

எனவரும் அத் திருப்பதிகப் பாடலின் கருத்தைத் தழுவி, அதன் குறிப்புப் பொழிப்புரை போல,

"அருந்தவத்தீர்! எனை அறியாப்
பருவத்தே எடுத்தாண்ட
பெருந்தகை, எம் பெருமாட்டி
உடன் இருந்ததே"

என விரித்துரைத்து அருளிச் செய்திருக்கும் அழகு, நம்மனோர்க்கு ஆராப் பெருவிருந்தாக அமைகின்றது.

## முடிவுரை :


சேக்கிழார் பெருமான் விளக்கியருளும் இன்னோனைய செம்பொருள்கள் பலவற்றையும் தெளிந்துணர்ந்து உய்ய, நாம் அனைவரும் இறைவன் திருவருளை வழுத்துவோமாக!

[அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்தின் மூன்றும் ஆண்டுவிழாவில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிப் பெரு மண்டபத்தில், திரு. மு. வைரமுத்து J. P. அவர்கள் தலைமையில், 1—6—68 அன்று ஆற்றிய சொற்பொழிவில் ஒரு பகுதியின் சுருக்கம்.]

—ஆசிரியர்.

தூக்கு சீர்த்திருத் தொண்டித் தொகைவிரி
வாக்கி னுற்சொல்ல வல்ல பிரான், எங்கள்
பாக்கிய யப்பய னுப்பதி குன்றைவாழ்
சேக்கி ழான்அடி சென்னி இருத்துவாம்

—சிவஞான முனிவர்.



ஸ்ரீ ரங்கநாதசுவாமி

ஸ்ரீரங்கம்

# "நம்பி யாரூரன் நாம்தொழும் தன்மையான்"

## முன்னுரை :

"நம்பி யாரூரன் நாம் தொழும் தன்மை யான்" என்னும் அழகிய இனிய சொற்றொடர், சைவ சமய ஆசிரியர்களாகிய நால்வர் பெருமக்களுள்ளே, சுந்தரமூர்த்தி சுவாமி களின் அருமை பெருமைகளை, நம் மனோர்க் குப்பல வகையிலும் நினைவூட்டி அறி வுறுத்தி நிற்கின்றது. இவ்வழகிய இனிய அரிய தொடர்,

> "சம்பு வின் அடித் தாமரைப் போதலால்
> எம்பி ரான்இறைஞ் சாய்இஃ தென்னனத்
> தம்பி ரானைத்தன் உள்ளம் தழீஇயவன்
> நம்பி யாரூரன் நாம்தொழும் தன்மையான்!"

என வரும் பெரிய புராணப் பாடலின்கண், உபமன்னிய முனிவர் கூற்றாகவந்துள்ளது. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் சிறந்துயர்ந்த தன்மைகளைப்பற்றி, நீள நினைந்துணர்ந்து நெஞ்சுருக நேரும் போதெல்லாம், இவ் வருமைத் தொடரினைப் பலகாலும் நாம் நினைவு கூர்ந்து மகிழ்கின்றோம். சுந்தர மூர்த்திகளின் சிறப்புக்களை யெல்லாம் உள்ளடக்கிச் சுருக்கமாகக் குறிப்பிடுதற்கு, இதனினும் சிறந்த பொருள் பொதிந்த வேறொரு தொடரினை, நாம் காண்டல் இயலாது.

## நம்பியாரூரன் :

சுந்தரர்க்குப் பல்வேறு பெயர்கள் உண்டு. பிற சமயாசிரியர்கள் எவரும் கூறிக்கொள்ளா வகையில் "திருமருவும் திரள்தோளான்" "மலை மலிந்த தோள் ஊரன்" "உரையினுர் மதயானை நாவலா ரூரன்" "மல்லின் மல்குதிரள் தோளூ ரன்" "அல்லியந் தாமரைத்தார் ஆரூரன்" என, இவர் தம்மைத் தாமே புகழ்ந்து குறிப்பிட்டுக் கொள்ளும் அளவுக்குப் பேரழகு வடிவம் உடையவராக விளங்கி யிருந்தமையின், மக்கள் இவரைச் சுந்தரர் என்றும், சுந்தரமூர்த்தி என்றும் வழங்கின ராதல் வேண்டும். "வடிவு நம்பியாரூரன் செம்பொன்மேனி வனப்பாக..." என வரும் சேக்கிழார் பெருமான் கூற்றும், ஈண்டு நாம் நினைவு கூர்தற்குரியது. "மற்று நீ வன்மை பேசி வன்தொண்டன் என்னும் நாமம் பெற்றனை" எனவும், "தோழமை யாக உனக்கு நம்மைத் தந்தனம்" எனவும் சிவபெருமான் அருளிச் செய்தமையால், வன்தொண்டர், தம்பிரான் தோழர் முதலிய பெயர்கள் இவருக்கு ஏற்பட்டன.

நம்பியாரூரர் என்பது பெற்றோர்கள் இவருக்கு இளமையில் இட்டு வழங்கிய பெயர். "நம்பியாரூரன் என்ற நாமமும் சாற்றி..." என்பது இதனை வலியுறுத்தும். இனி 'நம்பி' என்பது ஆண்பாற் சிறப்புப் பெயர் என்றும், 'ஆரூரன்' என்பதே பெற் ரோர்கள் இட்ட பெயர் என்றும்; பண்டைக் காலத்தில் பாட்டனின் பெயரைப் பேர னுக்கு வைத்து வழங்குதல் மரபு என்றும்; "அருமறை நாவல் ஆதிசைவன் ஆரூரன் செய்கை" எனப் போதரும் பெரிய புராணப் பாடலால், சுந்தரரின் பாட்டனர் பெயர் 'ஆரூரன்' என்று தெரிதலால், அப் பெயரே இவர்க்குப் பெற்றோர்களால் இட்டு வழங்கப் பெற்றதாகல் வேண்டும் என்றும்; நாம் கொள்ளுதல் கூடும்! நம்பி யாரூரர் என்னும் இப்பெயரையே மந்திர மாகக் கொண்டு வழிபட்டுப் பெருமிழலைக் குறும்பர் எனும் பரமயோகியார் வீடுபேறு அடைந்தனர்.

> "நாளும் நம்பி யாரூரர்
> நாமம் நவின்ற நலத்தாலே
> ஆளும் படியால் அணிமாதி
> சித்தி யான அணைந்ததற்பின்"

எனவரும் பெரிய புராணப் பாடலால், நம்பி யாரூரன் என்னும் பெயரையே மந்திரமாகக் கொண்டு ஓதிவந்தால், அணிமாதி சித்திகள் அனைத்தும் பெறலாம் எனவும், நாம் உணர்கின்றோம். உபமன்னிய முனிவர், பெருமிழலைக் குறும்பர் போன்ற தவப் பெருஞ் சான்றோர்கள், 'நம்பியாரூரர்' என்னும் பெயரைப் பாராட்டிப் போற்றியமை பற்றியே, ஆசிரியர் சேக்கிழார் பெருமான் "தம்பிரான் அருளினாலே தவத்தினால் மிக்கோர் போற்றும் நம்பியாரூரர் என்ற நாமம்" என விதந்தெடுத்துப் போற்றியருளினர் போலும்! எனவே, நம்பியாரூரன் என்னும் பெயர் எத்துணைச் சிறப்புடையது என்பதனை யாவரும் இனிது உணரலாம்.

## நாம் தொழும் தன்மையான் :

இனி நம்பியாரூரர் நாம் தொழத் தகுந்தவர் என்பதும், அதற்குக் காரணம் "குண நலம் சான்றோர் நலனே" என்றபடி, அவர்பால் அமைந்து விளங்கிய சிறந்த பல உயர்ந்த தன்மைகளேயாம் என்பதும், மேலைத் தொடரால் நாம் அறியக் கிடத்தலின், நாம் தொழத் தகுந்தவராகும்படி, நம்பியாரூரர்பாற் சிறந்து விளங்கியிருந்த தன்மைகள் சிலவற்றையேனும் ஆராய்ந்துணர்ந்துய்தல், நம்மனோர்க்கு இன்றியமையாத கடமையாகும்.

## நுணங்கிய கேள்வி மேலோன் :

நம்பியாரூரர் வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தவர். "நிரம்பிய வாழ்க்கை" நடத்தியவர். திருமுனைப்பாடி நாட்டில், திருநாவலூரில், மாதொரு பாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும் வேதியர் குலத்துள், மேம்படு சடையனார்க்கு, ஏதமில்கற்பின் வாழ்க்கை மனை இசைஞானியார்பால், தீதகன்று உலகம் உய்ய, அவர் திருவவதாரம் செய்தருளினர். தெருவில் தேருருட்டும் சிறு பருவத்தில், நரசிங்க முனையரையர் என்னும் நாடுவாழ் அரசர் கண்டு, இவரை அன்பினால் மகன்மை கொண்டார். அரசர் காதற் பிள்ளையாய் வளர்ந்து வந்த இவர், இளமையிலேயே அளவில் தொல் கலைகள் ஆய்ந்து தேர்ந்தார். 'நுணங்கிய கேள்வி மேலோன்' என விளங்கினர். "முடியால் உலகாண்ட மூவேந்தர்களும்" மதித்து வணங்கும் வண்ணம், எல்லாப் பெருஞ் சிறப்பும் உடையவராகத் திகழ்ந்தார். இறைகளோடிசைந்த இன்பமும், இன்பத்தோடிசைந்த வாழ்வும், இவர்க்கு அமையப் பெற்றிருந்தன. இங்ஙனம் மகிழ்ச்சியின் மைந்துற்றிருந்த போழ்தும், "வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்" என்னும் பேருண்மையினை, அவர் மறவாது நன்கறிந்திருந்தார். "மத்த யானை ஏறி மன்னர் சூழ வருவீர்காள். செத்த போதில் ஆரும் இல்லை. சிந்தையுள் வைம்மின்கள்" என அவர், அனைவர்க்கும் அறிவுறுத்துகின்றார்.

## 'விருந்தாய சொன்மாலை' :

'கற்ற கல்வியிலும் இனியவன்' ஆக இறைவனைக் கண்டுணர்ந்து போற்றிய இவர் சங்க கால இலக்கியங்கள் பலவும் கற்றிருந்தாராதல் வேண்டும்! "கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை" எனப் பாடியிருத்தலொன்றே, இவர்தம் சங்க நூற் புலமைக்குச் சான்று பகரும். "குமண மாமலைக் குன்று போல் நின்று தங்கள் கூறை ஒன்றின்றியே" "சொல்லரும் புகழான் தொண்டைமான்" என வரும் இவர்தம் பாடற் பகுதிகளால், குமணன், தொண்டைமான், இளந்திரையன் முதலிய சங்க கால அரசர்களையும், இவர் குறிப்பிட்டிருத்தல் புலனாகின்றது. திருநெல்வாயில் அரத்துறைப் பதிகத்தில், திருக்குறள் சிலவற்றை இவர் எடுத்தாண்டிருப்பது, இவர் 'கற்பவை' கற்றிருந்த முறையினை நமக்குத் தெற்றென விளக்குகின்றது.

திருக்கருப் பறியலூர்ப் பதிகத்தில் "விருந்தாய சொன்மாலை கொண்டேத்தி" என வரும் தொடரை, அரசஞ்சண்முகனார் அவர்கள் தொல்காப்பியத்துட் போதரும் 'விருந்து' என்னும் பகுதிக்கு மேற்கோளாகக் கூறினர் என்பராகலின், ஆளுடைய நம்பிகள் ஆய்ந்து தேர்ந்த நூல்களுள், தொல்காப்பியமும் ஒன்றாதலை உணர்கின்றோம். "இணைகொள் ஏழெழுநூறு இரும்பனுவல் ஈன்றவன் திருநாவினுக்கரையன்" என எண்ணித் தொகையையும் குறிப்பிட்டுப் பாடியிருத்தலால், கற்பவை கசடறக் கற்றுயர்ந்த இவர்தம் சீர்த்தி தெரிகின்றது. மணிவாசகரின் திருவாசகமும், சுந்தரரின் மனங்கவர்ந்த நூல்களுள் ஒன்றாக இருந்திருத்தல் கூடும் என்று தோன்றுகின்றது. "உழைதரு நோக்கியர்கொங்கைப் பலாப்பழத்து ஈயின் ஒப்பாய் விழைதருவேன்" என்னும் திருவாசகத்தின் எதிரொலியை, "வாணா

நுதலார் வலைப்பட்டு அடியேன் பலவின் கனி ஈயது போல்வதன்முன் அடியேன் உய்யப்போவதோர் சூழல் சொல்லே'' என்னும் வரிகளில் நாம் கேட்கின்றோம்.

'மிக்க விழுத்தவ வேந்தர்' :

இனி ''சடையன்றன் சிறுவன் இசைஞானி காதலன்'' எனப் பலவிடத்தும் இவர் தம்மைச் சுட்டிக் கொள்ளுதலால், தாய் தந்தையர்பால் இவர்க்கிருந்த பேரன்பு புலப்படுகின்றது. ''நாதனுக்கூர், நமக்கூர், நரசிங்கமுனையரையன் ஆதரித்து ஈசனுக்கு ஆட்செய்யும் ஊர், அணி நாவலூர்'' எனவரும் இவர் தம் திருமொழியால், தம்மை எடுத்து வளர்த்துப் போற்றிய நரசிங்க முனையரையர்பால் இவர் கொண்டிருந்த நன்றி யுணர்வும்; ஊர்ப்பற்று நாட்டுப் பற்று முதலியனவும் வெளிப்படுகின்றன. இவர் தம் இல்லற வாழ்க்கை காதலின்ப நலம் சிறந்து திகழ்கின்றது. ''பண்மயத்த மொழிப்பரவை, சங்கிலிக்கும் எனக்கும் பற்றாய பெருமானே'' என்பன போன்ற பகுதிகள், இவர்களின் தூய காதலின்ப வாழ்வின் சிறப்பினைத் தெரிவிக்கின்றன. 'பெற்ற சிற்றின்பமே பேரின்பமாய் அங்கே முற்றவரும் பரிசு' அமையுமாறு அருளுணர்வு மீக்கூர, இவர் காதலின்ப நலம் நுகர்ந்தமை கருதுதற்குரியது. தொல்காப்பியர் விதித்த தவநெறி வாழ்க்கையினையே, இவர் சிவனுறையும் திருத்துறையூர் சென்றணைந்து, பவ நெறிக்கு விலக்காகும் பதிகம்பாடிப் பெற்றனர் போலும்! ''அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும் சிறந்தது பயிற்றல்'' எனத் தொல்காப்பியரும் திருவள்ளுவரும் வகுத்துரைத்த 'தவநெறி' வாழ்க்கைக்குச் சிறந்த இலக்கியமாக விளங்குபவர், சுந்தரரேயாவர்.

இச்சிறப்புடைமைபற்றியே ''மிக்க விழுத்தவ வேந்தர்'' ''மேரு வரையின் மேம்பட்ட தவத்தான்'' என்றெல்லாம், இவர் புகழ்ந்து போற்றப் பெற்றுள்ளார் எனலாம். இல்லற வாழ்க்கையின் தொல்லைகளுக்கு இடையேயும், சுந்தரர் இறைவனைச் சிறிதும் மறவாமல் இருந்தமையை, ''பத்திமையும் அடிமையையும் கைவிடுவான் பாவியேன்'' என்னும் பதிகம் காட்டுகின்றது. இப்பெருஞ் சிறப்பினை விதந்தெடுத்து வியந்தே,

''செல்வநல் ஒற்றி யூரன்
செய்யசங் கிலியால் ஆர்த்து
மல்லலம் பரவை தன்கண்
மாழ்குற அமிழ்த்து மேனும்,
அல்லும்நன் பகலும் நீங்கா
தவன்மகி ழடியில் எய்தி
நல்லஇன் படைந்தி ருப்பன்
நம்பியா ரூரன் தானே''

எனச் சிவப்பிரகாசர் இருபொருள்பட அழகுறப் புகழ்ந்து மகிழ்ந்தார். ''ஏடு தரும் மலர்க்குழலார் முலைத்தலைக்கே, இடைக்கே எறிவிழியின் படுகடைக்கே கிடந்தும் இறைஞானம் கூடுமவர் கூடரிய வீடும்கூடிக் குஞ்சித்த சேவடியும் கும்பிட்டே இருப்பர்'' என்னும் சிவஞான சித்தியார் திருப்பாடலுக்கு, நம்பியாரூரரே நல்ல எடுத்துக் காட்டு ஆவார்! இறைவனை நினையாது கழிந்த நாட்களை இவர், ''ஓவும் நாள், உணர்வு அழியும் நாள், உயிர் போகும் நாள், உயர்பாடைமேற் காவும்நாள் என்று இவைஅலாற் கருதேன்''என இழித்துப் பழித்துக் கூறியிருப்பது, நம்மனோர் நினைவிற் பதிக்கற் பாலதாகும்.

'அடியார்க்கு அடியார்' :

திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் போன்ற நம் சமயச் சான்றோர்கள்பால், நம்பியாரூரர் கொண்டிருந்த நன்மதிப்பிற்கு எல்லையே இல்லை. ''நாவின் மிசை அரையன்னொடு தமிழ் ஞான சம்பந்தன் யாவர் சிவனடியார்களுக்கு அடியான் அடித் தொண்டன்'' ''நல்லிசை ஞான சம்பந்தனும் நாவினுக்கரசரும் பாடிய நற்றமிழ் மாலை சொல்லியவே சொல்லி ஏத்துகப்பான்'' எனவரும் பாடல்கள், இவ்வுண்மையைச் செவ்விதின் உணர்த்தும். ''உடைய அரசு, உலகேத்தும் உழவாரப் படையாளி, விடையவர்க்குக் கைத்தொண்டு விரும்பு பெரும்பதியை, மிதித்து அடையுமதற்கு அஞ்சுவன்'' என்று இவர் திருவதிகையில் சித்தவடமடம் சேர்ந்ததும்; ''பிள்ளையார் திருவவதாரம் செய்த பெரும்புகலியுள்ளும் நான் மிதியேன்'' என இவர் சீர்காழிப்பதியின் ஊரெல்லைப் புறம் வணங்கிப் போந்ததும் பிறவும்; ஆரூரரின் அருமைமிக்க அடக்கவுணர்வினைப் புலப்படுத்துகின்றன. ஞானசம்பந்தர்க்கும் நம்பியாரூரர்க்கும் இடையே, பல திறப் பண்பொப்புமைகளை நாம் காண்கின்றோம். நம்பியாரூரர் தமக்குரிய இனிய

தலைவராக ஞானசம்பந்தப் பெருமானையே கொண்டிருந்தார் என்றுணர்த்தும் சான்றுகள் பலப்பல வுள்ளன.

## நட்புரிமை நலம் :

சேரமான் பெருமாளும், நம்பியாரூரரும் கொண்டிருந்த நட்பின் சிறப்புப் பெரிதும் பாராட்டற்பாலதொன்றாய்ப் பிறங்குகின்றது. "இன்ப வெள்ளத்திடை நீந்தி ஏற மாட்டாது அலைவார்போல் என்பும் உருக உயிர் ஒன்றி உடம்பும் ஒன்றாம் என இசைந்து," தழுவி மகிழ்ந்து நின்ற இவர்களின் ஒப்புயர்வற்ற சிறந்த நட்பின் திறம், நட்பின் இலக்கணத்திற்கே நல்லதோர் எடுத்துக்காட்டாக இலங்குகின்றது. "பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடையாளன் தகைமைக் கண் தங்கிற்றுலகு" என்பதற் கேற்பப் பகைமை பாராட்டுபவர்களையும் கூடப் பண்பார்ந்த நண்பர்களாக்கிக் கொள்ளவல்ல பெருந்திறன் படைத்தவர், நம்பியாரூரர் என்பதற்கு விறன்மிண்டர் - ஏயர்கோன் கலிக்காமர் வரலாறுகளே சான்று பகரும். தோழராகப் பழகுவதற்கு இனிய துணைவர் இவர் என்பது, சோமாசிமாறர் - கோட்புலியார் முதலானோர் மாட்டு இவர் கொண்டிருந்த தொடர்பால் நன்கு விளங்கும். கோட்புலியாரின் புதல்வியர் இருவரையும் மணந்து கொள்ள உடன்படாது "தொடிசேர் தளிர்க்கை இவர் எனக்குத் தூயமக்கள்" எனக் கூறி, அது முதல் "வனப்பகை - சிங்கடியப்பன்" என இவர் தம்மைக் குறித்துக்கொள்வது, இவர் தம் சான்றாண்மை நலம் இனையதென உணர்த்தும். அவிநாசிப் பதியில் முதலையுண்ட மதலையை வருவித்துக்கொடுத்த அருள் நிகழ்ச்சி, ஆரூரரின் அளப்பரிய இரக்கவுணர்வை விளக்கப்போதிய சான்றாகும்.

"இலக்குளநீர் அழைத்து, அதனில்
இடங்கர்உற அழைத்து, அதன்வாய்த்
தலைக்குதலை மதலைஉயிர்
தழைப்ப,அழைத் தருளியநின்
கலைக்கும்,வட கலையின்முதற்
கலைக்கும்உறு கணக்கு,உயர்பொன்
மலைக்கும்,அணு நிலைக்கும்உரு;
வன்தொண்டப் பெருந்தகையே!"

—திருவருட்பா

## நகைச்சுவை நயம் :

நம்பியாரூரரின் பாடல்களில், ஞானசம்பந்தர் பாடல்களின் சாயல் காணப்படுகின்றது. தோழமை இயல்பைக் காட்டும் நகைச்சுவை நலங்கள் பல நிரம்பியுள்ளன. "வாழ்ந்து போதீரே" "எத்துக்கு இங்கிருந்தீர் எம்பிரானிரே?"... என்பன போன்றுவரும் பகுதிகள், இறைவன்பால் இவர் கொண்டிருந்த நட்புரிமையின் பெற்றிமையை, நன்கினிது விளக்குகின்றன. "பாதியோர் பெண்ணை வைத்தாய்! படர் சடைக் கங்கை வைத்தாய்! மாதர் நல்லார் வருத்தம் அது நீயும் அறிதியன்றே?" முதலிய பாடல்கள், இவரது சொல்லாற்றலைப் பல்லாற்றானும் விளக்க வல்லனவாகும். "பத்தூர்புக் கிரந்துண்டு" எனத் தொடங்கும் திருநாகைக்காரோணப் பதிகத்தால் "வாழ்க்கை வாழ்வதற்கே" என்பதுதான் இவர் தம் கோட்பாடு ஆகும் எனத் தோன்றுகிறது. "நீதியில் ஒன்றும் வழுவேன் நிட்கண்டகம் செய்து வாழ்வேன்" என்பன போல, இவர் தம் பண்புகளைத் தாமே குறிப்பிட்டுரைத்திருத்தல், இவரது சிறந்த தன்மைகள் இவையிவை என உணர்ந்து கொள்ள நம்மனோர்க்குப் பெரிதும் துணை புரிகின்றது.

## சைவப்பயிர் வளர்த்த சான்றோர் :

நம்பியாரூரர், திருநெறி இயக்கத்தின் மாபெருந்தலைவர்களுள் ஒருவர். திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் தொடங்கி நடத்திப் பரப்பிய திருநெறி இயக்கத்தினை, அவர்களுக்குப் பின்னர்த் தலைவராகப் போந்து, அவர்தம் அடிச்சுவட்டில் நன்கினிது காத்து வளர்த்து, என்றும் நின்று நிலவுமாறு செய்தருளிய பெருந்தகையாளர் நம்பியாரூரரே யாவர்! தொல்காப்பியர், திருவள்ளுவர் போன்ற சான்றோர்கள் அறிவு வெளியில் நின்று தனித்திருந்து ஆராய்ந்து தத்தம் நூல்களை இயற்றித் தமிழ்த் தொண்டாற்றிப் போந்தனர். ஆனால், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் முதலிய சமயாசிரியர்கள் தாம், முதன் முதலில் மக்களோடு மக்களாகக் கலந்து பழகி, பல்லாயிரக்கணக்கான மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் பெற்று, நாட்டு மக்களிடையே ஒரு மாபெரும் இயக்கத்தினைத் தோற்றுவித்துச், சங்ககாலத்திற்குப் பின்னர் இடைக்காலத்தில் தமிழ் நாட்டிற்கு நேர்ந்த, எத்தனையோ பல கேடுகளையெல்லாம் நீக்கிப் போக்கித் தமிழகத்திற் புதிய

தொரு பெரும் புரட்சியும் மறுமலர்ச்சியும் விளையுமாறு செய்தருளினர். இஞ்ஞான்றை அரசியற் புரட்சிகளைவிட நால்வர் பெரு மக்கள் நிகழ்த்திய அருளியற் புரட்சி, எத் தனையோ பல மடங்கு ஏற்றமுடையதாகும்! அத்தகைய திருநெறி அருளியற் புரட்சி இயக்கத்தின் வளர்ப்புத் தந்தையாகவும், மாபெருந்தலைவராகவும், வரலாற்றாசிரியரா கவும் விளங்கிப் பெருந்தகுதி பொருந்திய பெருந்தகையாளர், நமது நம்பியாரூரர் பெருமான்! சுருங்கக் கூறல் வேண்டின், வளமிழந்து வறண்டு கடந்த இடைக் காலத் தமிழ் நிலத்தைப் பண்படுத்திப், புன்னெறிக்களை எடுத்துப், பக்திவிதை விதைத்துத், திருநாவுக்கரசரும் திருஞான சம்பந்தரும் சென்றனராக, அதற்கு அன்பு நீர் பாய்ச்சிப் பாதுகாத்துச் சைவப் பயிரா கத் தழைத்தோங்கி வளருமாறு செய்தரு ளியவர், நம்பியாரூரர் பெருமானே யாவர் என, நாம் ஒருவாறு கூறி முடிக்கலாம்.

"படியில் நீடும் பத்திமுதல்
அன்பு நீரிற் பணைத்தோங்கி
வடிவு நம்பி யாரூரர்
செம்பொன் மேனி வனப்பாகக்
கடிய வெய்ய இருவினையின்
களைகட் டெழுந்து கதிர்பரப்பி
முடிவி லாத சிவபோகம்
முதிர்ந்து, முறுகி விளைந்ததால்"

என ஆசிரியர் சேக்கிழார், இவ்வுண்மை யினை அழகுற விளக்கியிருத்தல் காணலாம்.

முடிவுரை :

நம்பியாரூரரால் தமிழ் மக்கள் அடைந் துள்ள நன்மைகளுக்கு அளவேயில்லை! அவர் அருளிச் செய்த திருத்தொண்டத் தொகை ஒன்றினால் மட்டுமே, தமிழ் நாடு எண்ணிறந்த பல நன்மைகளை எய்தியுள்ள தெனலாம். சேக்கிழாரடிகள் திருத்தொண் டத் தொகையின் சிறப்பினைப் பலவிடத்தும் பாராட்டியுரைத்திருத்தல், இதனை வற்புறுத் தும். எனவே, திருத்தொண்டத் தொகை யினை அருளிச் செய்தவர் என்பதொரு காரணமே, "நம்பியாரூரர் நாம் தொழும் தன்மையார்" என்று நம்மனோர் நன்கினிது துணிந்துணர்ந்து கொண்டு, வணங்கி யுய்தற்குச் சாலும்!

"நேசம் நிறைந்த உள்ளத்தால்
நீலம் நிறைந்த மணிகண்டத்து
ஈசன் அடியார் பெருமையினை
எல்லா உலகும் தொழஎடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டத்
தொகைமுன் பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல்வணங்க
வந்த பிறப்பை வணங்குவாம்!"

—சேக்கிழார்.

[அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்தின், மூன்றாம் ஆண்டு விழாவில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிப் பெரு மண்டபத்தில், திரு ம. ஸ்ரீகாந்தா, O.B.E., C.C.S. அவர்களின் தலைமையில், 2—6—68 ஞாயிறன்று நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது.]

—ஆசிரியர்.

---

பேரூரும் பரவைமனப் பிணக்கறஎம் பெருமானை
ஊரூரும் பலபுகல ஓர்இரவில் தூதன்எனத்
தேரூரும் திருவாரூர்த் தெருவுதொறும் நடப்பித்தாய்!
ஆரூர! நின்பெருமை அயன்மாலும் அளப்பரிதே!

—இராமலிங்க அடிகளார்.

# தமிழ்நாடு தெய்விகப் பேரவை

தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் நிர்வாகக் குழுக்கூட்டம், திருச்செந்தூரில் மே 31, ஜுன் 1 ஆகிய இருதினங்களில் சிறப்புற நடைபெற்றது. திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள், தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைச் சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள், மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞான சம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள், குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள், காஞ்சி தொண்டை மண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள், திருப்பனந்தாள் காசிமடம் ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள், கோவைச் சிரவணபுரம் ஸ்ரீகௌமாரமடம் ஸ்ரீலஸ்ரீ சுந்தர சுவாமிகள், கோவை பேரூர்ச் சாந்தலிங்கர் ஆதீனம், ஸ்ரீலஸ்ரீ இராமசாமி அடிகள், ஆகிய திருமடங்களின் தலைவர்கள் கலந்து கொண்டார்கள்.

பேரவையின் துணைத்தலைவரும், நமது அறநிலைய ஆணையருமாகிய திரு ஆ. இராதா கிருஷ்ணன், M.A. B.L., அவர்கள் கூட்டத்திற் கலந்து கொண்டு, அதனைத் திறம்பட நடத்தி வைத்தார்கள். அவருக்கு உறுதுணையாகத் துணை ஆணையர்கள் திரு கே. இராஜா B.A.B.L., திரு வி. பக்கிரி சங்கர் M.A. B.L., திரு டி. என். சிங்காரவேலு B.A. B.L., திரு ஏ. வெங்கடாசலம் B.SC., B.L., ஆகியவர்களும் கலந்துகொண்டு, பேரவையின் நிர்வாகக் குழுக்கூட்டம் சிறப்புற நடைபெறப் பெரிதும் உதவி புரிந்தார்கள்.

31—5—68 மாலை 6½ மணிக்கு மகாசந்நிதானங்களின் ஊர்வலம், மேளதாளத்துடன் பொதுமக்களும் திரிசுதந்தரர்களும் பெருந்திரளாகப் புடைசூழ, குளிக்கரை திரு. பிச்சையப்பா அவர்களின் நாதசுர இன்னிசையுடன், திருச்செந்தூரின் நான்கு இரதவீதிகளிலும், மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

திருச்செந்தூர்க் கோயிலின் ஷண்முகவிலாசத்தில், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கள் பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்கப்பெற்று, சுவாமி தரிசனம் செய்தனர். திரு சிவ. ராம. அ. நடராஜ முதலியார், திரு எஸ். கே. இராமச்சந்திர தேவர், திரு எஸ். கணேச நாடார், திரு ஆ. நல்லகண்ணு ஆகிய அறங்காவலர்களும், நிர்வாக அதிகாரி திரு வி. எஸ். கோதண்டபாணி B.SC., B.L., அவர்களும், மிக்க சிறப்பான ஏற்பாடுகள் செய்திருந்தனர்.

திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், திருச்செந்தூர் முருகனுக்கு முத்துக்களால் செய்யப்பெற்ற அழகிய விலையுயர்ந்த மயில் ஒன்றைக் காணிக்கையாகச் செலுத்தினார்கள்.

பின்னர், செந்திலாண்டவன் கலையரங்கத்திற்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கள் எழுந்தருளினர். தேவஸ்தானத்தின் சார்பில் திரு சிவ. ராம. அ. நடராஜ முதலியார், திரிசுதந்திரர்கள் சார்பில் திரு சரவணமுத்து பாகவதர், போற்றிமார் சார்பில் திரு டி. எஸ். சொக்கலிங்கம் பிள்ளை, சிவாசாரியர்களின் சார்பில் திரு வி. கே. ஈசுவரபாகவதர், திரு சு. திருவாரியார் ஆகியோர் சிறப்பு வரவேற்புரைகள் வாசித்தளித்தனர். சைவ வேளாளர் ஐக்கியச் சங்கச் சார்பில் திரு டி. வி. ஆறுமுகம் பிள்ளை, திருநெல்வேலி தட்சிணமார் நாடார் சங்கச் சார்பில் திரு டி. எஸ். இராஜா பலவேச முத்து நாடார் ஆகியோர், மாலைகள் அணிவித்தனர். திரு ஏ. ஆர். சுப்பையா முதலியார், எம். எல். ஏ., அவர்களும் கூட்டத்திற் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் தலைவராக மூன்றும் முறையும், தருமபுர ஆதீனத் தலைவர் **ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம்** அவர்கள், அனைவராலும் ஒருமனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். திருக்குறுங்குடி **ஸ்ரீஜீயர் சுவாமிகள்** அவர்கள், விசேஷப் பிரதிநிதியின் மூலம் அனுப்பியிருந்த பொன்னுடையும் மலர்மாலைகளும், பேரவையின் தலைவர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்களுக்குத், தவத்திரு **குன்றக்குடி அடிகளார்** அவர்களால், போர்த்தி அணிவிக்கப்பெற்றன.

ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானங்களின் அருளாசிகளுக்குப் பின்னர், பேரவையின் துணைத் தலைவராகிய ஆணையர் திரு **ஆ. இராதாகிருஷ்ணன்** அவர்கள், முடிவுரை நிகழ்த்தினர்கள். அறங்காவலர் திரு **ஆ. நல்லகண்ணு** அவர்கள் நன்றியுரை நவின்றார்கள்.

கண்காணிப்பாளர் திரு. பாலசுப்பிரமணியம், ஆய்வாளர் திரு. தருமலிங்கம், பேஷ்கார் திரு. கள்ளபிரான் ஆகியவர்கள், கோயிலின் சார்பில் நல்ல ஏற்பாடுகள் செய்திருந்தனர். திரு. நமச்சிவாய ஓதுவார், திரு. சோமசுந்தர தேசிகர், திரு. சுவாமிநாத தேசிகர் ஆகியவர்களின் திருமுறை இசையுடன் விழா இனிது நிறைவேறியது.

திருச்செந்தூரில் பேரவையின் கூட்டம் இனிது நிறைவெய்திய பின்னர், எல்லா ஆதீனத் தலைவர்களும், *1—6—68* மாலை திருநெல்வேலிக்கு எழுந்தருளினர். அங்குள்ள தருமபுர ஆதீன மடத்தில் இருந்து, அன்று மாலை அறநிலைய ஆணையர் திரு **ஆ. இராதா கிருஷ்ணன்,** M.A., B.L., அவர்கள் தலைமையில், கோயில் மரியாதையுடனும், திரு ஏ. கே. சி. நடராசன் கிளாரினெட் வாத்திய இசை முழக்கத்துடனும், ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானங்கள் ஊர்வலமாக ஸ்ரீசாலைக் குமாரசாமி கோயிலுக்குப் பூர்ண கும்ப மரியாதைகளுடன் சிறப்புற அழைத்துச் செல்லப்பெற்று, சுவாமி தரிசனம் செய்தனர்.

அதன் பின்னர், திரவியம் த்ாயுமானர் இந்துக் கல்லூரியின் அலங்கார மண்டபத்திற்குத் தேவார திருவாசகத் திவ்வியப் பிரபந்தங்கள் முழங்க, ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானங்கள் எழுந்தருளினர். திரு **கே. இராஜா,** B. A. B. L., அவர்கள், வரவேற்புரை கூறினர்கள். பல தேவஸ்தானங்கள் சங்கங்கள் ஆகியவைகளின் சார்பில், வரவேற்புரைகள் வழங்கப்பெற்றன; மலர்மாலைகள் சூட்டப் பெற்றன.

அறநிலைய ஆணையர் அவர்கள், தமது துவக்க உரையில், பேரவையின் நோக்கங்களையும் செயல் திட்டங்களையும் விளக்கியதுடன், கிராம சங்கங்கள் அமைத்தல், வார வழிபாடுகள் நடத்துதல், மன்னன்பந்தலில் அன்பு இல்லமும், செங்கற்பட்டில் கருணை இல்லமும் தொடங்க இருத்தல், தோத்திரத் திரட்டுகள் சமயப் பிரசார நூல்கள் வெளியிடுதல், பள்ளிச் சிறுவர்களுக்கு நல்லொழுக்க நீதிபோதனை அளித்தல், பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் திருக்குறள் முதலியவற்றை இலவசமாக வழங்குதல் போன்ற பணிகளைப் பேரவை செய்து வருவதையும், செய்யத் திட்டமிட்டு இருப்பதையும் பற்றி, விரிவாக எடுத்துரைத்தார்கள்.

மகா சந்நிதானங்கள் எண்மரும் நிகழ்த்திய அருளாசியுரைகளுக்குப் பின்னர், நெல்லை மாவட்டத் தெய்விகப் பேரவை உறுப்பினர் திரு. **சோமசுந்தரம்** அவர்கள் நன்றிகூற, கடவுள் வாழ்த்துடன் கூட்டம் இனிது நிறைவுற்றது.

நெல்லை உதவி ஆணையர் திரு. **வீரபாகு,** B.SC., B.L., அவர்கள் தலைமையில், அறங்காவலர்களும் நிர்வாக அதிகாரிகளும், கூட்டம் சிறப்புற நிகழப் பெரிதும் துணை புரிந்தனர்.

“ மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்
துதிசெயும் நாயன்மார் தூய சொல்மலர்ப்
பொதிநலன் நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே ”

—ஆசிரியர்.

# திருப்பாவைச் செழும்பொருள்

(முற்றொடர்ச்சி)

கூடாரை வெல்லும்சீர்க்
  கோவிந்தா! உன்தன்னைப்
பாடிப்பறைகொண்டு
  யாம்பெறு சம்மானம்
நாடு புகழும்
  பரிசினுல் நன்றாகச்
சூடகமே தோள்வளையே
  தோடே செவிப்பூவே
பாடகமே என்றனைய
  பல்கலனும் யாம் அணிவோம்;
ஆடை யுடுப்போம்;
  அதன்பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து
  முழங்கை வழிவாரக்
கூடியிருந்து
  குளிர்ந்(து) ஏலோ ரெம்பாவாய்!

**கூடாரை வெல்லும்:** பரசுராமன், இரு பத்தொருபடிகால் க்ஷத்திரியரை வென்ற எனக்கு ஒரு க்ஷத்திரிய புத்திரன் எதிரோ? என்று பெருமானை வெல்ல நினைத்து வந்து, தன் கையில் வில்லை அவர் கையிலே கொடுத்து, நான் பிராம் மணன் என்று வணங்கிச் சென்றான். இராவணன் இந்திராதிகளை வென்ற எனக்கு ஒரு மனிதன் எதிரோ என்று இருக்க, திருவடியை இட்டும் அதன்பின் அங்கதனை இட்டும், பின்பு வில் போகட்ட அளவில் 'இன்று போய் நாளைவா' என்னும் இத்தனையும் சொன்ன இடத்தில், 'வணங் கலில் அரக்கனன' பின்பு ஆந்தனையும் பார்த்தோம், என் செய்வோம் என்றாய்த்து கொன்றது. ஒருபடியாலும் கூடேன் என் றவனையிறே வென்றது; கூடுவேன் என்ற விபீஷணனுக்கு வில்வெட்டியிறே செய்தது.

கூடாரை வெல்லுமாபோலே கூடினாற் குத் தான் தோற்குமித்தனை. 'நீ சொல் லிற்றுச் செய்வேன்' என்ற பாண்டவர் களுக்கு 'எல்லிப் பகல் என்னாது' எப் போதும் தூத்ய சாரத்யாதிகளைப் பண் ணித் திரிந்தான்.

**வெல்லும் சீர்:** எல்லாரையும் வெல்லு வது குணத்தாலே. கூடுவாரைச் சீலத் தாலே வெல்லும், கூடாதாரை வீரத் தாலே வெல்லும்.

வீரம் அம்புக்கு இலக்காக்கும்; சீலம் அழகுக்கு இலக்காக்கும். அம்புக்கு இலக்கு ஆனாரை மருந்திட்டு ஆற்றலாம்; சீலமும் அழகும் நின்று ஈராநிற்கும். 'ஈர் கின்ற குணங்கள்' 'தாமரைக் கண்கள் கொண்டு ஈர்தியாலோ!'. அம்பு தோல் புரையே போம், அழகு உயிர்கொலையாக் கும்.

'நலமுடையவன்' என்று 'தொழுதெழு' என்றாரிறே குணங்களினுடைய எடுப்புக் கண்டு. அறிவில்லாதாரை எல்லாம் அறிந் தவர் ஆகும்படி செய்யும்; எல்லாம் அறிந் தவரை 'எத்திறம்' எனும்படி பண்ணும்.

**கோவிந்தா:** 'கூடுவோம் அல்லோம்' என்கிற கொள்கை இல்லாத மாத்திரத்தில் கூடுவோம் என்ன அறியாதாரையும், காத் தருளுமவன் அன்றோ. பொருந்தோம்

என்னும் தீயநினைவும் இன்றி, காத்தருளி னுலும் செய்த உதவி பற்றிய சிந்தனை யும் அற்று இருக்கும் பசுக்களோடு பொருந்துமவனே!

**உன் தன்னைப்பாடி :** இரண்யபுரம் போலே இவன்பேர் சொல்ல ஒட்டுவார் இல்லைபோலே காணும் பண்டு. பிற்பாடு இவர்கள் கோவிப்பர் என்று தவிர்ந்த இழ வெல்லாம் சந்நிதியிலே பாடப் பெறுகை யாலே தீரப்பெற்றது. நாப்படைத்த பயன் அடையப் பெற்றோம். 'உன்னைப்பாடி' என்னுதே, 'உன் றன்னைப் பாடி' என்றது அத்தலை இத்தலை ஆவதே, உன்பணியை நாங்கள் ஏறிட்டுக்கொள்வதே என்றற்கு.

**பறைகொண்டு :** 'பாடிப்பறை கொண்டு' என்று அடியிற் சொன்னபடியே ஊரார் இசைந்த பறையைக் (நோன்பை)க் கொண்டு. ஊருக்கிறே பறை (நோன்பு); தங்களுக்குப் பிராப்யம் (பலன்) இறே.

**யாம் :** உன்னைப் பற்றினவர்களுக்குப் பேறுதப்பாது என்கிற உறுதி உடையோ மான நாங்கள்; தேவகீ புத்ர ரத்னம் ஆன உன் வாசி அறிந்து உன்னைச் சரண் அடைந்த நாங்கள்.

**பெறு சம்மானம் :** என்றும் ஊரார் காரியமேயாக ஒண்ணுது. எங்களுடைய மனவிருப்பமும் நிறைவேறப்பெற வேணும். 'வெளித்திரு முற்றத்திலே' பிரசாதம் அவ் வளவிலே வர, 'யாம் பெறு சம்மானம் வந்தது' என்றார் பட்டர்.

**நாடு புகழும் பரிசினுல் :** அனுதிகாலம் எல்லாராலும் பட்ட அவமானம் மறக்கும் படியாக ஒருவன் கொடுத்த படியே! சிலர் பெறும்படியே! என்று நாட்டார் கொண் டாடும்படியாக வேணும்; 'பாரோர் புகழ' என்னும் படியே தலைக்கட்ட வேணும்.

கிருஷ்ணனும் ஸ்ரீ சத்யபாமைப்பிராட்டி யும், அர்ச்சுநனும் திரௌபதியுமாகக் கால் மேல்கா லேறிட்டுக் கொண்டிருக்க, ஸஞ்ஜயன் திருவாசலிலே வந்தானென் றறிவிக்க கிருஷ்ணன் அருளிச் செய் கிறுன். "நம்முடைய இருப்புக் கண்டால் உகப்பானும், உகவாதார் மண்ணுண்ணும் படி இவ்விருப்பைச் சொல்ல வல்லானும் ஒருவன், புகுர விடுங்கோள்'' என்ன; அவ னும் புகுந்து கண்டு அப்படியே போய், துரியோதனனுக்குக் 'கெடுவாய்! அவர்கள் இருப்புக் கண்டேனுக்கு உன் காரியம் கெட்டது கிடாய்' என்றுனிறே.

சுகஸாரணர்கள் சென்று இராவண னுக்கு "அவருடைய ஓலக்கத்தில் மதிப்பும் அவருடைய வீரப்பாடும் கண்டோமுக்கு உனக்கு ஒரு குடியிருப்புத் தேடிக்கொள்ள வேண்டியிருந்தது; ஊற்றுமாருதே நித்ய மாய் நடக்கிற ஐச்வர்யத்தை யுடையராய் உனக்கு வரம்தந்து உன் கையாலே தகர்ப் புண்ணு மவர்களைப் போலன்றிக்கே, உனக்கு முடிதந்தார்க்கும் முடிகொடுத்த ஈசன், உன் தம்பிக்கு இலங்கையைக் கொடுத்தான்; வாநரங்களும் ஆர்த்துக் கொண்டது'' என்று சொன்னார்களிறே. இப்படி தன்னை ஆச்ரயித்தாரை நாடு புகழும்படியிறே வாழ்விப்பது.

**நன்ருக :** இந்திரன் வரக்காட்டின ஆரத்தைப் பெருமாளும் பிராட்டியும் கூட இருந்து திருவடிக்குப் (அநுமானுக்குப்) பூட்டினுற்போலே பூணவேணும்.

**சூடகமே :** முதலில் தொடும் கைக்கு இடும் ஆபரணம். பரமப் ப்ரணயி ஆகை யாலே தன் தலையிலே வைத்துக்கொள் ளும் கை. 'அடிச்சியோம் தலைமிசை நீ யணியாய்' என்று அவர்களுக்கு இவன் சொல்லுமாப்போலே சொல்லி, மார்பினும் தலையிலும் வைத்துக்கொள்ளும் கைக்கு இடும் சூடகம். 'வெள்ளி வளைக்கை பற்ற' என்கிறபடியே அவனுக்கே உரியவர்க ளாகப் பிடித்த கைகளையிறே முதலில் ஆபரணம் பூட்டுவது.

**தோள்வளையே :** கையைப் பிடித்த பிறகு, அணைக்கும் தோள்களிலே கிடந்து அவன் கழுத்திலே உறுத்தும் ஆபரணம். அவனது நாணினுடைய தழும்பின் சர சரப்பு இவர்தம் தனங்களுக்கு இன்புறுத்து மாபோலே, இவர்களுடைய வளைத்தழும் பும் அவன் தோளுக்கு இனிமை தருவன

வாகும். மெலியும் காலத்தில்இறே வளை பெருது ஒழிவது, இப்போது அணைக்கிற காலம் இறே.

**தோடே :** அவனுடைய காதணிகள் அவன் தோள்களுக்கு அலங்காரமானுற் போலே, இவர்களுடைய தோளும் செவிப் பூவும் தோள்களுக்கு அலங்காரமாயிறே இருப்பது. பண்டே தோடிட்டாலும் அவன் இட்டாற்போலே இராதிறே.

**செவிப்பூவே:** அணைத்தபிறகு முகர்தற்கு ஏற்ற இடம்.

**பாடகம் :** அணைத்துத் தோற்றவர்கள் விழுந்து பிடிக்கும் காலுக்கு ஆபரணம்.

**என்று அனைய பல் கலனும் :** இவ்வள வில் இருந்து எண்ணுமது அன்றே. பருப் பருத்தன சிலவற்றைச் சொன்னேம் இத் தனை. 'பலபலவே ஆபரணம்' என்னக் கடவதிறே.

**யாம் அணிவோம் :** ஆபரணங்களுக்கு அழகு கொடுக்கவல்ல அவயவங்களிலே கிடந்து தானும் நிறம்பெற்றுப் பூட்டினவர் தானும் நிறம்பெற்றுப் போம்படி வடிவு படைத்த நாங்கள்.

இவ்வெல்லை வரும் அளவிறே 'மலரிட்டு நாம் முடியோம்' என்றது. 'நாம் முடியோம்' என்ருல் பூட்டமாட்டான்; 'அணிவோம்' என்ருல் பூட்டாது இருக்கமாட்டான். அவன் அலங்கரிக்கைக்கு இவர்கள் அனு மதியே அமையும். ஒருவரை ஒருவர் மாறி மாறி அலங்கரித்துக் கணிசிக்கிருர்கள். 'நாடு புகழும் பரிசினுல் யாம் அணிவோம்'; 'நிறை புகழ்ஆய்ச்சியர்' 'அணியிழை ஆய்ச்சியர்' என்கிற இரண்டும் பெற வேணும் என்கிருர்கள்.

**ஆடை உடுப்போம் :** 'கூறை உடுக்கும் அயர்க்கும்' என்று வகை சொல்லாதபடி அரையிலே தொங்கும்படி உடுக்கை. பண்டு உடுக்கார்களோ என்னில், அவன் உடுத்தி விடாதது உடையன்று என்றிறே இருப்பது. அவன் திருப்பரியட்டம் இவர் கள் அரையிலே ஆம்படி கூறை மாற வேணும், என்றுமாம். நோன்பை முடிக் கையாலே நல்ல பரியட்டம் உடுக்கை என்னுமாம். 'உடுத்துக்களைந்த' என்னும் அவர்களிறே இவர்கள். வியர்வை மணத் தோடு கூடியதாய் அவன் உடுத்து முசிந்த ஆடை என்றுமாம். இவன் தூரவாசியான போதே 'கோவிந்தா' என்று புடவை பெறு கிறவள், இவன் சந்நிதியிலே சொன்னுல் புடவை பெறக் கேட்கவேணுமோ.

**அதன்பின்னே :** 'பீதக ஆடை உடுத் தால்' கலத்தது உண்ணும் அத்தனையிறே. புறம்பே ஒன்றைப் பற்றினுல் அவையும் இல்லை, அவனும் கிடையான்; அவனைப் பற்றினுர்க்கு அனைத்து நலமும் உண்டு.

**பாற்சோறு மூட நெய் பெய்து :** 'நெய்யுண் ணேம்' என்கிற விரதங்கள் முடிந்தது. இவர்கள் விரதத்துக்காக நெய்யும் பாலும் தவிர்ந்தார்கள். இவர்கள் தவிர்ந்ததனுல் கண்ணனும் அவற்றைத் தவிர்ந்தான். அதனுல் ஆயர்பாடியில் நெய்க்கும் பாலுக் கும் போக்கில்லை. நெய்ப்பெருமையாலும் பாலின் பெருமையாலும், நீரில் ஆக்காதே பாலில் ஆக்கி, நெய்யை நிரம்பவிட்டு, நெய்யிடையிலே சோறுண்டோ என்று தடவி எடுக்கவேண்டும்படி இருக்கை. இத்தால் பகவத் சம்பந்தம் உள்ள திரு வாய்ப்பாடியில் சம்ருத்தி (நிறைவு)எல்லாம் பிரியமாய் இருக்கிறபடி.

**முழங்கை வழிவார :** நம்பி திருவழுதி வளநாடு தாஸர், 'நெய்வாயிலே தொங் காதோ' என்ன; "கிருஷ்ண ஸந்நிதியாலே த்ருப்தைகளாயிருக்கிறவர்களுக்குச் சோறு வாயில் தொங்கிலன்ருே நெய் வாயில் தொங்குவது" என்று **பட்டர்** அருளிச் செய்தார். எதிர் மறையால் 'நெய் யுண்ணேம் பாலுண்ணேம்' என்று முன்பு சொன்னவர்கள், இன்று ஆசைப்படு கிருர்கள்.

**கூடியிருந்து :** பசிகெட உண்கிருர்கள் அல்லர், எல்லாரையும் கூடித்தொட்டுக் கொண்டிருக்கையிலே நோக்கம். பிரிந்து பட்ட கவலைதீரக் கூடிச் சேர்ந்து கொண் டிருக்கையேபயன், உண்ணுதல்பயனன்று.

வாசல்கள் தோறும் அலைந்து எழுப்பிக் கொண்டு திரிந்த கவலையெல்லாம் தீர இருந்து என்றுமாம்.


**குளிர்ந்து :** பிரிந்து கமர் பிளந்த நெஞ்சுகள் வவ்வல் இடும்படிக் குளிர்ச்சியுற்று. 'நம்பெருமாள் திருநாள்' என்று ஒரு பெயரை இட்டு, ஸ்ரீவைஷ்ணவர்களைத் திரட்டிக் காணுமாபோலே, ஒருவருக்கொருவர் போக்கியமாம் இறே. "பிரம்ம ஞானி பரமாத்மாவை அடைகிறான். பரமாத்மாவை எவன் அறிகிறானே, அவன் பரம பதத்தில் எல்லாக் குணங்களையும் முற்றுணர்வினனாகிய பரமாத்மாவோடு கூட, அனுபவிக்கிறான்" என்கிற சுருதிப் பொருள், இப்பாட்டில் சொல்லப் பெறுகின்றது.

இப்பாடலில் சூடகம் காப்பையும், தோள் வளை திருவிலச்சினையையும் குறித்தது. தோடு திருமந்திரம், செவிப்பூ துவயம், பாடகம் சரமச்லோகம் என்பவற்றை உணர்த்தின. திருமந்திரம் துவயம் சரமச்லோகம் என்னும் இம்மூன்றாலும், ஞான பக்தி வைராக்கியங்களைக் குறித்தபடியாயிற்று. திருமந்திரம் ஞானபரம்; துவயம் பக்திப் பிரதானம். சரமச்லோகம் வைராக்யப் பிரதானம்.

பகவத் சம்பந்தம் இல்லாமல் ஞானபக்தி வைராக்கியங்கள் உண்டானாலும் அபாயமேயிறே பலிப்பது. பௌத்தனுக்கும் ஞான பக்தி வைராக்கியங்கள் உண்டிறே.

'ஆடை உடுப்போம்' என்றது இறைவனுக்கு நாம் அடிமை என்னும் உணர்வாகிய சேஷத்வ ஞானத்தையும்; பாற்சோறு என்றது பகவத் கைங்கர்யத்தையும்; நெய் பெய்தல் என்றது 'பாரதந்திரியம்' என்னும் அடிமைத் திறத்தினை வெளியிடுதலையும் உணர்த்திற்று. (27)

(தொடரும்.)



திருமழிசைக் கோயிலும் குளமும்

# செய்திச் சுருக்கம்

இலங்கை அரசின் நிலம்-நீர்-மின்-உணவுத்துறைகளின் நிரந்தரச் செயலாளர் திரு ம. ஸ்ரீகாந்தா, O.B.E., C.C.S., அவர்கள் கடிதம் எழுதி வேண்டிக்கொண்டபடி, நமது அறநிலைய ஆணையர் திரு. ஆ. இராதாகிருஷ்ணன் M.A.B.L.. அவர்கள் அளித்த அன்பு அனுமதியுடன், 'திருக்கோயில்' இதழாசிரியர் திரு ந. ரா. முருகவேள் M.A.,M.O.L., அவர்கள், அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்தின் சார்பில் நடைபெற்ற 'சேக்கிழார் விழா'வுக்குச் சென்று கலந்து கொண்டார்கள்.

31-5-68 யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்தில் வரவேற்பு. திரு. மு. வைரமுத்து J.P., திரு. இ. வைத்தியலிங்கம் B.E., திரு. க. அம்பிகைபாகன் B.A., திரு. சோமசேகரம் M.A Ed., திரு. இரகுநாத முதலியார் M.s.c, திரு. சிவகுருநாதன் M.A. திரு. இ. மகாதேவன் முதலிய பெருமக்கள் பலர் வந்திருந்தனர்.

1-6-68 அன்று, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிப் பெருமண்டபத்தில், திரு. மு. வைரமுத்து J.P., அவர்கள் தலைமையில் 'சேக்கிழார் விளக்கும் செம்பொருள்' என்பது பற்றியும்; 2-6-68 அன்று திரு. ம. ஸ்ரீகாந்தா O.B.E.,C.C.S., அவர்கள் தலைமையில் 'நம்பியாரூரன் நாம்தொழும் தன்மையான்' என்பது பற்றியும்; சொற்பொழிவு ஆற்றினார்கள். அந்நாட்களில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, பரமேசுவரா கல்லூரி, சைவப்புலவர் சங்கம் ஆகியவற்றிலும், முறையே 'திருமுறைகளின் சிறப்பு' 'தண்டமிழின் மேலாந்தரம்' 'சாரம் கொண்ட சைவ சித்தாந்தம்' என்னும் தலைப்புகளில், ஆசிரியர் அவர்களால் மாணவர்களுக்கு விரிவுரைகள் நிகழ்த்தப் பெற்றன.

காரை நகர்ச் 'சைவமகா சபை'யின் பொன்விழாவில், ஆசிரியர் அவர்கள் கலந்து கொண்டு, 3-6-68 திங்கள் அன்று திரு. மு. ஞானப்பிரகாசம் B.A.,B.S.c., அவர்கள் தலைமையில் 'சைவமும் தமிழும்' என்பது பற்றியும்; 4-6-68 செவ்வாய் அன்று திரு. ஆ. தியாகராசா M.A., அவர்கள் தலைமையில் 'திருவாசகத் தேன்' என்பதுபற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

5-6-68 புதன் அன்று, சாவகச்சேரி இந்துக் கல்லூரியில், அதன் முதல்வர் திரு. மு. வைத்தியலிங்கம் M.A.E., அவர்கள் தலைமையில் 'தம்பிரான் தோழர்' என்பது பற்றியும்; அன்று மாலை ஈழநாட்டுப் பாடல்பெற்ற தலங்களுள் ஒன்றாகிய திருக்கேதீச்சுரம் கோயிலில் 'நால்வர் காட்டிய நன்னெறி' என்பது பற்றியும்; 6-6-68 வியாழன் அன்று திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பாடியருளிய திருக்கோணமலையில், ஸ்ரீமுத்துக்குமார சுவாமி கோயிலில், நகரமன்றத் தலைவர் திரு. சிவானந்தம் அவர்கள் தலைமையில் 'தேசம் உய்யவந்தவர்' என்பது பற்றியும், ஆசிரியர் அவர்களாற் பேருரைகள் நிகழ்த்தப் பெற்றன.

6-6-68 வெள்ளியன்று, மட்டக்களப்பு நகரில், கல்லடி உப்போடைச் சிவானந்த வித்தியாலயத்தின் விபுலானந்தர் மண்டபத்தில், ஸ்ரீமத் ஜீவனானந்தா அவர்கள் தலைமையில் 'சேக்கிழாரும் திருமுறைகளும்' என்பது குறித்தும்; ஆனைப் பந்தி ஸ்ரீவரசித்தி விநாயகர் கோயில் திருமுற்றத்தில், 'திருநாவுக்கரசர் சிறப்பு' என்பது குறித்தும் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. 8-6-68 சனி, 9-6-68 ஞாயிறு ஆகிய இருநாட்களிலும், கதிர்காமத் தல யாத்திரையும் தரிசனமும் நிகழ்ந்தன. அங்குள்ள ஸ்ரீஇராமகிருஷ்ண மடத்தில் இருந்து பெரும்பணி புரிந்து வரும் ஸ்ரீமத் சர்வாதீதானந்த சுவாமிகள் அவர்கள், வரவேற்று விருந்துபசரித்தும், வழிபாட்டிற்கு ஆவன செய்தும் பெருந்தண்ணளி புரிந்தார்கள்.

10-6-68 திங்களன்று, கொழும்பு வெள்ளவத்தை ஸ்ரீஇராமகிருஷ்ண நிலையத்தின்விவேகானந்தமண்டபத்தில்,ஸ்ரீமத் ஸ்ரீரங்கானந்த சுவாமிகள் அவர்கள் தலைமையில் காலையில் 'தமிழ் ஞானசம்பந்தர்' என்னும் தலைப்பிலும்; மாலையில் 'சேக்கிழாரும் சைவசித்தாந்தமும்' என்னும் தலைப்பிலும், சிறந்த விரிவுரைகள் நிகழ்த்தப்பெற்றன. ஸ்ரீசுவாமி அவ்யயானந்தா, ஸ்ரீபிரேமாத்மானந்தா ஆகியவர்கள் மிக்க கனிவுடனும் பரிவுடனும் விருந்துபசரித்தனர்.

அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்தின் செயலாளர், பேராசிரியர் திரு. க. கி. நடராஜன் B,O.L.,E., அவர்களும், புலவர் திரு. சி. செ. சோமசுந்தரம் அவர்களும், எல்லா இடங்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் பயணத்தின்போது உடன்வந்திருந்து உதவிகள் பல புரிந்தனர்.

செந்தமிழ் ஆர்வலரும் சிவநெறிப் புரவலரும் ஆகிய, சேக்கிழார் மன்றத்தின் தலைவர் திரு. ம. ஸ்ரீகாந்தா O.B.E.,C.C.S., அவர்கள், 11-6-68 செவ்வாயன்று காலையில், கொழும்பு ரத்மலானை விமான நிலையத்திற்கு வந்திருந்து, நன்றியும் வாழ்த்தும் கூறி, மிக்க அன்புடன் வழியனுப்பி வைத்தார்கள். —ஆசிரியர்.

# ஸ்ரீ ராமாநுஜர்

சேமநல் வீடும் பொருளும்
தருமமும், சீரியநற்
காமமும் என்றிவை நான்கென்பர்;
நான்கினும் கண்ணனுக்கே
ஆமது காமம்; அறம்பொருள்
வீடிதற் கென்றுரைத்தான்
வாமனன் சீலன், இராமாநுசன்
இந்த மண்மிசையே

—திருவரங்கத் தமுதனுர்.

**முன்னுரை :**

ஸ்ரீ வைஷ்ணவ சமயத்தின் ஆசாரியப் பெருமக்களில், மிகவும் தலைசிறந்த ஒருவ ராகத் திகழ்பவர் ஸ்ரீ ராமானுஜர் ஆவர். இவ்இருள்தரும் மாஞாலத்தைத் தெருள் தரு மாஞாலமாகச் செய்தருள்தற்குத் திருவவதரித்தவர் அவர்! 'கலியும் கெடும் கண்டு கொண்மின்' என்ற ஆழ்வார் பாசுரத்தை மெய்ப்பித்தற்காகத் தோன்றி யருளிய சான்ருேர் ஸ்ரீ ராமானுஜர் என லாம்! திருவாய்மொழி ஆயிரத்தையும் ஈன்றளித்த முதல்தாய் நம்மாழ்வார் என் ருல், அவற்றை உலகிற் பரப்பி வளர்த் துச் செழிப்பித்த இதத்தாய், இராமானுசரே எனப் பெரியோர்கள் போற்றியுள்ளனர். ஸ்ரீ வைஷ்ணவ வரலாற்றில், இவருக்குப் பெரிதும் சிறப்பும் முதன்மையும் கொடுக் கப்பெற்றுள்ளன. இவருக்கு முன்னர், 'பரம வைதிக சித்தாந்தம்' எனவே வழங் கப்பெற்றுவந்த வைஷ்ணவப் பெருஞ்சமய மானது, இவருக்குப் பின்னர் "எம்பெரு மானுர் தரிசனம்'' என்னும் சிறப்புப் பெயர் இட்டு வழங்கப்பெறுவதாயிற்று. எனின், இவர்தம் அருமை பெருமைகளை யாவரும் கருதி இனிதுணரலாம்.

**அவதாரம் :**

ஸ்ரீ ராமானுஜரைத் திருவனந்தாழ்வான் (ஆதிசேடன்) அவதாரம் என்றும், விஷ்வக் சேனர் அவதாரம் என்றும், பெரியோர்கள் சிறப்பித்துக் கூறுவர்.

"அடையார் கமலத் தலர்மகள்,
கேள்வன்கை ஆழிஎன்னும்
படையோடு நாந்தக மும்படர்
தண்டும்ஒண் சார்ங்கவில்லும்
புடையார் புரிசங் கமும்இந்தப்
பூதலம் காப்பதற்கென்
றிடையே இராமா நுசமுனி
ஆயின இந்நிலத்தே"

எனவரும் பாடலால், திருவரங்கத்தமுதனுர் இவரைத் திருமாலின் திருக்கைகளில் உள்ள ஐம்படைகளின் அவதாரமாகச் சிறப்பித்துப் பாடிப் போற்றியுள்ளார்.

**ஸ்ரீ பெரும்பூதூர் :**

ஸ்ரீ ஆளவந்தார் திருவடிகளில் ஆச்ர யித்திருந்த முதலிகளில் பெரிய திருமலை நம்பிகள் என்பவர் ஒருவர். அவர் திருமலை யில் திருவேங்கடமுடையானுக்குக் கைங் கர்யம் செய்துகொண்டு வாழ்ந்து வந் தவர். அவருக்குச் சகோதரிகள் இருவர் இருந்தனர். அவருள் மூத்தவளாகிய **பூமிப்பிராட்டியார்** என்பவர் ஸ்ரீ பெரும்பூ தூரில் **ஆசூரி கேசவப் பெருமாள்** என்ப வரை மணந்து வாழ்ந்து வந்தார். இளைய வளாகிய பெரிய பிராட்டியார், மழலை மங் கலம் என்னும் ஊரில் இருந்த **கமலநயன பட்டர்** என்பவரை மணந்து இல்லறம் நடத்தி வந்தார்.

**அவதார நாள் :**

தொண்டை நாட்டைச் சேர்ந்த ஸ்ரீபெரும்பூதூரில் ஆசூரிகேசவப்பெருமாள் என்னும் தந்தையாருக்கும், பூமிப் பிராட்டி யார் என்னும் தாயாருக்கும், சாலிவாகன சகம் 939-இல் பிங்கள ஆண்டு சித்திரைத் திங்கள், வளர்பிறைப் பஞ்சமிதிதி, திருவா திரை நாள் கூடிய நல்லோரையில், ஸ்ரீ ராமானுஜர் தோன்றியருளினர்.

"சங்கர பாஸ்கர யாதவ பாட்ட
பிரபாகரர் தங்கள் மதம்
சாய்வுற வாதியர் மாய்குவர்என்று
சதுமறை வாழ்ந்திடும் நாள் !
வெங்கலி இங்கினி வீறுநமக் கிலே
என்று மிகத் தளர்நாள் !
மேதினி நம்சுமை ஆறும் எனத்துயர்
விட்டு விளங்கிய நாள் !
மங்கையர் ஆளி பராங்குச முன்னவர்
வாழ்வு முளைத்திடு நாள் !
மன்னிய தென்அரங் காபுரி மாமலை
மற்றும் உவந்திடும் நாள்
செங்கயல் வாவிகள் சூழ்வயல் நாளும்
சிறந்த பெரும் பூதூர்ச்
சீமான் இளையாழ்வார் வந்தருளிய நாள்
திருவாதிரை நாளே !"

என ஸ்ரீ ராமானுஜர் திருவவதாரம் செய் தருளிய நாளின் சிறப்பை 'விசதவாக் சிகாமணி' ஆகிய மணவாளமாமுனிகள், புகழ்ந்து பாடிப் போற்றியிருத்தல் காண லாம்.

**நாமகரணம் :**

பெரிய திருமலை நம்பிகள், தமது சகோதரியார்க்கு மகப்பேறு வாய்த்த செய்தியினைச் செவிமடுத்துப் பூரிப்பு எய் தித் திருமலையினின்றும் ஸ்ரீ பெரும்பூ தூர்க்கு எழுந்தருளிப்போந்து, குழந்தை யின் திருமுகத்திற் பொலியும் தெய்விக ஒளியைக் கண்டு அகமும் முகமும் மலர்ந்து, இளையாழ்வான் (ஸ்ரீ ராமானுஜன்) என்னும் திருப்பெயரிட்டு, வாழ்த்திச் சென் றனர். அக்குழந்தை முறையே வளர்ந்து கல்வி பயின்று எல்லாக் கலைகளிலும் இணையற்ற தேர்ச்சி பெற்று, 'சொல்லார் தமிழ் ஒரு மூன்றும்; சுருதிகள் நான்கும்; எல்லையில்லா அறநெறியாவும் தெரிந்த வன்' எனும்படி விளங்குவதாயிற்று.

எனினும் 'குருவருளின்றித் திருவருள் இல்லை' என்பர் ஆதலின், கல்வியிற் கரை யிலாத காஞ்சிமாநகர்க்கு அணித்தேயுள்ள திருப்புட்குழி என்னும் தலத்தில் இருந்த, யாதவப்பிரகாசர் என்னும் வேதாந்த ஆசிரி யரை அடுத்து இராமானுஜர் சிலகாலம் வேதாந்த சாத்திரங்களைக் கேட்டுவந்தார். மழலை மங்கலத்திற் கமல நயன பட்டர் என்பவரை மணந்து வாழ்ந்துவந்த பெரிய பிராட்டியார் என்னும் இவர்தம் சிற்றன்னை யின் புதல்வர் கோவிந்த பட்டர் என்பவரும், இவரோடு ஒருங்கு சேர்ந்து யாதவப் பிர காசரிடம் வேதாந்த நூல்களை ஓதிவந்தார்.

**யாதவப் பிரகாசர் :**

யாதவப் பிரகாசர் மாயாவாத மதத்தைச் சேர்ந்த கொள்கையை உடையவர். ஆதலின் "சத்யம் ஞானம் அநந்தம் பிரம மம்" என்பன போன்ற வேதாந்தச் சொற் றொடர்களுக்குத் தமது மதத்திற்கு ஏற்பப் பொருந்தாத வகைகளில் பொருள்கூறி வரும் வழக்கம் உடையவராக இருந்தார். அதனைப் பொறுக்கலாற்றாத இராமானுஜர் இடையிடையே உண்மைப் பொருள்களைக் கூறி, இங்ஙனம் இருக்கலாகாதோ எனப் பணிவுடன் வினவுவார். அதனால் யாதவப் பிரகாசருக்கு இவர்பால் படிப்படியே அரு வருப்பும் அழுக்காறும் தோன்றலாயின.

ஒரு நாள் யாதவப் பிரகாசர் "தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீக மேவ மக்ஷிணி" எனவரும் வேதவாக்கியம் ஒன்றுக்கு, "இறைவன் குரங்கின் பின்புறம் போன்ற சிவந்த கண்களை உடையவன்" என்று பொருள் கூறினர். அதுகேட்டு இராமா னுஜர் அளவற்ற துக்கம் அடைந்தார். திருமகள்நாதனின் சிறந்த கண்களுக்கு உவமையாக, மிகவும் இழிந்த குரங்கின் பின்புறத்தையோ கூறுவது? இது பெரும் அபசாரமல்லவா? என்று கருதிச் சிந்தை மிக நொந்தார். அதற்கு "இறைவன் சூரி யனைக்கண்டு மலரும் செந்தாமரை மல ரைப் போன்ற, அழகிய சிவந்த கண்களை உடையவன்" என்பதே உரிய பொருத்த

மான பொருளாகும் அன்றே! எனப் பணிவுடன் கூறினர். யாதவப் பிரகாசர் அதனைக் கேட்டுச் சினமும் அழுக்காறும் கொண்டார். அதனல் இருவரும் பிரிய நேர்ந்தது.

### திருக்கச்சிநம்பி :

பின்னர்த் தன் தாயாரின் கருத்தின்படி, இராமானுஜர் காஞ்சியில் இருந்த திருக்கச்சிநம்பி என்பவரை அடைந்து, அவர்பாற் பக்தியுடன் பழகி ஒழுகி வந்தார். அவர் பணித்தபடி சாலைக்கிணற்றினின்று நீர் கொணர்ந்து, நாடோறும் தேவப்பெருமாளுக்குக் கொடுத்துப் பணிவிடைகள் செய்து வந்தார்.

இராமானுஜரின் திருவுள்ளத்தில் சில நினைவுகள் ஐயப்பொருளாக நிலவிவந்தன. அவற்றைப் பற்றிப் பெருமாளின் திருவுள்ளக் கருத்து யாது ? என்று அறிய அவர் விரும்பினர். பெருமாளிடம் தம் ஐயப்பாடுகளை விண்ணப்பித்து, அவற்றுக்குரிய விடைகளை அவர்பால் அறிந்து வரும்படி, இராமானுஜர் திருக்கச்சி நம்பிகளை வேண்டிக் கொண்டார். நம்பிகளும் அதற்கு இசைந்து, பெருமாளிடம் இராமானுஜர் கேட்டறிய விரும்பிய வினக்களைக் கூறினர். அதற்குப் பெருமாள் கூறிய மறுமாற்றத்தினை அறிந்துவந்து, திருக்கச்சி நம்பிகள் இராமானுஜருக்குப் பின்வரும் ஆறு வார்த்தைகளாகக் கூறினர்.

(1) பரதத்துவப் பொருள் யானே.

(2) சித்து அசித்து ஈசுவர பேதமே தரிசனம்.

(3) உபாயம் பிரபத்தியே.

(4) யாக்கையின் முடிவில் என்னை நினைத்தல் வேண்டுமென்பதில்லை.

(5) யாக்கையின் முடிவில் வீடுபேறு.

(6) இளையாழ்வான் பெரியநம்பியின் திருவடியைப் பற்றக்கடவன்.

என்பனவே அவையாகும்.

### ஆளவந்தார் :

இராமானுஜர் இவ்வாறு காஞ்சியில் இருந்து வருங்கால், ஸ்ரீரங்கத்தில் இருந்த ஆளவந்தார் திருமேனி நோவு சாத்தி 'சாயலொடு மணிமாமை தளர்ந்தேன் நான் இனி உனது வாயலகில் இன்னடிசில் வைப்பாரை நாடாயே' என்னும்படியான நிலைமையை எய்தியிருந்தார். அதனல் அவர் தமக்குப் பின் ஸ்ரீவைஷ்ணவ தரிசனத்தை வளர்த்துப் பரப்புதற்குரிய 'ஆம் முதல்வன் இவன்' என்று முன்னரே தாம் தம்திருவுள்ளத்தில் ஆய்ந்து தேர்ந்து வைத்திருந்த இராமானுஜரை அழைத்து வரும்படி, பெரியநம்பிகளை ஸ்ரீரங்கத்தினின்று காஞ்சிக்கு அனுப்பிவைத்தார்.

இராமானுஜரை அழைத்துக்கொண்டு பெரிய நம்பிகள் திரும்பும் முன்னரே, ஸ்ரீரங்கத்தில் ஆளவந்தார் திருநாடு அலங்கரித்து விட்டார். அவரைத் திருக்கரம்பன் துறையில், திருப்பள்ளிபடுத்த ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. அங்கிலையிற் சென்று சேர்ந்த இராமானுஜர், மிகவும் மனம் வருந்தினர். ஆளவந்தாரின் திருமேனியை அடிமுதல் முடிகாறும் நோக்கித் தொழுதார். அப்போது அவர்தம் திருக்கையில் மூன்று திருவிரல்கள் முடங்கியிருக்கக் கண்டார். ஆளவந்தார் திருவுள்ளம் விரும்பியபடி,

(1) பிரம்ம சூத்திரத்திற்கு விசிஷ்டாத்வைத மதக் கொள்கையின்படி சிறந்ததொரு பேருரை இயற்றுதல்.

(2) நம்மாழ்வாருடைய திருவாய்மொழிக்கு நயம்செறிந்த நல்ல விரிவுரை ஒன்று வகுத்தல்.

(3) வியாசர் பராசரர் எனும் முனிவர்கள் திறத்தில் செய்ந்நன்றி உணர்வு என்றும் நின்று நிலவி வரத்தக்க முறையில் ஏதேனும் ஒரு நற்செயல் புரிதல்.

ஆகிய மூன்றையும் தாம் செய்து முடிப்பதாக, இராமானுஜர் அனைவரும் அறிய உறுதி கூறினர். அதுகேட்டு, ஆளவந்

தாரின் முடங்கிய விரல்கள் மூன்றும் நிமிர்ந்தன. யாவரும் கண்டு மகிழ்ந்தனர்.

**பெரியநம்பி :**

பின்னர் இராமானுஜர் காஞ்சிபுரத்துக்கு மீண்டு வந்து, சிலகாலம் தேவப்பெருமாள் கைங்கரியத்தில் ஈடுபட்டு வந்தார். பெரிய நம்பிகளை அவர் மதுராந்தகத் தலத்தில், ஏரிகாத்த இராமபிரான் சந்நிதியில் சந்திக்க நேர்ந்தது.

(1) சங்கு சக்கர இலச்சினைகளைத் தோள்களில் தரித்தல்.

(2) நெற்றியில் திருமண் அணிதல்.

(3) அடியவர் என்பதற்குரிய பெயர் தரித்தல்.

(4) திருமந்திரத்தை உச்சரித்தல்.

(5) திருமகள் நாதனை ஆராதித்தல்.

ஆகிய பஞ்ச சம்ஸ்காரங்களையும், பெரிய நம்பிகள்பால் இராமானுஜர் பெற்று மகிழ்ந்தனர்.

**எதிராஜர் :**

இராமானுஜர், பெரியநம்பிகளைக் காஞ்சி புரத்திற்கு அழைத்துக் கொண்டுவந்து, தம்முடைய திருமாளிகையில் அவர் தமது குடும்பத்தினருடன் வாழ இடம் அளித்து, அவருடைய தளிகைக்கு வேண்டும் பொருள்களையும் அவ்வப்போது பெருக வழங்கி, அவர்பால் நுண்பொருள்கள் பலவும் கேட்டுணர்ந்து இன்புற்று வந்தார். அங்ஙிலையில் அவருக்குத் தமது இல்லற வாழ்வில் நாளடைவே உவர்ப்பு ஏற்படலாயிற்று. **தஞ்சமாம்பாள்** என்னும் தமது தேவியாரிடத்தில், அவர் மூன்று குற்றங்கள் நிகழக் கண்டார்.

(1) திருக்கச்சி நம்பிகள் பக்கலில் தமது திருவுள்ளத்திற்கு மாருக நடந்து கொண்டமை.

(2) ஒரு நாள் ஸ்ரீவைஷ்ணவர்க்கு உணவு அளிக்கும்படி தாம் நியமிக்க, அகத்தில் உணவு இருந்தும் இல்லை என்று பொய்கூறி மறுத்தொழித்தமை.

(3) தமது ஆசாரியராகிய பெரியநம்பிகளின் திருத்தேவியாரோடு மாருடிப் பூசலிட்டுப் பிணங்கியமை.

இம்மூன்று குற்றங்கள் கண்டு வெறுப்புற்ற இராமானுஜர் தம் இல்லற வாழ்வை நீத்துத் துறவற நெறியை மேற்கொண்டார். அதனல் அவருக்கு **இராமானுஜ முனி** என்றும், **எதிராஜர்** என்றும் பெயர்கள் வழங்கப்படலாயின. **முதலியாண்டான், கூரத்தாழ்வான்,** ஆகியோர் இவர்பால் மாணவராக வந்தடைந்தனர். கங்கை நீராடுங்கால் தம் உள்ளங்கையில் சிவலிங்கம் கிடைக்கப்பெற்றதனல் 'உள்ளங்கை கொணர்ந்த நாயனர்' என்னும் சிறப்புப் பெயர்பெற்று, திருக்காளத்தியில் சிவனடியாராக விளங்கியிருந்த **கோவிந்தபட்டர்,** 'தேவன் எம்பெருமானுக்கு அல்லால் பூவும் பூசனையும் தகுமே' என்னும் பாசுரத்துக்குத் திருமலைநம்பிகள் நிகழ்த்திய விரிவுரைகளைக் கேட்டு மனம்மாறினர்; வைணவர் ஆகித் **திருமலைநம்பிகள்**மூலம், இவர்பால் வந்து அடைந்தார். இக் கோவிந்தபட்டரே **எம்பார்** எனப் புகழ்ந்து ஓதப் பெறுபவராவார். முன்னர் இவருக்குக் குருவாக விளங்கிய யாதவப் பிரகாசரும், மனம்மாறிப் பின்னர் இவர் பக்கலில் மாணவராக வந்து அடைந்து உய்ந்தார்.

**உடையவர் :**

திருவரங்கப் பெருமாள் அரையர் என்பவர், ஸ்ரீரங்கத்தினின்று காஞ்சிக்கு வந்து திவ்யப் பிரபந்தப் பாடல்களை இன்னிசையுடன் பாடித் தேவப் பெருமாளை மகிழ்வித்து, அவர்தம் இசைவும் ஆசியும் பெற்று, இராமானுஜரைத் திருவரங்கத்திற்கு அழைத்துக் கொண்டு போய்ச் சேர்த்தார். பெரியபெருமாள் தமது திருப் பொலிந்த சேவடியை இவர்தம் சென்னி மேல் பொறித்து 'உபய விபூதிச் செல்வத்தையும் உமக்கும் உம்முடையார்க்கும் தந்தோம். இனி நம்முடைய கோவிலைத் திருத்திப் பணி கொள்ளக் கடவீர்' என்று பணித்தருளினர். அன்றுமுதலாக இவர்க்கு

**உடையவர்** என்னும் சிறப்பியற் பெயர் வழங்கத் தலைப்பட்டது. 'தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்தி வைத்தான் வாழியே' என்றபடி, நாள்விழா–பட்சவிழா–மாதவிழா– ஆண்டுவிழா என்னும் பலதிற விழாக்களும் செவ்விதின் நிகழும்படி, இராமானுஜர் அனைத்தும் ஆராய்ந்தருளி அரிய ஏற்பாடுகள் பலவும் செய்து வைத்தார்.

**எம்பெருமானார் :**

திருக்கோட்டியூர் நம்பிகள் பக்கல், 18 முறை திருவரங்கத்தினின்று விடாது சென்று, திருவெட்டெழுத்து மந்திரத்தையும், சரம சுலோகத்தின் நுண்பொருள் நலங்களையும், செவியறிவுறுக்கப் பெற்றார். பிறர் எவர்க்கும் தெரிவித்தலாகாது என அவர் வற்புறுத்திச் சூள் கொண்டிருந்தும், இராமானுஜர் அவற்றைத் தம் மனத்திற் குள்ளேயே பொதிந்து வைத்துக் கொண்டிருக்க மாட்டாதவராய், தம்முடைய பெருங்கருணைத் திறத்தினால், மறுநாளில் அவ்வூர்ப் பெருமாள் கோயிலில் ஆர்வலரான பல ஸ்ரீவைஷ்ணவர்களைப் பெருந்திரளாகக் கூட்டி, அரிய பெரிய அம்மறை நுண் பொருள்களை எல்லாம், அவர்கள் அனைவருக்கும் வெளிப்படையாக எடுத்துக்கூறி உபதேசம் செய்து உவகையுற்றார்.

திருக்கோட்டியூர் நம்பிகள் இச்செய்தியைக் கேட்டு, இராமானுஜரை அழைப்பித்து, இங்ஙனம் செய்தது முறையோ? இதன் விளைவு என்னாகும் என்று நீர் அறிவீரோ? என வினவினார். "ஆசிரியரின் கட்டளையைப் புறக்கணித்தால் எரிவாய் நிரயமே எய்த நேரும் என்று அறிவேன். அடியேன் ஒருவன் நிரயம் புக நேரினும், தேவரீர் திருவருளால் இவ்வுயிர்த்திரள்கள் யாவும் உய்தி பெற்று ஈடேறக் கூடுமே என்ற கருத்தினால், இவ்வாறு செய்யத் துணிந்தேன். பிழை பொறுத்தருள்க" எனக் கூறிப் பணிந்து நின்றார்.

திருக்கோட்டியூர் நம்பிகள், அது கேட்டுத் தம் உள்ளம் நெகிழ்ந்தார். இத்தகைய பரந்த பெருங்கருணைத் திருவுள்ளம் நமக்கு வாய்த்திலதே! இவர்தம் இனிய இரக்க இயல்பு இருந்தவாறு என்னே!" என்று எண்ணி வியந்தார். அம் மகிழ்ச்சிப் பெருக்கால் இராமானுஜர்க்கு "எம்பெருமானார்" (எமக்கெல்லார்க்கும் தலைவர்) என்ற சிறப்புப் பெயரை வழங்கி மகிழ்ந்தார். 'பரம வைதிக சித்தாந்தம்' என வழங்கி வந்த ஸ்ரீவைஷ்ணவ சமயம், இனி "எம்பெருமானார் தரிசனம்" என்றே வழங்கக் கடவதாக! என்றும் பணித்தருளினார்.

இராமானுஜரின் பெருங்கருணை மிக்க திருவுள்ளத் திறனின் சிறப்பினை மிகவும் வியந்து **விவேகானந்த சுவாமிகள்** அவர்கள் புகழ்ந்துபோற்றியுள்ளதும், ஈண்டு நாம் அறிந்து இன்புறுதற்கு உரியது. (1).

**அருளாளப்பெருமாள் எம்பெருமானார் :**

ஒருசமயம் அத்துவித மதத்துறவி ஆகிய யக்ஞ மூர்த்தி என்பவர் ஒருவர், திருவரங்கத்திற்கு வந்து இராமானுசரை வாதப் போருக்கு அழைத்தனர். இருவருக்கும் இடையே 16 நாட்கள் வாதப்போர் நிகழ்ந்தன. 17ஆம் நாள் யக்ஞ மூர்த்தி வாதப் போரில் தோல்வியுற்றார். 'தோற்றவர் வென்றவர் மதத்தைத் தழுவுவது' என்று முதலில் வரையறுத்துக் கொண்ட நிபந்தனையின்படி, இராமானுஜர் அவரை முப்புரி நூலுடன் சிகையும் முக்கோலும் தரிக்கச் செய்து, வைஷ்ணவராக்கி 'அருளாளப் பெருமாள் எம்பெருமானார்' எனவும் பெய

---

(1) "Sankara with his great intellect had not, I am afraid, as great a heart; Ramanuja's heart was greater. He felt for the down-trodden, he sympathised with them. He took up the ceremonies, the accretions that had gathered, made them pure as far as could be, and instituted new ceremonies, new methods of worship for the people, who absolutely required these. At the same time he opened the door to the highest spiritual worship from the Brahmin to the Pariah."

—**Swamy Vivekananda.**

ரைத் தந்து மாணவராக ஏற்றுக்கொண்டார். அவர் ஞானசாரம், பிரமேயசாரம் என்னும் இரு நூல்களை இயற்றியுள்ளார். தம்மை வந்தடைந்த,

(1) அநந்தாழ்வான்.
(2) எச்சான்.
(3) தொண்டனூர் நம்பி.
(4) மருதூர் நம்பி.

என்னும் நால்வருக்கும் இராமானுஜரின் கட்டளைப்படி திருவிலச்சினை திருமந்திரம் முதலிய ஐந்தினையும் அருளி, "குருவியின் கழுத்திலே பனங்காயைக் கட்டினாற் போலே, உடையவர் எனக்கு உம்மை ஆசாரியனாகப் பணித்தனராயினும், நீங்கள் எம்பெருமானார் திருவடிகளே தஞ்சம் என்று இருக்கக் கடவீர்கள்" என்று அருளிச் செய்தார்.

**கூரத்தாழ்வார் :**

இராமானுஜரின் காலத்தில் வாழ்ந்திருந்த சோழ அரசன் ஒருவன், சிவபரத்துவம் நிறுவுவதில் மிகவும் நாட்டம் கொண்டவனாக இருந்தான். சிவத்தைக் காட்டிலும் மேலான பொருளில்லை, என்னும் கருத்தமைய வடமொழியில் **'சிவாத் பரதரம் நாஸ்தி'** என்று எழுதி யாவரிடத்தும் அதனை இசைந்து கையெழுத்திடுமாறு வற்புறுத்தி வந்தான். நாலூரான் என்னும் அமைச்சன் ஒருவன் கூறியபடி, இராமானுஜரை அழைத்து அதிற் கையெழுத்திடுமாறு அவரை வற்புறுத்த நினைத்தான். இராமானுஜர் கோலத்தில் **கூரத்தாழ்வார்,** அவ்வரசனின் அவைக்குச் சென்று, சிவம் என்னும் சொல்லுக்குக் **குறுணி** (நான்கு படி) என்னும் பொருளும் உண்டாகலின், குறுணி என்னும் முகத்தல் அளவைக்கு மேல் பதக்கு என்னும் முகத்தல் அளவை உண்டுஎன்னும் கருத்தமைந்த **"த்ரோணம் அஸ்தி தத : பரம்"** என்னும் வாக்கியத்தினை எழுதி வைத்தார். அது கண்ட அரசன் மிகவும் சினந்து அவர்தம் கண்களைப் பறித்து எறியக் கட்டளையிட்டான். "தர்சனம் (சமயம்) காக்கத் தர்சனம் (கண்கள்) கொடுக்கப்பெற்றோமே" என்று மகிழ்ந்து, கூரத்தாழ்வார் தாமே தம் கண்களைப் பறித்தெறிந்து திரும்பினார். அந்நிலையிற் சோழ அரசனின் கொடிய மனநிலையை அறிந்து, யாது இடர் நேருமோ என்று அன்பர்கள் பலரும் வேண்டிக் கொண்டபடி, இராமானுஜர் திருவரங்கத்தைவிட்டு அகன்று, மலை நாட்டுக்கு எழுந்தருளுவாராயினர்.

**திருநாராயணபுரம் :**

வழியில் அவர் **'நல்லான் சக்கரவர்த்தி'** என்பவரால் ஆட்கொள்ளப்பெற்ற வேட முதலிகளால் உபசரிக்கப்பெற்று, மிதுளாபுரி சாளக்கிராமம் என்னும் பதிகளைக் கடந்து, தொண்டனூர் என்னும் பதியை அடைந்தார். அங்கே யிருந்த **'விட்டல தேவராயன்'** என்னும் அரசனின் மகளைப் பற்றியிருந்த பேயைத் துரத்தி அருள் புரிந்தார். அதனால் சமணனாக இருந்த அவ்வரசன் **"விஷ்ணு வர்த்தன தேவ ராயன்"** என்னும் பெயரை ஏற்று வைணவனாக மாறினான். அவ்வரசனின் உதவியால் திருநாராயணபுரத்தில் புற்றினால் மூடுண்டு மறைந்து கிடந்த பெருமாளை வெளிப்படுத்தி, சாலிவாகன சகம் 1012, வெகுதானிய ஆண்டு தைத்திங்கள் வளர்பிறைச் சதுர்த்தியில் புனர்பூச நன்னாளில், அவரைத் தரிசித்து மகிழ்ந்தார். டெல்லியை ஆண்டுவந்த முகம்மதிய அரசன் ஒருவன், கைப்பற்றிச் சென்றிருந்த இராமப் **பிரியர்** என்னும் உற்சவ பேரத்தினை மீட்டுக் கொணர்ந்து நிறுவினார். திருநாராயணபுரத்தில் தாம் எடுப்பித்த கோயிலை, ஞான ஒழுக்கங்கள் அமைந்து தம்மால் ஆட்கொள்ளப்பட்ட **'ஐம்பத்திருவர் முதலிகள்'** என்பவர்கள்பால், ஒப்படைத்தார். அங்கு இராமானுசர் 12 ஆண்டுகள் தங்கியிருந்தனர் என்பர்.

இந்நிலையில் முன்னர்த் தமக்கும் கூரத்தாழ்வானுக்கும் கேடு சூழ்ந்த சோழ மன்னன், கண்டமாலை என்னும் நோயுற்றுக் கழுத்தில் புழுநெளியப் புண்கள் ஏற்பட்டு வருந்திக் **'கிருமி கண்ட சோழன்'** என்னும் பழிப்பெயர் பூண்டு, மாய்ந்

தொழிந்தான்(2). அதனல் பண்டேபோல் நல்ல சூழ்நிலை நிலவுதல் அறிந்து, இராமானுசர் திருவரங்கத்திற்கு மீண்டும் திரும்பிப் போந்தார். அங்கே திருவரங்கனுக்குப் பல கைங்கரியங்களைச் செய்து கொண்டும், திவ்யப் பிரபந்தமாகிய அருளிச் செயல்களைப் பேணிப் பலவகைகளால் வளர்த்துக் கொண்டும் வாழ்ந்து வந்து, தமது 120ஆம் அகவையில் (கி. பி. 1017 — 1137), நித்திய சூரிகள் எதிர்கொள்ளப் பரமபதம் சேர்ந்து, திரு நாடு அலங்கரித்தார்.

**நூல்கள் :**

இராமாநுஜர் நவநிதிகள் போலவும், நவரத்தினங்கள் போலவும் ஒன்பது சிறந்த நூல்களை அருளிச் செய்துள்ளார்.

(1) ஸ்ரீபாஷ்யம்.
(2) வேதாந்த தீபம்.
(3) வேதாந்த சாரம்.
(4) வேதாந்த சங்கிரகம்.
(5) கீதா பாஷ்யம்.
(6) சரணுகதி கத்யம்.
(7) ஸ்ரீரங்க பாஷ்யம்.
(8) ஸ்ரீவைகுண்ட கத்யம்.
(9) நித்யம்.

**ஆசிரியர்கள் :**

இராமானுசருக்குப் "பஞ்சாசார்ய பதாச்ரிதர்" என ஒரு சிறப்புப் பெயர் உண்டு. ஐந்து ஆசிரியர்களின் திருவடிகளில் ஈடுபட்டு ஒழுகியவர் என்பது அதற்குப் பொருள்.

(1) பெரிய நம்பிகள், பஞ்ச சம்ஸ்காரம் செய்தருளியவர்.

(2) திருக்கோட்டியூர்நம்பி, திருமந்திர நுண்பொருள்கள் அறிவுறுத்தியவர்.

(3) திருமாலையாண்டான், திருவாய்மொழிப் பொருள் போதித்தார்.

(4) திருமலை நம்பிகள், ஸ்ரீராமாயண நுண்பொருள்களை விளக்கியருளினர்.

(5) திருவரங்கப் பெருமாளரையர், திருவாய்மொழியும் தோத்திரங்களும் நல்வார்த்தைகளும் அருளிச் செய்தார்.

**பிற சிறப்புகள் :**

"நாறும் நறும்பொழில் மால் இருஞ்சோலை நம்பிக்கு, நான் நூறு தடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்து பராவி வைத்தேன்; நூறு தடா நிறைந்த அக்கார அடிசில் சொன்னேன்" என்று ஆண்டாள் நாச்சியார் பாடிய பாடல்களுக்கு ஏற்ப, திருமாலிருஞ்சோலைப் பெருமாளுக்கு நூறு தடா வெண்ணெயும் அக்கார அடிசிலும் சமர்ப்பித்ததனல் "நம் கோயில் அண்ணர்" என்ற சிறப்புப் பெயர் அருச்சகர் முகமாக ஸ்ரீஆண்டாளால் வழங்கப் பெற்றது.

போதாயன விருத்தியைத் தழுவிப் பிரம்ம சூத்திரத்திற்கு இவர் வகுத்த உரையின் மாட்சிமையைக் கண்டு வியந்து மகிழ்ந்த கலைமகள், இவருக்குப் "பாஷ்யகாரர்" என்னும் சிறப்புப் பெயரை வழங்கியருளினள்.

"திருவேங்கடம் உடையானுக்கு, அவர் தம் திருமார்பில் அலர்மேல் மங்கை நாச்சியாரை எழுந்தருளப்பண்ணித் திருவாழியும் திருச்சங்கும் சாதித்தருளினமையால்(3), திருவேங்கடம் உடையானுக்கு மாமனும் ஆசாரியரும் ஆயினர் இராமானுஜர்" என்றும் பெரியோர்கள் பணிப்பர்.

---

(2) இவனை முதற் குலோத்துங்கன் (கி.பி.1077—1118) என்றும், இரண்டாம் குலோத்துங்கன் (கி. பி. 1133—1146) என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுவர். அதிராஜேந்திர சோழன் (கி. பி. 1070) என்பவனே, கிருமிகண்ட சோழன் எனப்படுபவன் என்றும் சிலர் கருதுவர்.

—(ஆசிரியர்)

(3) திருவேங்கட முடையானுக்கு ஸ்ரீராமானுஜர் திருவாழியும் திருச்சங்கும் சாதித்தருளியது, மூன்றும் இராசராச சோழன் காலத்தில், அவனுக்குச் சிற்றரசனய் விளங்கியிருந்த முதலாம் வீர நரசிங்க யாதவராயன் (கி. பி. 1205—1252) என்பவனது ஆட்சியில், ஏறத்தாழக் கி. பி. 1205ஆம் ஆண்டிலோ, அதற்குச் சற்று முன்னே, அல்லது பின்னே, நிகழ்ந்திருக்கலாம் என்பது சில ஆராய்ச்சியாளர் கருத்து.

—(ஆசிரியர்)

இராமானுசரின் திருவுருவத் திருமேனிகள் ஸ்ரீரங்கம், மேல்கோட்டை, ஸ்ரீபெரும்பூதூர் என்னும் மூன்று இடங்களிலும் அவருடைய காலத்திலேயே அன்பர்களால் அமைக்கப்பெற்றன என்பர்.

(1) ஸ்ரீரங்கம் — தான் ஆன திருமேனி.

(2) மேல்கோட்டை — தான் உகந்த திருமேனி.

(3) ஸ்ரீபெரும்பூதூர் — தமர் உகந்த திருமேனி.

திருவரங்கத்து அமுதனர் இராமானுசரைப் போற்றித் துதித்து அருளிச் செய்த 'இராமானுச நூற்றந்தாதி' பெரியோர்களால் 'பிரபந்த காயத்திரி' எனப் புகழ்ந்து மதிக்கப் பெற்று, திவ்யப் பிரபந்தங்களில் ஒன்ருகச்சேர்க்கப்பெற்றுள்ளது.

முடிவுரை :

இராமானுசரின் பெருமை எல்லையற்றது. அது நிலத்திலும் பெரியது; வானினும் அகன்றது. ஸ்ரீவைஷ்ணவ சமயத்தின் ஆழ்வார்களும் ஆசாரியர்களும் ஆகிய அனைவரின் சிறப்பும் பண்புநலங்களும், இராமானுசர் பக்கல் ஒருங்கே திரண்டு ஓர் உருவாய் அமைந்திருந்தன.

இராமானுசர்க்கு நம்மாழ்வார் தலை; நாதமுனிகள் திருமுகம்; உய்யக் கொண்டார் கண்; மணக்கால் நம்பி கன்னம்; ஆளவந்தார் மார்பு; பெரிய நம்பி கழுத்து; திருக்கச்சி நம்பி கைகள்; திருக்கோட்டியூர் நம்பி நெஞ்சு; திருவரங்கப்பெருமாள் அரையர் வயிறு; திருமாலையாண்டான் முதுகு; எம்பார் இடுப்பு; பட்டரும் நஞ்சீயரும் பின்னிருக்கை; நம்பிள்ளை தொடை; வடக்குத் திருவீதிப்பிள்ளை முழங்கால்; பிள்ளை லோகாசாரியர் திருவடி; திருவாய் மொழிப் பிள்ளை பாதரேகை; மணவாளமாமுனிகள் பாதுகை; சேனபதி ஜீயர் ஊர்த்வபுண்டரம்; கூரத்தாழ்வான் புரிநூல்; முதலியாண்டான் திரிதண்டம்; வடுக நம்பி காஷாயம்; திருக்குருகைப்பிரான்பிள்ளான் தோமாலிகை; பிள்ளை உறங்கா வில்லி தாசர் நிழல்! இங்ஙனம் ஆசாரியர்கள் எல்லோரையும் தமக்கு உறுப்பாய்க் கொண்டு இணையற்ற பெருமையினராக விளங்குபவர் இராமானுஜர்! இராமானுஜர் திருவடி வாழ்க! அவர்தம் புகழ் வளர்க !

எம்பெருமானர் தரிசனம் தழைத்தினிது ஓங்குக.

"அத்திகிரி அருளாளர்
அடிபணிந்தோன் வாழியே
அருட்கச்சி நம்பியுரை
ஆறுபெற்ருேன் வாழியே
பக்தியுடன் பாடியத்தைப்
பகர்ந்திட்டான் வாழியே
பதின்மர்கலை உட்பொருளைப்
பரிந்துதந்தான் வாழியே
சுத்தமகிழ் மாறனடி
தொழுதுய்ந்தோன் வாழியே
தொல்பெரிய நம்பிசரண்
தோன்றினுன் வாழியே
சித்திரையில் ஆதிரைநாள்
சிறக்கவந்தோன் வாழியே
சீர்பெரும்பூ தூர்முனிவன்
திருவடிகள் வாழியே.

— ஆசிரியர்.

---

## செய்திச் சுருக்கம்

**சாத்திரப் பயிற்சி வகுப்பு:** லால்குடி தம்பாச்சியாப் பிள்ளை சத்திரத்தில், 19—5—68 முதல் 1—6—68 முடிய, சித்தாந்தக் கலைச்செல்வர் திரு. க. வச்சிரவேல் முதலியார், B. A., L. T., அவர்களால் 'சிவஞன சித்தியார்' வகுப்பு நடத்தப் பெற்றது. திருக்குறள்வேள் திரு. ஜி. வரதராச பிள்ளை B.A., அவர்கள், இதனை முன்னின்று சிறப்புற நடத்தி வைத்தார்கள்.

—ஆசிரியர்.

# மகாபாரதம்

அருண்மொழியரசு
திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.

**சர்ப்பயாகம் :**

ஜனமேஜய மன்னர் நன்கு வேதங்களைக் கரைகண்ட புரோகிதர்களையெல்லாம் தருவித்தார். கருணை நிறைந்த என் பிதாவை எரித்த தட்சகனை வேள்வித் தீயில் எரிக்க வேண்டும். நீங்கள் அதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்யுங்கள் என்றார்.

புரோகிதர்கள் 'மன்னரே! சர்ப்பசத்திரம் என்ற யாகத்தைச் செய்யும். நாங்கள் அதற்குரிய கிரியைகளைச் செய்வோம்' என்றார்கள். யாகசாலை கட்டுவதற்குரிய இடத்தை அளக்கச் செய்தார்கள். யாகசாலை கட்டத் தொடங்கினார்கள். அப்படி கட்டும்போது சூதகுலத்திற் பிறந்த ஒரு சிற்பி வந்து பார்த்தான். ஜனமேஜயரைப் பார்த்து "வேந்தர் கோமானே! இந்த யாகசாலை நில அளவு நிலையையும் புதுக்கத் தொடங்கிய காலத்தையும் நான் கவனித்துப் பார்த்தேன். இந்த யாகம் பாதியில் நின்றுபோகும். அதுவும் அந்தணனால் நிற்கும்" என்றான். அதைக் கேட்ட மன்னர் "எனக்குத் தெரியாமல் யாரையும் உள்ளே விடாதீர்கள்" என்று காவலருக்குக் கட்டளையிட்டார்.

யாகம் ஆரம்பிக்கப்பட்டது. உக்கிரசிரவசு உதங்கர் முதலியோர்கள் இருந்து மந்திரங்களைக்கூறி யாகத்தீயை வளர்த்தார்கள். கருப்புத்துணியைப் போர்த்திக் கொண்டு புகையினால் சிவந்த கண்களுடன் மந்திரபூர்வமாக ஓமஞ் செய்தார்கள்.

மந்திர அதிதேவதை சென்று ஈர்க்க, பாம்புகள் வந்து தீயில் வீழ்ந்தன. துடித்துக்கொண்டும், படம் எடுத்துச் சீறிக் கொண்டும், ஒன்றையொன்று கூப்பிட்டுக் கொண்டு நெருப்பில் விழுந்து கரிந்து எரிந்தன. வெள்ளைப் பாம்புகள், கருநாகங்கள், நீலப்பாம்புகள் குட்டிகள், முதிய சர்ப்பங்கள் ஆகியன வந்து இரைச்சலிட்டு மாய்ந்தன; கோடிக் கணக்கான அரவங்கள் அழிந்தன. நாகங்களின் கொழுப்பு உருகி வாய்க்கால்போல் ஓடியது. எங்கும் தீய நாற்றம் வீசியது.

மண்ணிலும் நாகலோகத்திலும் உள்ள அரவங்கள் வந்துவந்து மாய்ந்தன. ஒரு குரோச நீளமுள்ள பாம்புகள், பருத்த பாம்புகள், கொடிய நாகங்கள் வீழ்ந்து சாம்பலாயின.

தட்சகன் அஞ்சி ஓடி இந்திரனிடம் தஞ்சம் புகுந்தான். இந்திரன் அவனைக்கண்டு "நீ அஞ்சாதே. நான் உன்னைக் காப்பாற்றுவேன். உனக்காக நான் முன்னமே நான் முகக்கடவுளை வேண்டிக் கொண்டிருக்கிறேன்" என்று சொன்னான். தட்சகன் இந்திரனுடைய வீட்டிலே சுகமேயிருந்தான்.

தனது உடன் பிறந்தாரில் சிலர்தான் மிஞ்சியிருந்தார்கள் என்று வாசுகியறிந்து துன்புற்றான். தங்கையைப் பார்த்து "அம்மா! என் உடம்பு உள்ளம் எல்லாம் எரிகின்றன. எனக்குத் திசை தெரியவில்லை. உள்ளம் உணர்வு நிலைகுலைந்துவிட்டது. மண்ணும் விண்ணும் கண்ணும் சுழல்கின்றன. இதயம் வெடித்துவிடும் போல் இருக்கின்றது. ஒரு சிலரே இறவாமல் இருக்கின்றார்கள். சில நேரம் தாமதித்தால் நாங்களும் யாகத் தீயில் வீழ்ந்து மாள்வோம். உன்னை என்ன பயனை விரும்பி அந்த முனிவருக்குக் கொடுத்தேனோ அந்தப்பயன் இப்போது விளைய

வேண்டும். ஆஸ்தீகனுல் யாகம் நிற்கும் என்று பிரமதேவர் கூறியிருக்கிறுர். "தங்கையே! உன் மகனையனுப்பி யாகத்தை விரைவில் நிறுத்துமாறு செய்" என்று வேண்டினுன்.

ஜரத்காரு தன் மைந்தனையழைத்து "மகனே! என்னை என்தமையன் இந்த ஒரே காரணத்திற்காகத்தான் உன் பிதாவுக்குத் திருமணஞ் செய்துகொடுத்தார். நீ சென்று ஜனமேஜயர் புரியும் சர்ப்ப யாகத்தை நிறுத்து'' என்றுகூறி, முன்னே நடந்த வரலாறுகளைக் கூறி, " உன் மாதுலர்களில் சிலரையாவது காப்பாற்று" என்ருள்.

ஆஸ்தீகர் "மாமனைப் பார்த்து, உங்களை நான் காப்பாற்றுவேன். கலங்க வேண்டாம். என் வாக்கு பொய்க்காது. வேள்வியை நிறுத்தி உங்களை உய்விப்பேன்" என்று ஆறுதல் கூறிப் புறப்பட்டார். யாக சாலையையடைந்தார். காவலன்தடுத்தான். ஆஸ்தீகர் உயர்ந்த இனிய வாக்கியங்களால் ஜனமேஜயரையும் யாகாக்கினியையும் துதி செய்தார்.

ஜனமேஜயர் இவருடைய துதியைக் கேட்டு உள்ளம் உருகியும் அன்பு பெருகியும் உள்ளே அழைத்தார். "இவர் சிறு பாலராக இருப்பினும் அறிவில் ஆதித்தனைப்போல் விளங்குகின்ருர்'' என்ருர்.

அங்கே கண்டபார்க்கவர், சைமினி, சார்கரவர், பிங்கலர் வியாசர், உத்தாலகர், பிரமதகர், சுதேவகேது, அனிதர்,தேவலர், நாரதர், பர்வதர், ஆத்ரேயர், தேவசர்மா, மௌத்கல்யர் முதலிய முனிவரர்கள் சபையில் அமர்ந்து யாககிரியைகளைச் செய்து கொண்டிருந்தார்கள்.

'இன்னும் தட்சகன் வரவில்லையே அவன்தானே பெரும்பகை. அவனை விரைவில் அழியச் செய்யுங்கள்' என்ருர் ஜனமேஜயர்.

அப்போது லோகிதாக்ஷர் என்ற சூதர் சொல்கின்ருர். "மன்னரேறே! தக்ஷகன் இந்திரனிடம் தஞ்சம் புகுந்து இந்திரன் அருகில் இருக்கினருன்'' என்ருர். இந்திரனையும் தட்சகனையும்கட்டிக் கொணருமாறு மந்திரத்தை உச்சரித்தார்கள். மந்திர தேவதை சிம்மாதனத்துடன் இந்திரனையுந் தட்சகனையும் கட்டிக்கொணர்ந்தது. ஜனமேஜயர்'விரைந்து அழையுங்கள்' என்ருர். இந்திரன் நடுநடுங்கித் தட்சகனை விட்டு ஓடினுன். தட்சகன் மதிமயங்கி யாகாக்கினியைக் கண்டு பெரும்பயம் அடைந்தான். யாகத்தை நடத்தும் ஆசாரியார் 'இதோ தட்சகன் வந்து விட்டான்' என்ருர்.

அப்போது ஆஸ்தீகர், 'மன்னவரே! நீர் பீஷ்மரைப்போன்ற உறுதி யுடையவர். உமது மகிமை நாராயணருடைய மகிமைக்கு நிகரானது; ஒரு வரம் கேட்கின்றேன் என்ருர். ஜனமேஜயர் 'என்ன வரம் வேண்டும்! கேளும் தருகின்றேன்' என்ருர்.

ஆஸ்தீகர் "இந்தக் கணத்துடன் யாகம் பூர்த்தியடைய வேண்டும்'' என்ருர். மன்னர் 'முனிமைந்தரே! நீர் வேறு வரங் கேளும்' என்ருர். 'இந்த வரம் ஒன்றுதான் வேண்டும்' என்ருர் ஆஸ்தீகர். தட்சகனை 'நில் நில்' என்ருர். அவன் ஆகாயத்தில் நின்ருன்.

ஜனமேஜயர் யாகத்தை நிறுத்துமாறு கட்டளையிட்டார். அப்போது ஆஸ்தீகர் 'மன்னரே! நீர் எனக்குத் தந்தது ஒரு வரந் தான்; அதனுல் யார் யார் என்ன என்ன பெற்ருர்கள் தெரியுமா?'

மான் பெற்ற கரதலத்தோன் புரிநூல் பெற்ருன்
மரகதம் போல்நிறம் பெற்ருேன் சயனம் பெற்ருன்
ஊண்பெற்ற அயில் மகவான் உயிரே பெற்ருன்
உயர்ந்த சதுமுகத்திறை வாக்குயர்ச்சி பெற்ருன்
வான்பெற்ருேர் அமுதளிக்குந் தாம்பு பெற்ருர்
மண்பெறருேர் தங்களுக் காதாரம் பெற்ருர்
யான்பெற்ற வரம்ஒன்றே எனக்கின் றீந்த
இறைவநீ பெற்றபுகழ் ஆர்பெற ருரே.

சிவபெருமான் ஆபரணமும் முப்புரி நூலும் பெற்ருர்; நாராயணர் படுக்கை பெற்ருர்; இந்திரன் உயிர் பெற்ருன்; பிரமா வாக்குயர்ச்சி பெற்ருர்; தேவர்கள் அமுதங் கடையுங் கயிறு பெற்ருர்கள்; மண்ணுலகத்தார் அதனைச் சுமக்கும் ஒருவனைப் பெற்ருர்கள். 'உன் புகழ் வாழ்க. உன் குலம் வாழ்க' என்ருர்.

ஆஸ்தீகருடைய இனிய மொழியைக் கேட்டு மனமகிழ்ந்து 'முனிகுமாரரே; நான் இனி செய்யப்போகும் அஸ்வமேத யாகத்திற்கு நீர் வந்து சதஸ்யராயிருக்க வேணும்' என்ருர். ஆஸ்தீகர் எல்லோருக்கும் நன்றி தெரிவித்துப் புறப்பட்டார். நாக லோகம் சென்ருர். அங்குள்ள நாகர்கள் அனைவரும் வந்து அவரைச் சூழ்ந்து கொண்டு 'குழந்தாய்! உனக்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும் கேள்' என்ருர்கள்.

ஆஸ்தீகர் 'நல்லவர்களே நீங்கள் தீண்டித் துன்புறுத்தாமல் இருங்கள்' என்று கேட்டார்.

நாகர்கள் 'ஆஸ்தீகரே! உமது பேரைச் சொல்லுகின்றவர்களையும் உமது கதையைப் படிப்பவர்களையும் நாகம் தீண்டாது' என்ருர்கள். ஆஸ்தீகர் தவநெறியில் நின்ருர்.

ஜனமேஜயர் புரோகிதர்கட்கும் மற்றைய புலவர்கட்கும் நிரம்பத் தட்சிணைகள் தந்தார். யாகம் நின்று போகும் என்று முதலிலேயே சொன்ன தபதிக்கும் பொன்னும் பொருளுந்தந்தார். 'அவபிருதம்' என்ற யாகஸமாப்திஸ்நானஞ் செய்தார்.

வேள்விப் பேரவையில் சிறந்த ஞானியாகிய வியாசமுனிவர் இரண்டாவது பிரமதேவரைப்போல் வீற்றிருந்தார். அவர் சத்தியவதியின் புதல்வர். சத்திய முனிவருடைய பேரர். பராசரகுமாரர். பிறந்தவுடன் தம் இச்சையினுல் தம் உடம்பை வளரச் செய்தவர். சத்தியவிரதர் வேதத்தை நான்காக வகுத்தவர்; அவர் உடுக்குலங்கட்கு இடையில் முழு நிலா விளங்குவது போல் திகழ்ந்தார்.

அம்முனீந்திரரை ஜனமேஜயர் பார்த்து, கைகூப்பி நின்று 'தபோதனரே! கௌரவர்களையும் பாண்டவர்களையும் நீவிர் நேரில் அறிவீர்கள். அவர்களுக்குள் பகை எவ்வாறு மூண்டது? என்பாட்டன்மார்கள் நற்குண சீலர்களாயிருந்தும் பல லட்சம் பேர் மாளுமாறு ஏன் போர் புரிந்தனர்? ஆதலால் அவர்களின் வரலாற்றை விரிவாக அடியேனுக்குச் சொல்லும்' என்று விரும்பிக் கேட்டார்.

வேத வியாசர் தமது சீடர் வைசம்பாயனரை நோக்கி, 'நீ என்னிடம் கேட்டபடி மகாபாரதம் என்ற இதிஹாசத்தை ஜனமேஜயருக்கும் இங்குள்ள ஏனைய அன்பர்கட்கும் சொல்லக்கடவாய்' என்று பணித்தருளினர்.

வைசம்பாயனர் அந்த மாப்பேரவையின் கண் அமர்ந்து மகாபாரதம் என்ற ஐந்தாம் வேதத்தைச் சொல்லத் தொடங்கினர்.

ஜனமேஜயரே! மகாபாரதமான இதிகாசத்தை முன் நடந்தபடி கூறுகின்றேன். கேளும்.

பாண்டுவின் புத்திரர்கள் ஐவர்; திருதராஷ்டிரனுடைய புதல்வர்கள் நூற்றுவர். பாண்டு நற்கதியடைந்தபின் பாண்டவர்கள் அத்தினபுரம் வந்து கௌரவர்களுடன் சேர்ந்து வளர்ந்தார்கள். பீமார்ச்சுனர்களுடைய ஆற்றலைக்கண்டு துரியோதனன் அழுக்காறு கொண்டான். அந்தப் பொருமை யென்ற மரத்தைத் தண்ணீர் விட்டுக் கர்ணனும், சகுனியும் வளர்த்தார்கள்.

துரியோதனன் பீமன் தூங்கும்போது கயிற்றுல் பிணித்து கங்கையில் இட்டான். பாம்புகளைக் கடிக்கவிட்டான்; உணவில் நஞ்சு கலந்து கொடுத்தான். அரக்கு மாளிகை கட்டித் தீயிட்டான். தெய்வத் திருவருளாற் பாண்டவர்கள் உய்வு பெற்ருர்கள். இடும்பன், பகன் முதலிய அரக்களைப் பீமசேனன் கொன்ருன்.

மறையவர் உருவில் மறைந்திருந்த பாண்டவர்கள் பாஞ்சால தேயம் வந்து வில்வளைத்துத் திரௌபதியை மணந்து கொண்டார்கள். ஓராண்டு பாஞ்சாலன் அரண்மனையில் வாழ்ந்தார்கள். திருதராஷ்டிரன் அழைத்து இந்திரப் பிரஸ்தத்தில் அரசுபுரிவித்தான். அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை செய்துகொண்டு உலூபி சித்திராங்கதை சுபத்ரை என்ற கனனியர்களை மணந்தான். காண்டவம் என்ற வனத்தைத் தீககடவுளுக்கு உணவாகத் தந்தான் தனஞ்சயன். அதனுல் அர்ச்சுனனுக்கு அக்கினி தேவன் காண்டீவம் என்ற வில்லைத் தந்தான். பாண்டவர்கள் நான்கு திசைகளையும் வென்று இராசசூயம் என்ற பெருவேள்வியைச் செய்தார்கள்.

துரியோதனன் பொருமை கொண்டு பாண்டவர்களைச் சூதுபோரில் வென்றான். பாண்டவர்கள் 12 ஆண்டு வனவாசம் புரிந்தார்கள். ஓராண்டு விராட நகரில் மறைந்து வாழ்ந்தார்கள். துரியோதனன் அவர்கட்கு உரிய நாட்டினைத் தர மறுத்தான். போர் நிகழ்ந்தது. துரியோதன திகள் மாய்ந்தார்கள். மறம் வீழ்ந்தது. அறம் வாழ்ந்தது. தருமர் அரசு புரிந்தார். சிலகாலத்துக்குப்பின் திருதராஷ்டிரனும் விதுரரும் சுவர்க்கம் புகுந்தார்கள். கண்ண பிரானும் வைகுண்டஞ் சேர்ந்தார். பாண்டவர்கள் மஹா பிரஸ்தானம் என்ற விரதத்தை மேற்கொண்டு சுவர்க்கஞ் சேர்ந்தார்கள்.

### பாரதத்தின் பெருமை :

மன்னவரே! இந்த மகாபாரதம் நூரு யிரங் கிரந்தங்களையுடையது. இரண்டா யிரம் அத்தியாயங்களும், நூறு சிறுபர் வங்களும்,பதினெட்டு பெரிய பர்வங்களும் அடங்கியது. இதனைச் சொல்லுகின்றவர் களும் கேட்கின்றவர்களும் பிரம்மலோகஞ் சென்று பிரம்மாவுக்கு ஒப்பாக இருப்பார் கள். இது வேதத்துக்குச் சமமானது. புண்ணியமானவற்றுள் உத்தமமானது. கேட்கத்தக்கவைகளுள் சிறந்தது. முனி வர்களால் புகழப்பெற்றது. அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களுக்கும் உறைவிடமானது. இதைக் கேட்பவர்கள் எல்லாவகையான பாவங்களிலிருந்தும் விடுபடுவார்கள். இதனைப் படிப்பவர்கட்கும் வெற்றியுண்டா கும். அதனுல் அது ஜயம் என்று பேர் பெற்றது. இதனை ஓதுவோர் மகப்பேறு பெறுவார்கள். அரசனுக்குப் பெரும் பதவி கிடைக்கும். இது அறநூல்; ராஜநீதிநூல்; மோட்சநூல். இதில் இல்லாதது எதிலும் இல்லை. இதனை அன்புடன் படிக்கின்றவர் கள் செல்வம் பெறுவார்கள்; நோயற்ற வாழ்வையும் நீண்ட ஆயுளையும் அடை வார்கள்.

வேதவியாசர் மூன்று ஆண்டுகள் தூங் காமல் இருந்து இந்த பாரதத்தைச் சொன்னுர். இதனை முழுவதும் படித்த வர்க்கு நினைத்த கருமங்கள் கைகூடும். இதனைப் படிப்பதனுல் வருகின்ற இன்பம் சுவர்க்கத்திலும் இல்லை. இதனைக் கேட் கின்றவனும் கேட்பிக்கின்றவனும் இராச சூயம் அச்வமேதம் என்னும் வேள்விப் பயனை யடைவான். பாரதத்தைச் சொல்லு கின்றவனுக்கு வழங்கிய தானம் கடல் சூழ்ந்த உலகத்தைத் தானஞ் செய்வதற் குச் சமானம்.

### வியாச சரித்திரம் :

உபரிசரன் என்னும் ஒரு அரசன் இருந் தான். இம் மன்னன் வேதங்களை ஓதுபவன். அறநெறி வழுவாதவன். பூருமரபில் வந்த வன். இந்திரன் சொன்னதனுல் சேதி தேசத்தைப் பிடித்தான். வேட்டையாடு வதில் விருப்பம் உள்ளவன்.

இத்தகைய அரசன் ஆயுதங்களை விட்டு, கானகத்தில் பர்ண சாலையில் வசித்துத் தவஞ் செய்து கொண்டி ருந்தான். "இவன் தவத்தால் இந்திர பதவிக்கு உரியவனுவான்" என்று கருதிய இந்திரன், அவன் முன் வந்து "வேந்தர் வேந்தே! நான் தேவர் களைக் காப்பாற்றுகிறேன். நீ மனிதர் களைக் காப்பாற்று. நீ என்னுடைய தோழன். இத்தேயம் தனதான்யங்கள் நிறைந்தது. சாந்தமானது. ஆதலால் நீ இந்தச் சேதி தேசத்தை அரசாளுவாய்.இந்தத்தேசத்தில் உள்ளவர்கள் விளையாட்டுக்கும் பொய் சொல்வதில்லை. அறநெறியில் நிற்பவர்கள். தேவர்கள் மாத்திரம் அனுபவிக்கின்றதும் விண்ணில்சஞ்சரிப்பதும் படிகமயமானதும் ஆகிய விமானத்தை உனக்குத் தருகி றேன். நீ தேவனைப்போல் விண்ணில் உலா வுவாய். வாடாத தாமரை மலர்களாலாய வைஜயந்தி என்ற பெயருள்ள மாலையை உனக்குத் தருகின்றேன். இது ஜயத்தைத் தரத்தக்கது. இந்த வைஜயந்திமாலை போரில் ஆயுதங்களால் புண்படாமல் உன்னைக் காப்பாற்றும். இந்த இந்திர மாலைஇந்தப்பூவுலகில் உனக்குஅடையாள மாக இருக்கட்டும்" என்று சொன்னுன். இந்திரத்துவசம் என்பதையுங் தந்தான். இவ்வாறு அவனைத் தவத்தில் இருந்து விலக்கி அரசு புரியச் செய்தான்.

அதன்பின் சேதிமன்னன் வைஜயந்தி மாலையைத் தரித்துக்கொண்டு விமானத்தில் ஏறித் தனது நகரத்துக்குச் சென்றான். அந்தக் கோலுக்கு (இந்திரத்வஜம்), நகரப் பிரவேசம் என்ற விழா செய்தான். 32 சாண் உயரமுள்ள அக்கோலை ஆடை அணிகலங்களால் அலங்கரித்து ஒரு இடத்தில் நட்டு மேளதாளங்கள் முழங்கவும் தானதருமஞ் செய்தும் ஆண்டுதோறும் வழிபட்டான். இந்திரவிழாவை எல்லோரும் கொண்டாடினார்கள்.

இவனுக்கு ஐந்து புதல்வர்கள் இருந்தார்கள். சக்கரவர்த்தியாகிய அவன் தன் புதல்வர்களை வேறு வேறு ராஜ்யங்களில் பட்டாபிஷேகஞ் செய்வித்தான்.

பிருகத்ரதன், பிரத்யக்ரகன், மணிவாகன், மத்ஸில்லன், யது என்று பேருள்ள இம்மைந்தர்களில், பிருகத்ரதன் மகதநாட்டை யாண்டான்.

இந்த வசு விண்ணில் சஞ்சரித்துக் கொண்டிருந்தபடியால் உபரிசரன் என்ற பேரினைப் பெற்றான்;

சுத்திமதி என்ற நதியிடம், கோலாகலம் என்ற மலையின் அதிதேவதை, ஒரு ஆணும் ஒரு பெண்ணுமாக இரு மக்களையுண்டாக்கியது. சுத்திமதி அவ்விரு மக்களையும் மனமகிழ்ச்சியுடன் உபரிசரவசுவுக்குத் தந்தது. ஆண் மைந்தனைச் சேனாதிபதியாகச் செய்துகொண்டான். பெண்மணியான சிரிகை என்பவளை மணந்து கொண்டான்.

அவன் மனைவியான சிரிகை இரண்டாவது இலட்சுமிபோல் விளங்கினாள். அவள் மங்கள நீராடிச் சந்தானத்தைவிரும்பினாள். பிதிர்கள் உபரிசரன்பால் வந்து வேட்டையாடுமாறு கட்டளையிட்டார்கள். வசு தன் மனைவியையே நினைத்துக்கொண்டு வேட்டையாடினான்.

மனைவி மீதுள்ள ஆசை மிகுதியால் வீரியம் வெளிப்பட்டது. அவன் அதனை ஒரு இலையில் வைத்து அவ்வீரியமும் மனைவியின் ருதுகாலமும் வீணாகக் கூடாது என்று நினைத்து, அவ்வீரியத்தில் தன் முத்திரை மோதிரத்தைப் பதித்து, கர்ப்பதான மந்திரம் ஜெபித்து விரைந்து செல்லக்கூடிய ஒரு பருந்தினிடம் தந்து "ஏ பருந்தே! இதை என் மனைவியிடம் கொண்டு போய்க்கொடு'' என்று கட்டளையிட்டான்.

அப்பருந்து வேகமாகச் செல்லும்போது மற்றொரு பருந்து அதை மாமிச உணவு என்றுகருதி, இதனுடன் எதிர்த்து சண்டை செய்தது. இலைத்தொன்னை கிழிந்து இரு துண்டுகளாய் யமுனை நதியில் விழுந்தது. அத்திரிகை என்று பேர் பெற்ற தெய்வப்பெண் மீனாக யமுனையில் இருந்தாள். அந்த மீன் அதை விழுங்கியது. கருவுற்று வளர்ந்தது. மீன் பிடிக்கிறவர்கள் அம்மீனைப் பிடித்து வயிற்றைக் கீறினர். ஒரு ஆண் குழந்தையையும் ஒரு பெண் குழந்தையையும் கண்டு எடுத்தார்கள். அந்த மீன் சாபம் நீங்கிச் சுவர்க்கத்தை யடைந்தது.

அந்த இரு குழந்தைகளையும் சிவன்படர்கள் உபரிசரசுவிடம் தந்தார்கள். ஆண் பிள்ளைக்கு மச்சவல்லபன் என்ற பேரிட்டு வளர்த்தான். பின்னர் அவன் அரசனானான். பெண் குழந்தை மீன் நாற்றம் உள்ளவளாக இருந்தபடியால், அவளை ஒரு சிவன்பட ராஜனுக்குத் தந்தான். சத்யவதி என்ற பேருள்ள அவள் மச்சகந்தி என்ற பேரும் படைத்து அழகும் நற்குணமும் உடையவளாக வளர்ந்தாள்.

அந்த சிவன்பட மன்னனுக்கு வேறு குழந்தைகள் இல்லை. யமுனைத் துறையில் முனிவர்கள் நதியைத் தாண்ட விரும்பினால் அவர்கட்கு உதவியாக ஓடம் விடும் பொருட்டு இவளை நியமித்தான். மச்சகந்தி தரும ஓடம் விட்டுக்கொண்டு தவமுனிவர்க்கு உதவி புரிந்து வந்தாள்.

ஒருநாள் பராசர முனிவர் வந்தார். அவர் அவளைப் பார்த்து 'பெண்மணியே! ஓடக்காரன் எங்கே?' என்றார். "முனிவர் பெருமானே! நான்தான் ஓடக்காரி; தங்களைப் போன்ற தவசீலர்க்கு நான் தருமமாக இதனை விடுகின்றேன்'' என்றாள்.

அந்த ஓடத்தில் சக்தியின் புதல்வர் பராசரர் ஏறிக்கொண்டார். இளம் பெண்ணாகிய அவள் ஓடத்தைச் செலுத்தினாள்.

அவளைப் பார்த்து அவர் கூறுகின்றார். "அன்புள்ளவளே! நீ சிவன்படன் மகளன்று. உன் முன்பிறப்பைப்பற்றிக் கூறுகின்றேன் கேள். அமிர்தபானஞ் செய்த பிதிர்கள் அச்சோதம் என்று தெளிந்த தடாகத்தில் உன்னை உண்டாக்கினார்கள். அதனால் உனக்கு அச்சோதை என்று பேர் உண்டாயிற்று. பிதிர்கள் உன்னை மனத்தினால் உண்டாக்கியபடியால் அவர்களை நீ பார்த்ததேயில்லை. அத்திரிகை என்ற தேவமாதுடன்கூடி நீ தேவ விமானத்தில் ஏறி உலாவுகின்றபோது, வசு என்ற வேந்தனை பிதாவாக நினைத்தாய். வேறு ஒருவனைப் பிதாவாக நினைத்தபடியால் உன் யோக சக்தியை இழந்துவிழுகின்ற போது பிதிர்களைக் கண்டாய். "தந்தைகளே" என்று அழைத்தாய்.

அவர்கள் "மகளே! நீ பூவுலகில் கங்கையும் யமுனையும் சந்திக்கின்ற இடத்தில் அத்திரிகை யென்ற மீனின் வயிற்றிற் பிறப்பாய். பராசரருடன் சேர்ந்து உயர்ந்த புதல்வனைப் பெறுவாய். அவன் வேதங்களை நான்காக வகுப்பான். சந்தனுவுக்கு மனைவியாக ஆவாய். இரு புதல்வர்களைப் பெற்று நீ மீண்டும் உன் உலகுக்கு வருவாய்" என்றார்கள்.

அச்சோதை என்ற நீ இப்போது சத்தியவதியாகப் பிறந்தனை. பிரம்ம சாபத்தால் அத்திரிகை என்ற தெய்வமாது மீனாகப் பிறந்தாள். உபரிசரவசுவின் வீரியத்தை அது விழுங்கிற்று. அதனால் நீ பிறந்தாய். ஆதலால் நீ வசுவின் மகள் என்றார்.

சத்தியவதிக்கு முற்பிறப்பின் நினைவு வந்துமகிழ்ச்சியுற்றாள். பராசரர் "மாதரசே! உன்னிடத்தில் ஒரு மேலான கருவைத் தருவதற்கு விரும்புகிறேன்" என்றார். அவள் அது கேட்டு நாணமுற்றாள்.

"பெருந்தகையே! அக்கரையில் முனிவர்கள் நம்மைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். தண்ணீரில் சேர்வது பிழை. நான் கன்னிகை. கன்னித் தருமம் கெடக்கூடாது. உங்கள் கட்டளையை மீறமாட்டேன்" என்றாள்.

(தொடரும்)





சென்னை பூந்தண்மலிக்கு அடுத்த திருமழிசை ஒத்தாண்டேசுவரர் கோயிலில் நிகழ்ந்த திருக்குட முழுக்கு விழாக் காட்சிகள்.

# ஸ்ரீராமாயண ரஸப்ரவாகம்

மகாவித்துவான். ஸ்ரீமத். பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள்
(காஞ்சிபுரம்.)

வான்மீகி நாரத ஸம்வாதத்தில் "க:வித்வாந்?" என்கிற ஒன்பதாவது வினு இனி விவரிக்கப்படுகிறது. வித்வாந் என்னுஞ் சொல்லுக்கு 'அறிந்தவர்' என்று பொருள். எதையறிந்தவர் என்று கேள்வி பிறக்கும்; எல்லாமறிந்தவர்க்கே வித்வானென்று பெயர் வழங்கும். உலகத்தில் மனிதனுகப் பிறந்தவன் ஏதேனு மொன்றையோ சிலவற்றையோ அறியாமலிருக்க முடியாது; அன்னவர்களையெல்லாம் வித்வானென்று வழங்குவதில்லை. அனேக சாஸ்திரங்களை விசேஷமாக அறிந்தவர்களையே வித்வானென்று வழங்குவர். வான்மீகி முனிவரின் வினக்களுக்கு மேலே விடையளிக்கின்ற நாரதர் சுலோகத்தினுல் இராமபிரானது வித்வத் தன்மையை விவரித்திருக்கின்றூர். 'நான்கு வேதங்களென்ன, அவற்றுக்கு ஏற்பட்டுள்ள ஆறு அங்கங்களென்ன, இவற்றின் தத்துவங்களை நன்கறிந்தவனும், தநுர்வேதத்தில் நிலைபெற்றவனும், ஸர்வசாஸ்திரங்களினுடையவும் உண்மைப் பொருள்களை யறிந்தவனும், ஞாபக சக்தியும் பிரதிபா சக்தியும் உடையவனுய் இருப்பவன் இராமபிரான்' என்பது இதனுல் தெரிவிக்கப்படுகிறது. பகவத் அம்சமாகையாலே இயற்கையாகவே ஸர்வஜ்ஞனுயிருக்கச் செய்தேயும், வஸிஷ்டமுனிவர் பக்கலிலே சிஷ்யவ்ருத்தி செய்து ஸகல வேதங்களையும் மற்றுமுள்ள ஸகல சாஸ்த்ரங்களையும் வரியடைவே ஓதியுணர்ந்தவனுதலால் இளமையிலேயே வித்வானென்று பேர் பெற்றனன். ருக்வேதம் யஜுர்வேதம் ஸாமவேதம் அதர்வண வேதம் என்கிற நான்கு வேதங்களையும் ஓதினதுமாத்திர மன்றிக்கே அவற்றின் உள்ளுறை பொருள்களையுமறிந்தவனும் இராமன். சிக்ஷா வியாகரணம் சந்தஸ் நிருக்தம் ஜ்யோதிஷம் கல்பம் என்கிற வேதாங்கங்கள் ஆறையும் அறிந்தவனும்.

இராமனது வித்வத்தன்மையில் தோன்றும் ஆக்ஷேபம்,

இதை நாம் ஆராயும்போது ஒரு சங்கை தோன்றும்; ஸாக்ஷாத் நாராயணனுன இராமன் தான் ஸகலவேதங்களினுலும் பிரதிபாதிக்கப் படுபவன் என்பது விவாதமற்ற விஷயம்; ஆரணிய காண்டத்தில் இராமனை விராதன் தோத்திரம் செய்யும்போது,

> "வேதங்கள் அறைகின்ற உலகெங்கும்
> விரிந்தனவுன்
> பாதங்க ளிவையென்னில் படிவங்க
> ளெப்படியோ?
> ஓதங்கொள் கடலன்றி யொன்றினு
> டொன்றுவ்வாப்
> பூதங்கள் தொறும் உறைந்தால்
> அவையுன்னைப் பொறுக்குமோ?"

என்கிறன். மேலே கவந்தன் தோத்திரம் செய்யும் போதும்,

> "ஆதிப்பிரமனும்நீ ஆதிப் பரமனும்நீ
> ஓதி யுறுபொருளுக்கு அப்பாலுண்
> டாயினும்நீ,
> சோதிச் சுடர்ப்பிழம்பு நீயென்று
> சொல்லுகின்ற
> வேதம்உரை செய்தால் வெள்காரோ
> வேறுள்ளார்?"

என்கிறன். இப்படி இராமனைத் தோத்திரஞ் செய்பவர்கள் யாவரும் அவனை வேதவேத்யனுகவே சொல்லித் துதிக்கின்றூர்கள். வேத முதற்பொருளாய் ஸகல சாஸ்த்ரஸாரப் பொருளாய் விளங்குமிராமன் வேதங்களையும் சாஸ்த்ரங்களையும் கற்கவேணுமோ? அவற்றின் உண்மைப் பொருள்களை யுணர்ந்தானென்றுல் 'ஸகல வேதங்களுக்கும் ஸகல சாஸ்த்ரங்களுக்கும் நாமே பொருள்' என்று உணர்ந்தானென்றுதானே பொருள் கூறவேண்டும்.

தன்னைப் பற்றித் தோன்றிய சாஸ்திரங்களைத் தானே கற்பனே? உண்மையுணர்ந்த வஸிஷ்டமுனிவர்தாம் கற்பிப்பரோ? என்றிங்ஙனே சங்கைகள் தோன்றும்.

மேற்கூறிய ஆக்ஷேபத்திற்குப் பரிகாரம்:

இவற்றிற்கு ஸமாதானம் கேண்மின்; விஷ்ணுவும் நாராயணனுமான பரமபுருஷனே ஸ்ரீராமனாக வந்து அவதாரம் பண்ணினனென்கிறவுண்மையை யாரும் அபலாபம்செய்ய முடியாது. இராமனை ஒரு மனிதனாகவே வைத்துப் பேசுகின்ற வான்மீகிமுனிவரும்சில விடங்களில் இராமன் விஷ்ணுவின் அவதாரமே யென்பதை வெளியிட்டார்; அங்ஙனே யுள்ள ஒன்றிரண்டிடங்களை யெடுத்துக் காட்டுகிறோம். தசரதமன்னவன் புத்தரகாமனுய் வேள்வியியற்றும்போது அங்கு வந்து சேர்ந்த தேவர்கள் அனைவரும் இராவணனது நலிவுகளைக்கூறி வருந்துகையில், ஸ்ரீமகாவிஷ்ணு அவ்விடம் வந்து தோன்றி அத்தேவர்கட்கு அபயமளித்து மறைந்ததாகச் சொல்லிற்று.

யுத்தகாண்டத்தில் நூற்றிருபதாம் ஸர்க்கத்தில் (பிராட்டி அக்னிப்ரவேசம் செய்யும் பிரகரணத்தில்), ஸகல தேவர்களும் இராமபிரானை யணுகி, இராமா: ஸர்வேச்வரனென்பதை அறியகில்லாயோ? என்றார்கள். இதற்கு இராமன் கூறுகின்ற விடை குறிக்கொள்ளத் தக்கது. ''ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம்'' என்று இராமன் மறுமொழி கூறியுள்ளான். இது வெகு சமத்காரமான மறுமொழியாகும். ஸத்யவாதிகளில் தலைவனான இராமன் 'நான் நாராயணனல்லேன்' என்று சொல்லிக்கொள்ளமாட்டான்; 'நாராயணன்தான் நான்' என்று உண்மையைச் சொல்லிக்கொண்டால் ரஸபங்கமாகும். இப்படி ரஸபங்கமுமாகாமல் பொய்சொன்னதுமாகாமல் வெகு சாதுரியமாக அளிக்கும் விடை ''ஆத்மாநம் மாநுஷம் மந்யே'' என்பது. 'நான் நாராயணனுயினும், இப்போது ஸாமான்ய மானிடக்கோலம் பூண்டு வந்திருக்கிறேன்' என்று தானே தன்தன்மையை வெளியிட்டானுயிற்று, இராமன்.

இப்படிப்பட்ட மநுஷ்யபாவனைக்குச் சேரவே ஸ்ரீராமாயண கதைகள் பெரும்பாலும் நடைபெற்றிருக்கின்றன. அயோத்யா கண்டத்தில் இராமன் தந்தையாரிடம் யுவராஜபட்டாபிஷேகத்திற்கு நியமனம் பெற்றுச் சில சடங்குகள் அனுஷ்டித்ததாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. ''ஸஹ பத்ந்யா விசாலாக்ஷ்யா நாராயண முபாகமத்'' என்று, தானும் பிராட்டியுமாக நாராயணனைத் தொழுததாகச் சொல்லிற்று. அன்றியும் ''மஹதே தைவதாயாஜ்யம் ஜுஹாவ ஜ்வலிதே அநலே'' என்று மஹத்தான வொரு தேவதைக்கு ஹோமம் பண்ணினதாகவும் சொல்லிற்று. யுத்தகாண்டத்தில் இராவணனை வதைக்கும் பொருட்டு அகத்திய முனிவர்பக்கல் ஆதித்ய ஹ்ருதயோபதேசம் பெற்றதாகவும் சொல்லிற்று. இப்படிப்பட்ட பல விஷயங்களைப் பொருந்தவிட வேண்டுமானுல் இராமனை ஸ்ரீமந் நாராயணமூர்த்தியாகவே வைத்துப் பொருந்தவிட முடியாதன்றே. ''ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம்'' என்கிற அவன்றன்னுடைய வாய்மொழியின்படி தசரதாத்மஜனை ஒரு மனுஷனென்றே வைத்துப் பொருந்தவிடவேண்டும். இராமன் வேதங்களையும் வேதாங்கங்களையும் வேதாந்தங்களையும் ஓதினனென்னும் விஷயத்தையும், ஸ்ரீமஹா விஷ்ணுவுக்கு ஆதாரமான யஜ்ஞங்களை நடத்தினனென்னும் விஷயத்தையும் இவ்வழியானே பொருந்தவிடக்குறைவில்லை. ஆகவே இராகவன் வேதவேதாங்கங்களையோதி வித்வானென்று பேர் பெற்றதில் யாதொரு குறையுமில்லை யென்க.

இனி வித்வாந் என்பதற்கு மற்றொருவகையாகவும் பொருள் கூறலாம். ஸர்வஜ்ஞன் என்றபடி, எம்பெருமானுன நாராயணனுக்குள்ள ஸர்வஜ்ஞத்வத்தைச் சொன்னபடி. அவனுக்கு பகவாந் என்று பெயர். ஞானம் சக்தி பலம் ஐச்வரியம் வீரியம் தேஜஸ் என்கிற ஆறு குணங்களுக்கு பகம் என்று பெயர்; அக்குணங்களுடைமை பற்றிப் பகவானென்கிறது. இக்குணங்களுள் முதலது ஞானம்; அதாவது, ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தர சதகத்தில் பட்டர் அருளிச் செய்தபடியே பிரத்யட்சம், பரோட்சம் என்கிற வாசியின்றிக்கே அனைத்தையும் கையிலங்கு நெல்லிக்கனிபோல் காணவல்லவர் என்றபடி.

உபநிஷத்துக்களில் பகவானுடைய வித்வத்தன்மை ஆச்சரியமாகக் கூறப்பட்டுள்ளது. பகவானுக்குக் கண் கிடையாது, ஆனுலும் அவன் காணுததில்லை; அவனுக்குக் காது கிடையாது ஆனுலும் அவன் கேளாததில்லை; அவனுக்குக் கை கிடையாது, ஆனுலும் எல்லாப்பொருள்களையும் எடுக்கிறுன்; அவனுக்குக் கால் கிடையாது, ஆனுல் அவன் எங்கும் விரைந்து சென்கிறுன் என்பது மேலே குறித்த உபநிஷக்வாக்யத்தின்

கருத்து. ''உள்ளுவாருள்ளிற்றெல்லாம் உடனிருந்தறிதி'' என்று திருமாலையில் தொண்டரடிப்பொடி யாழ்வாரும் அருளிச்செய்கிறார். ''கருதரிய வுயிர்க்குயிராய்க் கரந்துறையுமொரு தனி நாயகமென்றால் உன்பெருமைக் களவாமோ?'' என்று, திருவரங்கக் கலம்பகம் ஸ்ரீபிள்ளைப் பெருமாளையங்கார் பணித்தபடி, எங்கும் நிறைந்துறையும் பரம்பொருளான பெருமான் அறியாததொன்றுண்டோ?

## எம்பெருமானுடைய ஸர்வஜ்ஞத்தின் விளக்கம்:

சிலர் ஏகாந்தமாகப் பாவங்களைச் செய்து இதை யாரும் அறியார்களென்று நினைக்கிறார்கள். நம்மைப் போன்ற மனிதர்கள் அதை அறிய முடியாதே தவிர வித்வானென்று பெயர் படைத்த பகவானும் அறியமுடியாததுண்டோ? பகவானை ஸர்வாந்தர்யாமியென்றும், ஸர்வவ்யாபகனென்றும் உள்ளபடியறியுமவர்கள், அவன் எதையும் கைகொள் கனியாகக் காண்பவனென்ற தத்துவமறிந்து புத்திபூர்வமாகப் பாவம் செய்யத் துணிவதில்லை. காளிதாச மகாகவி ரகுவம்ச காவியத்தில் இந்துமதீ ஸ்வயம்வரம் வருணிக்குமிடத்து கார்த்தவீர் யார்ஜுனனுடைய பெருமையை இந்துமதிக்கு அவளது தோழி யெடுத்துரைப்பதாக ஒரு சுலோகமுள்ளது. அதன் கருத்தாவது, உலகிலுள்ள மற்ற அரசர்களது ராஜ்யத்தில் குடிமக்கள் தப்புக்காரியங்கள் செய்தால் நீதி மன்றத்தில் தெரிவிக்கப்பட்டு ஸாக்ஷி விசாரணை முதலியன நடைபெற்று மெய் பொய்யாகவும் பொய் மெய்யாகவும் முடிவுபெறுவதுண்டு; இக்கார்த்தவீரியனுடைய ராஜ்யத்தில் அப்படியில்லை; யாரேனுமொருவன் தப்புக்காரியத்தை நெஞ்சால் நினைத்தாலும் அப்போதே இவ்வரசன் வில்லுங் கையுமாய் அவனெதிரே வந்து நின்று அவனைச் சிக்ஷிக்குமவன் என்றது. அற்பனான ஓரரசனது பெருமையிதுவானால், உபநிஷத்துக்களில் புகழப்பட்ட அற்புதமான ஞான சக்திகள் வாய்ந்த பகவானது பெருமையைப் பற்றிச் சொல்ல வேணுமோ?

கஜேந்திராழ்வான் முதலைதன்னுடன் லடர்ப்புண்டபோது ''பரமா பதமாபந்நோ மநஸா அசிந்தயத் ஹரிம்'' என்னும்படி நெஞ்சால் நினைத்தவளவிலும் அதே க்ஷணத்தில் அதையறிந்து திருநாட்டிலிருந்து அரைகுலையத் தலைகுலைய ஓடிவந்து காத்தருளின பெருமானது அறிவின் கனம் யாரே அறிகிற்பார்?

## வித்வாந் விபச்சித் தோஷஜ்ஞ:

'வித்வாந்' என்பதற்கு உலகில் ஒரு பொருள் கூறுவதுண்டு; (அதாவது) ''வித்வாந் விபச்சித் தோஷஜ்ஞ:'' என்ற அமரகோசத்தின்படி தோஷங்களையறியுமவன் வித்வானெனப்படுவன். வித்வானுயிருந்தால் பெரும்பாலும் குணங்களை க்ரஹிப்பதன்றிக்கே தோஷங்களை க்ரஹிப்பதேயுள்ளது; ஒரு பண்டிதர் ஒரு நூலையியற்றி ஒரு வித்வானிடம் கொடுத்து அதைக் கடாக்ஷிக்கவேணுமென்றாராம். அவர் வெகு நாழிகை அதைப் பார்த்துக்கொண்டேயிருந்தாராம். 'ஏதாவது தோஷம் அகப்படுமா வென்றுபார்க்கிறீரோ?' என்று பண்டிதர் கேட்க, அதற்கு அந்த வித்வான் விடைகூறினாராம். 'இல்லையில்லை; ஏதாவது குணம் அகப்படுமா வென்றுதான் பார்க்கிறேன்' என்றாராம். உள்ளதெல்லாம் தோஷமேயொழியக் குணமொன்றுமில்லையென்று சொன்னாராயிற்று. பெரும்பாலும் வித்வான்களுடைய முறை இதுவாகும். இராமபிரானை வித்வானென்னும்போது இந்த ரீதி கொள்ளத்தக்கதன்று. இராமன் லோக விலக்ஷணனான வித்வானவன். இவன் குணஜ்ஞனான வித்வானே யொழிய தோஷஜ்ஞனான வித்வானல்லன். இத்தன்மையை ஒரு ப்ரகரணவிசேஷத்தில் வெளியிட்டருளினன் இராகவன். எங்கே யென்னில்;

## பெருமாள் குற்றங்குறைகண்டு கைவிடுபவரல்லர்:

விபீஷணாழ்வான் வானரமுதலிகளை நோக்கி ஓலமிட்டு அடைக்கலம் புகுந்தவன்று இரண்டு பக்ஷங்கள் தோன்றின; இவன் துஷ்டனாகையாலே அங்கீகரிக்கத்தக்கவனல்லன் என்பது ஒரு பக்ஷம்; அது சுக்ரீவ மஹாராஜர் முதலானோருடையது. இவன் துஷ்டனல்லாமையாலே அங்கீகரிக்கத்தக்கவனே யென்று மற்றொரு பக்ஷம். இது மாருதியினுடையது. இவற்றில் முந்தின பக்ஷத்தைத் தள்ளிப் பிந்தின பக்ஷத்தை இராகவன் ஆதரித்ததாக உலகில் இராமாயணம் கேட்பவர்களும் சொல்பவர்களும் நினைத்திருக்கிறார்கள். இப்படியன்றிக்கே, பெருமாள் ஸுக்ரீவாதிகளின் பக்ஷத்தோடொப்ப மாருதி பக்ஷத்தையும் கண்டித்து மூன்றாவதாக ஒரு விலக்ஷண பக்ஷத்தைத்தாம் வெளியிட்டதாக அபயப்ரதானஸாரத்தில் தேசிகன் அற்புதமாக அருளிச் செய்கிறார். அந்த மூன்றாவது பக்ஷம் எதுவாயிருக்குமென்று வித்வான்கள் தம்தம் உள்ளத்தில் சற்று ஆலோசித்துப் பார்க்க

வேண்டும். விபீஷணுழ்வானைக் கொள்ளலாகா தென்று ஒரு பக்ஷம்; அவனைக் கொள்ளலா மென்று மற்றெரு பக்ஷம். இவ்விரண்டு பக்ஷங்களுக்குமேல் மூன்ருவதான வொரு பக்ஷம் எங்ஙனே ஸம்பவிக்கமுடியும்? என்றே ஒவ்வொருவரும் தளும்பியிருப்பர் கள். தார்க்கிக கேஸரியான தேசிகன் அருளிச் செய்யுமழகுபாரீர்; விபீஷணனைக்கொள்ளலாம் கொள்ளலாகாது என்கிற இவ்வளவே இங்கு விஷயமன்று. கொள்ளலாம் என்கிற பக்ஷத் தில் எது ஹேதுவாகச் சொல்லப்படுகிறது? கொள்ளலாகாதென்கிற பக்ஷத்தில் எதுஹேது வாகச் சொல்லப்படுகிறது? என்று பார்க்க வேணும். துஷ்டனுகையாலே கொள்ளலா காது என்பது முந்தின பக்ஷம். யோக்யனுகை யாலே கொள்ளலாம் என்பது பிந்தினபக்ஷம். 'துஷ்டனுகையாலே கொள்ளலாம்' என்ற வொரு பக்ஷம் இவ்விரண்டிலும் வேறுபட்ட தாகவே யன்றேவுள்ளது. துஷ்டனுகை யாலே கொள்ளலாகாது என்கிற ஸுக்ரீவாதி பக்ஷத்தையும் தள்ளி, யோக்யனுகையாலே கொள்ள வேணுமென்கிற மாருதி பக்ஷத்தை யும் தள்ளி, துஷ்டனுகையாலே கொள்ள வேணும் என்று பெருமாள் மூன்ருவது பக்ஷம் காட்டி நாட்டினதாக தேசிகன் திரு வுள்ளம் பற்றுகிருர். ஸ்ரீராமாயணத்தில் இந்த ப்ரகணத்தில் "தோஷா யத்யபி தஸ்ய ஸ்யாத் ஸதாம் ஏததகர்ஹிதம்" என்றுள்ள ச்லோ கமே இதற்கு நிதானம். 'தோஷ மிருந்தா லென்ன? அது கிடக்கட்டும்' என்று சொல் லுவதாக ச்லோகத்தின் பொருள் தோன்றும். தேசிகன் 'யத்யபி' என்பதை வெறும்வாக்யா லங்காரமாகத் தள்ளிவிட்டு 'தோஷ; தஸ்ய ஸ்யாத்'—தோஷம் அவனுக்கு இருக்க வேணும்; என்பதாகப் பொருள்காட்டியருளு கின்ருர். தோஷமில்லாதவனைக் கைக்கொண் டால் நமது கருணைக்கு என்ன மதிப்பு? என் பது இராகவன் திருவுள்ளமாம். உலகர்கள் கைவிடுவதற்காகத் தோஷம் காண்பார்கள்; இராகவன் கைக்கொள்வதற்காகத் தோஷம் காண்பான் என்றும் கொள்ளலாம். ஆகவே அமரகோசத்தில் சொன்னபடி 'தோஷஜ்ஞ; வித்வாந்' என்கிற வித்வத்தன்மையும் இராமனிடத்தேயுண்டு என்னலாம்.

"குன்றனைய குற்றஞ் செயினுங் குணங் கொள்ளும்" என்ற பொய்கையாழ்வார் பாசுரத்தின்படி குணங்கொள்ளுமியல்வின னை இராமன் குற்றங்களை நெஞ்சிற்கொள் ளான் என்பது முண்டு; வாத்ஸல்ய குணத் திற்கு நிதியான இராமன் தோஷங்களையே பற்றுசாகக் கொண்டு கைக்கொள்வான் என் பதுமுண்டு. ஆக இவ்விஷயங்களெல்லாம் "க; வித்வாந்?" என்கிற கேள்வியில் அடங்கி யுள்ளன வென்றுணர்க.

---

## சைவ சித்தாந்த சாத்திர வகுப்பு.

ஸ்ரீ ஜகத்குரு சாந்ததேவ சாரங்க தேசிகேந்திர சுவாமிகள் அருளாணையின் வண்ணம், கும்ப கோணம் பெரியமடம் பிரச்சார மண்டபத்தில், சிவப்பிரகாசர் செந்தமிழ்ச் சங்கத்தின் சார்பில், 23—5—68 தேதி முதல் திருவாவடுதுறை ஆதீன வித்வான் சித்தாந்த சைவமணி திரு த. ச. மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்களால் நடத்தப்பட்டு வந்த "திருவுந்தியார்" என்னும் நூல் வகுப்பு 2—6—68 தேதி ஞாயிறு இரவு 8½ மணியுடன் பூர்த்தியடைந்தது. அவ்விழாவிற்குக் குடந்தைச் சிவனடியார் திருக் கூட்டத்தின் தலைவர் திரு பி. டி. எஸ். சிங்காரம் செட்டியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். வகுப்பு நடத்திய சித்தாந்த சைவமணி திரு த. ச. மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்களுக்குத் தலைவர் திரு சி. ராமசாமி முதலியார் B.A. B.L., அவர்கள், அன்பர்களின் காணிக்கைகளைக் கொண்டு சன்மானம் வழங்கினுர்கள். திரு எஸ். கே. சொக்கலிங்கம் செட்டியார், திரு சி. பழனியப்ப முதலியார், திரு எஸ். சுந்தரேசன் செட்டியார் B.A. L.T., வித்வான் திரு வீ. ச. நடராசன் ஆகியவர்களின் பாராட்டுரைக்குப் பின், தலைவர் சி. ராமசாமி முதலியார் அவர்கள் நன்றி கூற, இறைவாழ்த்துடன் விழா இனிது நிறைவுற்றது.

—ஆசிரியர்

# திருவரங்கத்தின் சிறப்பு

திருமலை நல்லான் இராமகிருஷ்ணையங்கார், சென்னை.

"உகந்தருளின நிலம்" என்று வழங்குவதற்கு முற்றிலும் தகுதியுடையது ஸ்ரீரங்கமே. எவருடைய வேண்டுகோளும் இன்றித் தானாகவே அங்கு வந்து உகந்து எழுந்தருளியிருக்கின்றான் எம்பெருமான். நெடுங்காலம் பிரமன் ஆராதித்து வந்த பரமனை இக்ஷ்வாகு மன்னன் தவம் செய்து பெற்றான். அவனது வழி வழியாக வந்த மன்னர்கள் தொடர்ந்து அப்பரமனை வழிபட்டு வந்தனர். விபீடணற்கு வேறாக நல்லானான இராமபிரான் பட்டாபிஷேகமானதும் தன் குலதனமாக அப்பரமனை விபீடணற்கு மனமுவந்து அளித்துவிட்டான். விபீடணனையும் இக்ஷ்வாகு வம்சத்தில் சேர்ந்தவனாகவே இராமபிரான் கருதுகிறான். நம் வம்சத்தைச் சேர்ந்த சிரஞ்சீவியான விபீடணனே நம் குலச் சொத்தாகிய பெருமானை வழிபட்டு வரவேண்டும் என்பது இராமபிரானது திருவுள்ளம்.

சரணடைந்த விபீடணனை நோக்கி 'அரக்கர்களின் பலாபலத்தைப் பற்றி உள்ளபடியே எனக்குக் கூறுக' என்றுபேசுவதிலிருந்து அவன் அரக்கரைச் சேர்ந்தவன் அல்லன்; தன்னைச் சேர்ந்தவனே என்று இராமபிரான் கருதுவது புலனாகிறது. "பெருமாள் இக்ஷ்வாகு வம்ச்யராக நினைத்து வார்த்தையருளிச் செய்தார்" என்று ஸ்ரீவசனபூஷணம் கூறுவது காண்க.

விபீடணனோடு தாம் ஏழு ஸகோதரர்களாகி விட்டதாகவும், இந்த ஏழாவது பிள்ளையோடு தந்தை தயரதன் நிறைவு பெற்றுவிட்டதாகவும், இராமபிரான் வெளிப்படையாகவே கூறியதாகக் கம்பர் பாடல் அமைத்துள்ளார். அப்பாடல் நயந்து வியந்து போற்றத்தக்கதாயுள்ளது.

"குகனொடும் ஐவரானேம்
முன்பு; பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவ ரானேம்;
எம்முழை யன்பின் வந்த
அகனமர் காதல் ஐய
நின்னொடும் எழுவ ரானேம்
புகலருங் கானம் தந்து
புதல்வராற் பொலிந்தான் உந்தை"
(குன்று சூழ்வான் மகன்—
சூரியன் மகனான ஸுக்ரீவன்;
எம்முழை—எம்மிடம்)

தயரதன், தானே பெற்றெடுத்தான் புதல்வர் நால்வரை; அதற்காக அவன் பெரு வேள்விகள் புரிந்து அரும்பாடு பட்டான். பின்பு அவனே இராமன்மூலம் கண்டெடுத்தான் புதல்வர் மூவரை. அதற்காக அவன் எவரும் புகவொண்ணாக்கொடிய கானகத்திற்கு ஆருயிர் மைந்தனைப் போகும்படிச் செய்து படாதபாடுபட்டான். வேள்விகள் புரிந்தது புதல்வரைக்கருதி; கானகத்திற்கு அனுப்பியதோ அங்ஙனமன்று; நிர்ப்பந்தத்தால் நேர்ந்தது. ஆயினும் அது மூன்று நற்புதல்வரை நல்கிவிட்டது. "இத்தகைய புதல்வரைக் கண்டெடுப்பதற்கு உபயோகப்பட்டதனால் தந்தை என்னைக் கானகத்திற்கனுப்பியது நல்லதாயிற்று. இன்றேல் எங்ஙனம் உன்னை அடைந்து களிக்க இயலும்" என்னுங் கருத்துப்பட "கானம் தந்து" என்கிறான். இராமன் விபீடணனை நோக்கி "ஏவி" என்னாது "தந்து" என்றதைக் கவனிக்க. கானத்தைப் "புகலரும்" என்று விசேடித்தது, தயரதன் காட்டிற்கு அனுப்பியதிலுள்ள அருமையைக் காட்டுகிறது.

இப்பாடலில் "உந்தை" என்னும் சொல் அமைந்த அழகை என்னென்பது! விபீடணனை நோக்கி உன்னுடைய தகப்பன் என்றான் தயரதனை அவன் திருமகன். நம்முடைய தகப்பன் என்று கூடச் சொல்லவில்லை. தான் சகோதரனாகப் பாவிப்பதனால் விபீடணன் தயரதனுக்கு மகனாவதாக இராமன் கருதவில்லை; தன்னிடம் ஸஹோதர வாஞ்சை காண்பிக்கும் ஒருவனைத் தன்னைக் காட்டிற்கு அனுப்புவதன் மூலம் தயரதனே தந்தான் என்றுதான் அவன் கருதுகிறான். கருதவே பரதன் முதலியோர் போலத் தந்தையால் தனக்கு கிடைத்த ஸஹோதரனாகவே விபீடணனைக் கொள்கின்றான் இராமன். "இளையவற் கவித்த மௌலி எள்ளையும் கவித்தி என்றான்" என்று, இளைய ஸஹோதரனைப் போலத் தன்னையும் கருதி அடிசூடும் அரசு தரவேண்டுமென்று வேண்டுவதனால் ஸஹோதரனைப் போல ஆக ஆசைப்படுவதுகண்டு விபீடணனைத் தன் ஸஹோதரனாகவே ஏற்றுக் கொள்கிறான் இராமன். உன்னோடு நாம் ஏழு ஸஹோதரர்களாகி விட்டோம் என்கிறான்.

கடைக் குட்டியாய்ச் செல்வப் பிள்ளையாய் அமைந்தது பற்றி "புதல்வராற் பொலிந்தானுந்தை". என்கிறான். பொலிவு நிறைவு. "செல்வ விபீடணன்" என்றும் "ஸ்ரீமாந்" என்றும் போற்றப்படும் விபீடணன் செல்லப் பிள்ளையாயிருப்பது பொருத்தந்தானே. விபீடணனிடமுள்ள செல்வம் சரணாகதியே. அச்செல்வத்தின் பயனைக் கைம்மேல் பெற்று அநுபவிக்கிறான் அவன். இராமனும் அச்செல்வம் பெற இச்சை கொள்கிறானெனின் அதன் சிறப்பை எங்ஙனம் சொல்வது! ஸமுத்ர ராஜனை நோக்கிச் சரணாகதி செய்து பார்க்கிறான் இராமன்; ஏமாற்றமே ஏற்படுகிறது. எல்லோரும் செல்வம் படைத்தவர்களாகி விடமுடிகிறதா. செல்வம் படைத்த இத்தகைய பிள்ளையைப் பெறுவது தந்தைக்கு நிறைவே அன்றோ? "பிள்ளையினாலன்றோ மனிதன் நிறைவு பெறுகிறான்" என்று வேதம் ஓதுகிறது.

"சேராதன உளவோ பெருஞ் செல்வர்க்கு." செல்வ விபீடணற்கு இக்ஷ்வாகு மன்னர் குலச் செல்வமும் வந்து கூடுகிறது. இக்ஷ்வாகு வம்சத்தோடு இணைந்து இந் நில உலகில் சிரஞ்சீவியாய் நிலை நிற்கப் போகும் விபீடணனே நம் குல தனமான பெருமாளை என்றும் ஆராத காதலுடன் ஆராதிக்கும் தகுதியுடையவனென்றும், அவனிடம் கொடுத்தருளினான் இராமபிரான். "ஆராத காதல் ஐய" என்று விளிக்கப்படுமவனுக்கு இது தக்க பரிசேயன்றோ?

ஆராத காதலுடையவனாதலின் இராமபிரானை விட்டுப் பிரிய இயலாதவனாயினான் விபீடணன். அவனது பிரிவாற்றாமை தீரத் தனக்குப் பிரதிநிதியாகத் தான் ஆராதித்து வரும் பெருமாளையே கொடுத்தனுப்பினான் இராமன். பெருமாளைப் பெற்றதும் ஆற்றாமை தீர்ந்து விடுகிறது விபீடணனுக்கு. பெற்றுக்கொண்டபெருமாளையும் கொடுத்த இராமனையும் வேறாக அவன் கருதவில்லை. இவ்வுலகை நீங்கி மேலுலகத்திற்கு இராமன் போகும்போது இராமனைப் பின் தொடராதவர் சிறந்த இராமபக்தர்களாகிய அந்த விபீடணனும் அநுமானுமேயாவர். இவ்விருவரும் இராமனுக்குச் சிறந்த பணி புரிந்த பெருந்தகையாளர்கள் முக்தியை ஒரு பொருளாக மதிக்காது வெறுப்பவர்கள். இராமனைப் பிரிந்தும் வருந்துதலின்றி இந்நிலவுலகில் வாழ்கின்றார்கள். அதற்குக் காரணம் இராகவனுக்குப்பதிலாக அவனிடமிருந்தே கிடைத்த பெருமாளை அநுபவித்துக் கொண்டிருப்பதுதான். விபீடணனும் அநுமானும் அர்ச்சை உருவில் ஸ்ரீரங்கத்தில் பெருமாளை இன்றும் அநுபவித்துக் கொண்டிருக்கின்றனர். இவ்விஷயம் ஸ்ரீபராசர பட்டர் அருளிய ஸ்ரீரங்கராஜ ஸ்தவம் பூர்வசதகம் 57ஆம் சுலோகத்தில் காணத் தக்கது.

இராமபிரானிடமிருந்து பெருமாளைப் பெற்றுக் கொண்ட விபீடணன் இலங்கை நோக்கிப் போகும்போது இரண்டாற்றுக்கு மிடையே அழகியதோர் இடம் கண்டு மன மகிழ்வு கொண்டு, பேராது மன்னி அங்கேயே உறைந்துவிட்டான் எம்பெருமான். இலங்கைக்கு எழுந்தருளப் பண்ணிக் கொண்டுபோக முடியவில்லையே என்கிற குறை, விபீடணற்குத் தோன்றுதவாறு

இலங்கையை இங்கிருந்தே நோக்கிக் கொண்டிருக்கிறுன், எம்பெருமான். இங்ஙனம் பரமன்தானே உகந்து எழுந்தருளியுள்ள இடமாதலின், இத்தலத்துக்கு ஸ்ரீரங்கம் என்கிற பெயர் அமைந்தது. ''ரங்கம்'' என்பதற்கு மனத்தைக் களிப்பிக்கும் இடம் என்பது பொருள். ''ஸ்ரீ'' என்பது சிறப்புப் பற்றி வந்த அடைமொழியாகும். எம்பெருமான் எத்தனையோ இடங்களில் களிப்புடன் எழுந்தருளியிருக்கிறுன். பாற்கடலில் எழுந்தருளியிருக்கிறுன்; சூரிய மண்டலத்தில் எழுந்தருளியிருக்கிறுன்; யோகியர் உள்ளத்தில் எழுந்தருளியிருக்கிறுன். இவையனைத்தும் அவனுக்குக்களிப்பூட்டும் இடங்களே. இவை எல்லாவற்றையும்விட இரண்டாற்றுக்குமிடையே அவன் திருவுள்ளம் மிகவும் களிப்புறுகின்றது. ஆதலால் அவ்விடத்துக்கு ''ரங்கம்'' என்கிற பேர் அமைந்தது.

> ''க்ஷீராப்தேர் மண்டலாத் பானோ
> யோகிநாம் உறகுதயாதபி
> ரதம் கதோ உரிஸ் தத்ர
> தஸ்மாத் ரங்க மிதி ஸ்ம்ருதம்.

என்கிற பிரமாணம் காண்க. இங்ஙனம் உகந்தருளின நிலங்களில் உயர்ந்ததோரிடத்தைப் பெற்றுத் திகழ்கிறது ஸ்ரீரங்கம் என்க.

இத்தகைய புராண வரலாறு கொண்ட ஸ்ரீரங்கம் மிகத் தொன்மை வாய்ந்தது. பண்டைய தண்டமிழ் நூல்களிலும் வடமொழிப் புராணங்களிலும் போற்றப்படும் பெருமை வாய்ந்தது. ''தொன்மையூர்'' என்று குறிப்பிடுகிறுர் இவ்வூரைத் திருமங்கை மன்னன். ''தொன்மையூர் பழையதான கோவில், கண்ணனூர் என்கிற திருவாய்ப்பாடி போலே பழையதாய்ப்புராண பந்தமுமா (புராணங்களிலே சொல்லப்பட்டது)யிறே இருப்பது'' என்பது பெரியவாச்சான்பிள்ளை அதற்கு இட்டருளிய வியாக்யானமாகும்.

''திருவரங்கம் என்பதுவே என் திருமால் சேர்விடமே''. (பெரியாழ்வார் திருமொழி 4 : 8 : 5) என்னுமிடத்து மணவாளமாமுனிகள் ''பல புராணங்களிலே ப்ரசஸ்தமாய்'' என்று வியாக்யாநம் அருளியிருப்பதும் அறியத்தக்கது. திருவரங்கம் என்பதைத் திருமால் சேர்விடமென்று பெரியாழ்வார் விளக்கியிருப்பதும், மணவாளமாமுனிகள் ''ஸ்ரீய: பதியானவன் பரமபதாதிகள் எல்லாவற்றையும் காட்டில் விரும்பி விடாயர் மடுவிலே சேருமா போலே சேருகிற ஸ்தலம்'' என்று அதற்கு வியாக்யாநம் செய்திருப்பதும் அறிந்து இன்புறற்பாலன. காருட புராணத்தில் உள்ள ஸ்ரீரங்க மாஹாத்ம்யக் கதை ஒன்று தற்செயலாக நேரும் நற்செயலுக்கு (யாத்ருச்சிக ஸுக்ருதத்துக்கு) எடுத்துக்காட்டாக மணவாள மாமுனிகளால் ஸ்ரீவசன பூஷண வியாக்யாநத்தில் 382ஆம் சூத்திரத்தில் காட்டப்பட்டுள்ளது. ஆக இவற்றுல் பூர்வாசார்யர்கள் ஸ்ரீரங்கத்தைப் பற்றிய புராணங்களை ஆதரித்திருப்பது நன்கு புலனுகிறது.

ஆசார்யர்கள் மாத்திரமல்லர்; வண்டமிழ்முனிவர்களாகிய ஆழ்வார்களும் இத்தல புராண வரலாற்றினை ஏற்றுப் போற்றுவதைக் காண்கின்றேம். பெரியாழ்வார் ''மன்னுடைய விபீடணற்கா மதிளிலங்கை திசைநோக்கி மலர்க்கண் வைத்த என்னுடைய திருவரங்கர்க்கன்றியும் மற்றெருவர்க் காளாவரே'' (4 : 9 : 2) என்று விபீடணற்காகக் கண் திறந்து திருவரங்கன் இலங்கையைப் பார்த்த வண்ணமிருப்பதாக அருளிச் செய்திருப்பது காண்க.

சீதாப் பிராட்டியை உயிரினும் ஓம்புவர் பெருமாள். அத்தகைய பிராட்டியையும் வேண்டார் ஸுக்ரீவனைவிட நேரின். அவ்வளவு பேரன்புக்குரிய ஸுக்ரீவனே ஏற்கவொட்டாது மறுத்து, ஏற்பின் நான் விலகுவேனெனினும் அவனையும் புறக்கணித்து ஏற்கும்படியான பக்ஷபாதம் பெருமாளுக்கு விபீடணனிடத்திலே. ''செல்வ விபீடணற்கு வேருக நல்லானை (பெரிய திருமொழி 5 : 8 : 5) என்றது காண்க. அப்படிப்பட்ட விபீடணனையும் அவன் வாழும் இலங்கையையும் அதனை வளைந்த மதிளையும், என்னத்திக்கையுமே நோக்கி மலர்க்கண் வைத்திருக்கிறுனும் திருவரங்கன். அடியாளுகிய விபீடணனையும் அவன் உள்ள திக்கையும் கண்டவாறே திருவரங்கன்

கண்கள் மலர்போல் விரிகின்றனவாம். குலசேகரப் பெருமாள் "அன்பொடு தென் திசை நோக்கிப் பள்ளி கொள்ளும் அணி அரங்கன்" (பெருமாள் திருமொழி 1—10) என்றும், தொண்டரடிப் பொடியாழ்வார் "தென் திசை இலங்கை நோக்கி" (திருமாலை19) என்றும் அருளிச் செய்திருப்பதும் அறியத்தக்கன. ஸ்ரீ வேதாந்த தேசிகன் கோதாஸ்துதியில் "ரங்கபதி உறங்குபவனுயினும் மிக்க மதிப்புடன் தன் பார்வைகளைத் தென் திசையில் வைத்திருப்பதாக (11-ஆம் சுலோகம்) வருணித்திருப்பது இங்கு நம் நினைவிற்கு வருகிறது. அவர் "மலர்க்கண் வைத்த" என்ற பெரியாழ்வார் திருவாக்கையும் "அன்பொடு தென்திசை நோக்கிப் பள்ளி கொள்ளு மணியரங்கன்" என்ற குலசேகரப் பெருமாள் திருவாக்கையும் அப்படியே தம் வட மொழி நூலில் கையாண்டிருப்பது கண்டு களிக்கத் தக்கது.

ஆசார்யர்களும் ஆழ்வார்களும் ஏற்றுக் கொண்டுள்ளமையின் ஸ்ரீரங்கத்தைப் பற்றிய புராண வரலாறுகள் பழம்பெருமை வாய்ந்தவை என்பதிற் சிறிதும் ஐயமில்லை. இங்கு ஒரு விஷயம் குறிக்கொள்ளத் தக்கது. ஒரு தலத்திற்கு ஏற்றம் புராணங்களில் பேசப்பட்டிருப்பதினுலேயே என்று நாம் கருதுவதாக நினைத்து விடக்கூடாது. பண்டைப் புராணங்களிற் பேசப்படும் பெருமை கொண்டது ஸ்ரீரங்கமென்பதை நாம் காட்டினேம். அவ்வளவுதான். ஆழ்வார்கள் அனைவரும் பாடிய தலம் என்பதொன்றே அமையும், திருவரங்கத்தின் தனிப் பெருஞ் சிறப்பைக் காட்டுதற்கு.

நம் நாட்டில் புராணங்களிற் பேசப்பட்டிருந்தால்தான் தலங்களுக்கு ஏற்றம் என்கிற தவருன கருத்து நிலவிவருகிறது. இதனுல் புராணங்களில்லாத தலங்களுக்கும் புதியனவாகப் புனையப்பட்டுப் புராணங்கள் புறப்படலாயின. பிற்காலத்தவர் கற்பித்தவை தாமேயவை. பொருந்தாதனவும் எள்ளித் தள்ளி விடத்தக்கனவுமாயவை அமைந்து விடுகின்றன. ஆழ்வார்கள் பாடல் பெற்றிருக்கிற பெருமை போதாதா? முனிவரல்லாதார் புதிதாய்ப் புனைந்த கட்டுக் கதைகளை முட்டுக் கொடுத்துப் பெருமையை நிலைநிறுத்த வேண்டுமா? அது எத்தனை நாளுக்கு நிற்கும்?

ஆழ்வார்கள் பாடிய பல தலங்களுக்குச் செந்தமிழில் பெயர்கள் அமைந்து தித்திக்கின்றன. அவ்வினிமையை நுகரகில்லாது அப்பெயர்களுக்குக் காரணமும் ஏற்றி விடுகின்றனர். தாங்கள் கற்பித்த புராணங்களைப் பார்த்தே ஆழ்வார்கள் பாடினதாக உலகம் எண்ண வேண்டுமென்பது நவீன புராணகர்த்தாக்களின் நோக்கம். இதனைச் சமயம் நேர்ந்தபோது விளக்கிக்காட்டுவோம். இங்கு விரிப்பிற் பெருகும். சிறிதே காட்டியமைகிரேம்.

வைணவத்தலங்களுள், "திருத்தண்கால்" என்பது ஒரு திருப்பதி. தீந்தமிழ்ப் பெயர் அது. குளிர்ந்த காற்றுப் போன்றவ (விடாய்தீர்ப்பவ)னை இறைவன் எழுந்தருளியிருக்கும் அழகிய இடமென்பது அதன் பொருள். தண்கால் என்பது இறைவன் பெயர். அது ஆகு பெயராய் அவனுள்ள ஊரைக்குறிக்கிறது. சிறிய திருமடல்வியாக்கியானத்தில் பெரியவாச்சான் பிள்ளை இவ்விதமே விளக்கந்துள்ளார். புராணகர்த்தா திருத்தண்காலைத் திருத்தங்கல் ஆக்கி ஸ்ரீதங்காலக்ஷேத்ரமென்னும் பேரிட்டுப் பல லீலைகள் புரிகிரு்ர். இதுபோல் "தொலைவில்லி மங்கலம்" என்னும் திருப்பதி "துலைவில்லி"யாகித் துலாதநு க்ஷேத்ரமென்று பேரிடப் படுவதும், "குளந்தை" என்னும் திருப்பதி குழந்தையாகி சிசுக்ஷேத்ரமென்று பேரிடப்படுவதும் வருந்தத்தக்கனவாயுள்ளன. நிற்க.

ஸ்ரீரங்கம் திருமலை முதலிய திருப்பதிகளுக்கு இயல்பாகவே புராணங்கள் இருப்பது யாவருமொப்புக் கொள்ளத்தக்கதே. விமானத்தோடு பெருமாள் பிரமனுலகமாகிய ஸத்ய லோகத்திலிருந்ததும், பின்னர் இக்ஷ்வாகு மன்னர் நகரமாகிய அயோத்தி வந்து வீபீஷணனுக்காக அதினின்றும் வெளியேறி ஸ்ரீரங்கத்திற் பள்ளி கொண்டிருப்பதும், குலசேகரப் பெருமாள் திருமொழிப் பாசுரத்திற் பேசப்பட்டிருப்பதாக பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானம் செய்திருக்கிரு்ர்.

"வன்பெருவா னகமுய்ய வமரர் உய்ய
மண்ணுய்ய மண்ணுலகில் மனிசர் உய்ய"

என்னுமிடத்து "அங்கு உண்டான ப்ரம்ம மாதிகள் உஜ்ஜீவிக்கலாயிற்று ப்ரம்ம லோகத்திற் கோயிலாழ்வார் எழுந்தருளி யிருந்தபடி. ஸ்ரீவிபீஷணாழ்வானுக்காக அங்கு நின்றும் இங்கேற எழுந்தருளுகை யாலே பூமியும் பூமியிலுண்டான சேதநரு முஜ்ஜீவிக்க" என்பது காண்க.

இங்குக் குறிக்கொள்ளத்தக்கது ஒன்று. பிரமன் உலகிற் பெருமாள் நெடுங்கால மெழுந்தருளியிருந்திருக்கிறார். அங்கு "ஸ்ரீரங்கம்" என்கிற திருநாமம் ஏற்பட வில்லை. அங்ஙனமே அயோத்திக்கும் அப் பெயர் அமையவில்லை. தற்சமயம் எழுந் தருளியிருக்குமிடத்துக்கே அப்பெயர் அமைந்திருக்கிறது. ஏன்? இந்த இடம் மாதிரி அந்த இடங்கள் பெருமாளுக்கு உகந்தனவாயில்லை. உகப்பைத்தரும் இடம் தானே "ரங்கம்" எனப் பெறும். அவை கள் இந்த ஸ்ரீரங்கத்திற்கு வரும்வழியில் தங்கும் இடங்களா யமைந்தனவே யன்றிச் சொந்த இடமாய், உகந்து என்று மிருப்ப தற்கு ஏற்றனவாயில்லை. இவ்விடத்தை விட்டுப் பெருமாள் இனியெங்கும்பெயர்ந்து போகப்போவதில்லை யாதலின் இதுவே யுகந்தருளின நிலமாய் ஸ்ரீரங்கமென்று பேர் பெற்ற தென்க.

ஸ்ரீவேதாந்ததேசிகன் பாதுகாஸஹஸ்ரத் தில் இக்கருத்தினைத் தெரிவிக்கிறார். "பாது கையே! யாவராலும் கொண்டாடப்பட்ட ஸத்ய லோகத்தைப் பார்க்கிலும், ரகுகுல மன்னர்களின் இடமான அயோத்தியைப் பார்க்கிலும், காவேரியின் மணல்திட்டு, மிகவும் அதிகமான குணமுள்ளது என்று கருதுகிறேன். ஏனெனில் நெடுங்காலம் பழகிய முந்தைய இடங்களைவிட்டு உன் னால் ஸ்ரீரங்கநாதன் இவ்விடத்துக்கு எழுந் தருளப் பண்ணப்பட்டிருக்கிறான். இங் கிருந்து வேறிடத்துக்கு எழுந்தருளப்பண் ணப்படவில்லை" என்கிறார்.

ஸ்ரீரங்கத்தையே சொந்த இடமாக உகந்து கொண்டமையினால் பெருமாள் ஸ்ரீரங்கநாத னென்றே பேர் பெற்றார் அயோத்தியாதிபதி என்றோ, ஸத்யலோ காதிபதி என்றோ, பெயர் பெறவில்லை என் என்பதும் குறிக்கொள்ளத் தக்கது.

ஏனைய இடங்களைவிட எம்பெருமானுக்கு இங்கேயே உகப்பு ஏற்படுவதற்குக் காரணம் காக்கப்படவேண்டிய உயிரினங் கள் இங்கேயே நிறையக் கிடைப்பது தான். காக்கப்பட்ட உயிரினங்களோடு கூடிக்களிக்கும் இடமான பரமபதத்தை விடக் காக்கப்பட வேண்டிய உயிரினங் களைக் கிடைக்கும்படி செய்வதால் ஸ்ரீரங் கம் மிகவும்உகந்தருளுமிடமாயமைந்திருக் கிறது. இருக்கவே, நமக்கு முக்தியுலகிற் போல இறைவனுக்கு இங்கே ஆன்மலாபம் கிடைப்பதால் அவனுக்கு இவ்விடம் பரம பதமாகிறது. பேரின்பமுற்றுக்களிநடம் புரிகிறான் இறைவன். களிநடமாடும் இடமே ஸ்ரீரங்கம். ரங்கம் என்பதற்கு நர்த்தனம் செய்யுமிடம் என்பது பொருள். இவ்வாறு ஸ்ரீரங்கம் என்பதற்கு மற்றுமொருபொருள் கூறுகிறார் பெரியவாச்சான் பிள்ளை. உகக்குமிடமென்பது முந்தினபொருள். உகந்து களிநடம் புரியும் இடம் என்பது பிந்திய பொருள்.

பெரியவாச்சான்பிள்ளை குரலிலே இக் கருத்தினைக் கேட்போம். "ரங்கம் ஸ்யாந் நர்த்தனஸ்தானம்" என்று சொல்லுகிற படியே மநோரத லாபத்தாலே உகந்து வர்த்திக்கிற தேசம், நித்யவிபூதியில் குறை வாளரில்லாமையாலே, தான் குறைவாள னாயாயிற்றிருப்பது. இங்கே வந்தபின்பா யிற்று ரக்ஷயவர்க்கம் பெற்றுப் பரிபூர்ண ராய்த் திருவரங்கச் செல்வராயிற்று. நமக் குப்பரமபதம் உத்தேச்யமமாறுபோலேயா யிற்று. அவனுக்குக் கோயில் (ஸ்ரீரங்கம்) உத்தேச்யமாயிருக்கிறபடி" (ராமம்மோதனி சுலோகவியாக்கியாநம்.)

பகவானுக்கு ஸ்ரீரங்கம் பரமபதமாயிருத் தல் பற்றியே பூலோக வைகுண்ட மெனப் படுகிறது. "காவேரி விரஜையாறு; ஸ்ரீ ர ங் க வி மா ந ம் வைகுண்டவிமானம்; ஸ்ரீரங்கநாதன் பரவாஸுதேவன்; ஸ்ரீரங்கம் கண்ணெதிரே தோற்றும் பரமபதம்" என்னும் பொருள் கொண்ட "காவேரி விரஜாஸேயம் வைகுண்டம் ரங்கமந்திரம்,

ஸவாஸூதே வோரங்கேஸ: ப்ரத்யரக்ஷப்ரபம் மதம்'' என்ற ப்ரமாணம் காண்க.

பரமபதத்திலிருந்து அகல்விசும்பும் (நித்யவிபூதியும்), நிலனும் (லீலாவிபூதியும்) செங்கோல் நடாத்திய இறைவன் திருவரங்கக் செல்வனைச் செங்கோலேந்தி அவ்வுபய விபூதியையும் ஆள்கின்றானென்று கூறுகிறாள் ஆண்டாள். ஸ்ரீ நாச்சியார் திருமொழி 11.3) பரமபதத்திலிருந்து ஆளின் ஸம்ஸாரிகளான நம்மை இழக்க நேரிடுகிறது என்று கருதி அதனை விட்டு ஸ்ரீரங்கத்திலேயிருந்து செங்கோலேந்தியரசாளுகிறானும் எம்பெருமான். இங்கிருந்து ஆளினே பரமபதத்திலுள்ளாரையும் விடாது ஒரு கோவையாய்ச் சேர்ந்திருப்பது கண்டுகளிக்க முடிகிறது. பரமபதத்தில் உண்டான குறை தீர்ந்து திருவரங்கச் செல்வனாய்த் திகழ முடிகிறது.

இங்குள்ளார் அங்குப் போக வியலாது. அங்குள்ளாரோ இங்கு வருவதில்லை எவ்விதத்தடங்கலுமில்லை. வீடு பெற்றாருக்கு மீட்சியில்லை யென்பது உண்மையே. வினைநீங்கினவர் ஆதலின் வினைப்பயனை மீளமாட்டார்கள்; விருப்பத்தினால் அவர்கள் எங்கும் செல்வர். எல்லா உலகங்களிலும் அவர்கட்குக் காம சஞ்சாரம் (இஷ்டப்படி போதல்) உண்டு என்று மறையே ஓதுகிறது. ஆக இரு விபூதிகளிலுமுள்ளாரையும் இந்தப் பூலோக வைகுண்டத்திலிருந்து ஆள்கின்றான் திருவரங்கச் செல்வன் என்க.

பரமபதத்தில் உள்ளாரும் ஸ்ரீரங்கநாதனை வழிபடுவதற்காக இங்கே வருகின்றனர். விண்ணவர்கள் தங்கள் வேறுபாடு தோன்றாது மண்ணவரோடு இனிது கலந்து வழிபடுகின்றனராம் ஸ்ரீரங்கத்திலே. இவ்விடத்தில் ''ஏனமீனாமையோடரியுஞ் சிறுகுறளுமாய்த் தானுமாய தரணித் தலைவனிடமென்பரால் வானும் மண்ணும் நிறையப் புகுந்தீண்டிவணங்கி நற்றேனும் பாலும் கலந்தன்னவர் சேர் தென்னரங்கமே'' (பெரிய திருமொழி 5.4.8) என்னும் திருமங்கை மன்னன் திருவாக்கு நோக்குதற்குரியது. ''வானும் மண்ணும்'' என்று தொடங்கும் பகுதிக்குப் பெரிய வாச்சான் பிள்ளையருளிய வியாக்கியானமிங்கும் கவனிக்கத்தக்கது. ''நித்யசூரிகள் ஸம்ஸாரிகள் என்கிற வாசி தெரியாதே ஒருநீராய்ப் பரிமாறா நிற்பர்கள்''.

ஆக, காக்கப்படுமுயிரினங்களனைத்தையும் பெறுகையாலே குறை நீங்கி நிறைவாளனாய் இறைவன் உகந்து களிநடம்புரியும்இடமாயமைதல் பற்றி ''ஸ்ரீரங்கம்''என் பெயர் வழங்குகிற தென்றதாயிற்று.

தயர தனுடைய கடைக்குட்டிச் செல்லப் பிள்ளையாகத் தான் கண்டெடுத்த விபீடணனை இளைய ஸஹோதரனாகக் கொண்டு ஸ்ரீராமபிரான் குலதனமாகிய பெருமாளை என்றும் ஆராதிப்பதற்காக அவனிடம் கொடுத்தருளியதும், விபீடணன் இராமபிரானாகவே கருதி அர்ச்சையுருவில் பெருமாளையின்று மநுவிப்பதும், பெருமாள் ஆற்றுக் கிடையில் நிரந்தரமாக உகந்து தங்கியதால் அவ்விடம் ''ஸ்ரீரங்கம்'' என்று பேர் பெற்று மற்றெல்லாவிடங்களிலும் சிறந்து விளங்குவதும், அது தொன்மை வாய்ந்து புராணப்ரஸித்தமாயிருப்பதும், ஆழ்வாராசார்யர்கள் அப்புராணங்களைக் கையாண்டிருப்பதும், சில தலபுராணங்களின் போலித்தன்மையும், ஸ்ரீரங்கமே ஸத்யலோகம் முதலியவற்றைவிடச் சிறந்ததென்பதும், அதுபற்றியே ஸ்ரீரங்கநாதனென்று பேர்பெற்றதும், ஸ்ரீரங்கத்திலேயே உகந்தருளுவதற்குக் காரணமும்,களிநடம் புரியும் என்பதும் ஸ்ரீரங்கமென்று வழங்குவதும் பூலோக வைகுண்டமாவதும் புவனியும் விண்ணுலகமுமிங்கே செங்கோலேந்தியாள்வதும் நித்யசூரிகளும் ஸம்ஸாரிகளும் ஒரு நீராய்க் கலந்து வணங்குவதும், இதனாலிறைவன் நிறைவாளனாய் உகந்தருளுவதும் இதுகாறும் கூறப்பட்டன.

# கொங்கு நாட்டுத் தலங்கள்

## 1. திருப்புக்கொளியூர் அவிநாசி :

**இருப்பிடம் :** இது கோயம்புத்தூர் மாவட்டத்தில், அவிநாசி வட்டத்தின் தலைமையிடம். திருப்பூர் இருப்புப்பாதை நிலையத்தில் இருந்து, எட்டுக் கல் தொலைவில் இருக்கிறது. கோயம்புத்தூரில் இருந்து பஸ் ஏறி, 23 கல் சென்றால் இவ்விடத்தை அடையலாம்.

**தல வரலாறு :** சுந்தரர் தேவாரத்தில் "புக்கொளியூர் அவிநாசியே" என்னும் தொடர் வருவதால், இது திருப்புக்கொளியூர் அவிநாசி என வழங்கப்படுகின்றது. 'விநாசம் (அழிவு) இல்லாதவன்' என்னும் பொருளுடைய 'அவிநாசி' என்னும் இறைவனின் பெயரே, இத்தலத்திற்கும் வழங்கப்படுவதாயிற்று. "அரிய பொருளே அவிநாசியப்பா" என்பது திருவாசகம். ஊழிக் காலத்தில் சிவபிரான் அக்கினித் தாண்டவம் செய்தபோது தேவர்கள் அஞ்சி நடுங்கி, இங்கு வந்து புக்கு ஒளித்த காரணத்தால் 'புக்கொளியூர் ! எனப் பெயர் பெற்றது என்று தல புராணம் கூறும். இதற்குத் தட்சிணகாசி, தட்சிண வாரணாசி என்ற பெயர்களும் உண்டு. இங்கு தான் சுந்தரர் முதலையுண்ட மதலையை மீண்டும் உயிர் பெற்று வரச் செய்தார். "காரைக்கான் முதலையைப் பிள்ளை தரச் சொல்லு காலனையே" என்பது சுந்தரர் தேவாரம். "குளத்திடை இழியாக் குளித்த மாணி எனைக் கிறி செய்ததே" என்றும், "குளத்திடை உள்ளாடப் புக்க மாணி எனைக்கிறி செய்ததே" என்றும், சுந்தரர் தமது பாடலில் முதலையுண்ட பாலனைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

இங்குப் பிரமதேவர், ஐராவதம், தாடகை, நாக கன்னிகை, தெய்வரம்பை முதலியோர் பூசித்துப் பேறு பெற்றனர். வியாதன் என்ற வேட்டுவ அரசன் வழிபட்டுப் புத்திரப் பேறு பெற்றான்.

**கோயில் அமைப்பு :** கோயில் கிழக்கு நோக்கி யிருக்கின்றது. கோபுரம் அடித் தளத்துடன் மட்டும் இருக்கிறது. கோயிலுக்குள் இரண்டு பிராகாரங்கள் உள்ளன. கோபுரத்தின் முன்புறம் இரண்டு கூத்தாடும் பிள்ளையார் திருவுருவங்கள் உள்ளன. உள் வாயிற்படிகளில் துவாரபாலகர்கள் காட்சியளிக்கின்றனர். கோபுரத்தின் கீழ் உள்ள மற்றொரு படிக்கட்டில், மாணிக்கவாசகரும் சுந்தரரும் மேற்கு நோக்கி இறைவனை வணங்கும் நிலையில் எழுந்தருளி இருக்கின்றனர். உள்ளே நுழைந்ததும் சந்நிதிக்கு எதிரில் பெரிய நந்தி யுள்ளது. அம்பிகை கோயிலின் கருவறையின் மேற்புறச் சுவரில் ஒரு பெரிய தேளின் உருவம் செதுக்கப்பட்டிருக்கின்றது. அதனையும் மக்கள் வழிபடுகின்றனர். அவிநாசியப்பர் கோயிலுக்கு வெளியில் திருக்குளத்துக்கு எதிரில், அம்பிகையின் தனிக்கோயில் இருக்கின்றது. அம்மை தவக்கோலத்தில் காட்சி யளிக்கின்றாள்.

**சிற்பங்கள் :** கோயிலின் மண்டபத் தூண்களிலும், கருவறைச் சுவர்களிலும், அழகிய சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஊர்த்துவதாண்டவமூர்த்தி, காளி, வீரபத்திரர், குறவன் குறத்தி, வேடனாக வந்த முருகன், மண்டபங்கட்டிய காளியப்பகவுண்டர், அவர்தம் மனைவி, மகன்

முதலிய சிற்பங்கள், கண்டு மகிழத் தக்கவை. முதலையிருந்த மடு இப்போது 'தாமரைக் குளம்' என அழைக்கப்படு கின்றது. கோயிலுக்குத் தெற்கே சிறிது தொலைவில் ஏரியாக உள்ள அதன் கரை யில் சுந்தரர் கோயிலும், அவர் திருமுன் முதலைவாயினின்று பிள்ளை வருவது போன்ற சிலையுருவமும் உள்ளன். கோயி லுக்கு வெளியே சந்நிதிக்கு எதிரிலுள்ள விளக்குத் தூண் மண்டபத்திலும் சுந்தரர், முதலைவாய்ப் பிள்ளை, மீன்வாயில் இலிங் கம், ஆகிய சிற்பங்களைக் காணலாம்,

**தீர்த்தங்கள் :** 'காசிக் கங்கை' என்ற கிணறு கோயிலுக்குள் இருக்கின்றது. கோயிலுக்கு வடபுறம் வெளியில் நாக கன்னிகைத் தீர்த்தமும் (கிணறு), கோயி லுக்கு எதிரில் நீராழி மண்டபத்துடன் திருக்குளமும் இருக்கின்றன. நள்ளாறு என்ற தீர்த்தம், கோயிலுக்கு வடபுறம் ஓடு கின்றது. கோயிலுக்கு எதிரில் வரும் இதன் துறையினை ஐராவத தீர்த்தம் என வழங்குகின்றனர். தலவிருட்சம் மாமரம். இதன் அடியில் தவஞ்செய்து அம்பிகை இறைவனின் வலப்பாகம் பெற்றனள். மாமரம் இருந்த இடத்தில், இப்போது பாதிரி மரம் உள்ளது. அங்கு அம்பிகையின் தவக்கோலம் காணலாம். இத்தலத்து இறைவன் திருப்பெயர் அவிநாசியப்பர், அவிநாசிநாதர் என்பன; தேவியின் பெயர் பெருங்கருணையம்பிகை, கருணாலயச் செல்வி என்பவை.

**கல்வெட்டுக்கள் :** இக்கோயிலிற் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. வீர ராசேந்திரசோழன், குலோத்துங்கசோழன், வீரபாண்டியன், சுந்தரபாண்டியன், கோ னேரின்மை கொண்டான், வீர நஞ்சராய உடையார், வீரசிக்கராய உடையார், விஜயநகர அச்சுததேவ மகாராயர் முதலிய பலர், நித்திய பூசை - விழா - திருவிளக் கேற்றல் – அன்னம் பாலித்தல் முதலிய அறச் செயல்கள் நிகழத் தானங்கள் அளித்தமையினை, இக்கல்வெட்டுக்கள் புலப்படுத்துகின்றன. குளக்கரையில் உள்ள சுந்தரர் கோயிலைக் கட்டியவன், சுந்தரபாண்டியன் என்பது ஒரு கல்வெட் டாற் புலனாகின்றது.

## 2. திருமுருகன் பூண்டி :

**இருப்பிடம் :** இத்தலம் திருப்பூர் இருப் புப்பாதை நிலையத்தில் இருந்து ஐந்து நாழிகை தொலைவில் இருக்கிறது.

**தல வரலாறு :** சூர சங்காரத்தின் பின் னர் முருகக் கடவுள் வந்து பூசித்த தல மாதலின், இப்பெயர் பெற்றது. பூண்டி என்பது, பதி - பாடி - பட்டி என்பன போல, ஊர் என்ற பொருளிற் கொங்கு நாட்டில் வழங்கும் பெயர். இதற்கு முல்லைவனம் எனவும் பெயர் உண்டு. "முல்லைத்தாது மணங்கமழ் முருகன் பூண்டி" என்பது சுந்தரர் தேவாரம். மாதவி வனத்தில் சுயம்புவாய் முளைத்தெழுந்த இறைவனை முருகப் பெருமான் வழிபட்டார். அம்மூர்த் தியே இப்போது **மாதவிவனேசுவரர்** என வழங்கப் பெறுபவர். அதன் பின் முருகப் பெருமான் தாமே ஒரு சிவலிங்கம் தாபித் துப் பூசித்தனர். அப்பெருமான் முருக நாதர் எனப்படுவர். சூராதியர்களை வதைத்ததனால் வந்தபிரமசாயை இத்தலத் தில் ஒரு பெருவேப்பமரத்தின் நிழலில் ஒதுங்கித் தங்கியது என்று தலபுராணங் கூறும். இத்தலத்தை யடைந்து வழிபடப் பெறுவோர் பிரமகத்தி, பைத்தியம் முதலிய நோய்கள், பழி பாவங்கள் முதலியவற்றி னின்றும் நீங்குவர் என்பது, வெளிப்படை யாக இன்றைக்கும் காணும் காட்சியாகும்.

சுந்தர மூர்த்தி நாயனார், சேரமான் பெரு மாள் கொடுத்த அளவிறந்த செல்வங்களை எடுத்துக் கொண்டு, இத்தலத்தின் வழியே வரும்போது, இறைவன் திருவிளையாட் டாலே பூதகணங்கள் வேடர்களாகச் சென்று, சுந்தரரின் பரிசனங்களை அலைத்து, அவர்தம் பொருள்களை யெல் லாம் பறித்தனர். சுந்தரர் இங்குள்ள பெருமானை வணங்கிக் "கொடுகு வெஞ் சிலை" என்ற திருப்பதிகம் பாடி, இறை வனால் அப்பொருள்களை மீண்டும் பெற் றனர். சுந்தரர் தோழமை முறையால் இறைவனை நோக்கி 'வடுகவேடுவர் ஆறலைத்துக் கூறைகொண்டு வாழும் இவ் விடத்தில், எல்லைகாப்பதொன்றில்லையாகி, நீர் எத்துக்கு இங்கு இருந்தீர்?" என

உரிமையோடு வினவி இகழும் முறையில், இத்தலத்துத் தேவாரப் பதிகம் சுவைபட அமைந்திருப்பது காணலாம்.

**தீர்த்தங்கள் :** பிரமகத்தி பைத்தியம் முதலியனவற்றுல் துன்புறுவோர் நீராடி நலம் பெறுவது பிரமதீர்த்தம். இது கோயிலுக்கு வெளியில் வடமேற்றிசையில் உள்ளது. பூசனையின் பொருட்டு முருகப் பெருமான் வேலாயுதத்தை ஊன்றி யுண்டாக்கிய சண்முகதீர்த்தம், திருக்கோயிலுக்கு உள்ள இருக்கின்றது. திருக்கோயிலுக்கு முன்னே தாமரைக்குளம் என்றும், உருத்திரதீர்த்தம் என்றும், மகாமகதீர்த்தம் என்றும் வழங்கப்பெறும் சிறந்த தீர்த்தம் ஒன்றுண்டு. சிங்கராசியில் வியாழன் கூடும் காலத்திலும், கும்பராசியில் சூரியன் கூடும் காலத்திலும், மகநட்சத்திரத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கங்கை இதன்கண் வந்து கலந்து முழுகிச் செல்கின்றுள் என்று, தலபுராணம் கூறுகின்றது. இங்கு இறைவனது இடப்புறத்தில் ஞான தீர்த்தமும், நிருதி திசையில் துருவாச தீர்த்தமும், தென் கீழ்த் திசையில் அக்கினி தீர்த்தமும், மகாமக தீர்த்தத்துக்குப் பக்கத்தில் இந்திர தீர்த்தமும் உள்ளன.

**சிற்பங்கள் :** கள்வனுன வேடுபறி வேடர் திருவுருவமும், அதனை யடுத்துச் சுந்தர மூர்த்தி சுவாமிகள் பொருள் பறியுண்டதும், பறியுண்ட பொருள்கள் மீளப் பெற்றதும் ஆகிய நிகழ்ச்சிகளைக் குறிக்கும் திருவுருவங்களும், முருக நாத சுவாமி கோயில் வாயிலில் காணப்படுகின்றன. இறைவனின் கம்பீரமான வேடுவத் திருக்கோலமும், பொருளிழந்த சுந்தரரின் முக வாட்டமும், பொருள் மீண்டும் கிடைக்கப் பெற்றபோது அவர் அடைந்த மகிழ்ச்சியும், சிற்பத்தில் சிறப்புற வடிக்கப்பட்டுள்ளன.

**சுவாமி பெயர் :** மாதவி வனேசர், முருக நாதர். அம்பிகையின் பெயர் : ஆவுடை நாயகி, முயங்கு பூண்முலையம்மை. "முயங்கு பூண்முலை தன்னெடும்" என்று தேவாரம் குறிப்பிடுகின்றது. திருமுருகன் பூண்டி என்ற தலத்தின் பெயருக்கு ஏற்ப, ஆறுமுகக் கடவுள் இங்கு நித்திய வரப் பிரசாதியாய் மிக்க சிறப்புடன் விளங்கி வருகின்றுர். தேவியின் திருநாமம் மங்களாம்பிகை. இக்கோயிலின் முன்வாயில் மண்டபத்தின் மேல், கோபுரத்திற்குப் பதிலாகப் பிரம்மாண்டமானசுதை வேலையாற் செய்யப்பட்ட பெரிய நந்தி இருக்கின்றது. அது மிக நெடுந்தூரம் வரை காட்சி தருகின்றது. திருமுருகன் பூண்டியில் இருந்து அவிநாசிக்குச் செல்லும் சாலையில், அரை கல் தொலைவில் ஒரு பாறையின் மேல், விநாயகர் கோயில் ஒன்று இருக்கின்றது. சுந்தரரை வழிமறித்து நிதிபறித்த இறைவன் இருக்கும் இடத்தைச் சுந்தரர்க்குக் காட்டியருளிய கணபதி இங்கு எழுந்தருளி விளங்குகின்றுர். 'கூப்பிடுபிள்ளையார்' என்ற பெயரால் மக்கள் இவரை வழங்குகின்றனர்.

**கல்வெட்டுக்கள் :** இக்கோயிலில் கோனேரின்மை கொண்டான், சுந்தர பாண்டிய தேவன், கொங்கு மன்னனுன இராஜாதிராஜ உத்தம சோழன், வீர ராஜேந்திர தேவன், குலோத்துங்க சோழ தேவன், விக்கிரம சோழ வேந்தன்,- வீர நஞ்சராய உடையார் ஆகியவர்களின் கல்வெட்டுக்கள் உள்ளன. இந்தக் கோயில் இந்திய அரசாங்கத் தொல் பொருள் ஆய்வுத் துறையினரின் பாதுகாப்பில் இருக்கின்றது. அழகிய உருவ வேலைகள் செய்யும் கற்சிற்பிகள் இந்த ஊரில் இருந்து வருகின்றனர்.

சுந்தரரின் திருப்பதிகம் ஒன்றும், அருணகிரிநாதர் திருப்புகழ் ஒன்றும், இத்தலத்திற்கு உள்ளன. மகாவித்துவான் வாசுதேவ முதலியார் என்பவர், இதற்குத் தல புராணம் பாடியுள்ளார். (தொடரும்)

# மதிப்புரை

திருவாசகமணி, திருக்குறள்மணி, சிவபக்தமணி திரு கே. எம். பாலசுப்பிரமணியம் B. A., B. L., அவர்களைத் தமிழ் உலகம் நன்கு அறியும். திருவாசகத்தினையும் திருக்குறளையும் ஆங்கிலத்தில் பாங்குற மொழிபெயர்த்தருளிய சிறந்த பேரறிஞர் அவர்! தமிழிலும் ஆங்கிலத்திலும் 'கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும்' தலைசிறந்த பெருநாவலர் என விளங்கிவரும் அவர்கள், தன்னிகரற்ற இனிய பெருங்கவிஞராகவும் மதித்துப் போற்றத் தக்கவராவர்! அவர் இயற்றியுள்ள கவிதை நூல்கள் பலப்பல. அவற்றில் முடிமணியாக, அவர்கள் அண்மையில் இயற்றியளித்திருப்பது "திருவள்ளுவர் பிள்ளைத் தமிழ்" என்னும் சிறந்த செந்தமிழ்க் கவிதை நூலாகும்.

'திருவள்ளுவர் பிள்ளைத் தமிழ்' என்னும் இந்நூல், திருவள்ளுவரின் பெருமையையும் திருக்குறளின் சிறப்பையும், ஆங்காங்கே அழகிய இனிய அருந்தொடர்களால் புகழ்ந்து போற்றுகின்றது. திருக்குறட் பாடல்களும், அவற்றின் சிறந்த பொருள்நலங்களும், இதன் கண் ஆங்காங்கே பல இடங்களில், நயம் திகழ நன்கினிது அமைக்கப்பட்டுச் சுவைமிகவும் பெருக்கி நிற்கின்றன.

முதற் குறளின் விரிவை 83ஆம் பாடலில் காணலாம். திருக்குறளை அனைவரும் போற்றுதலை 26ஆம் பாடல் இனிது விளக்குகின்றது. திருக்குறளின் சிறப்பை விளக்கும் முறையில் 'கோஹினூர் என்னத் திகழ் குறள்' என இவர் குறிப்பிடுவது நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றது(43). திருமயிலையின் பெருமையைப் (99) பல்லாற்றானும் புகழும் இவர், திருவள்ளுவரை 'மயிலை அணி' (54) எனக் குறிப்பிட்டு, அப்பாடலில், அணிகள் பலவற்றை அடுக்கி வகுக்கின்றார். திருவள்ளுவரைக் காமதேனு என்று சுட்டிக்காட்டி, அப்பாடலின் (45) முழுவதிலும் 'பால், பால்' என்னும் சொல்லமைதி பன்முறை பயின்று வரும்படி அமைத்துள்ள திறம், பெரிதும் பாராட்டற்பாலது. திருவள்ளுவரை 'மெய்த்தேவர்' எனக்குறித்து, அதற்கு ஏற்பத் திருக்குறளில் தேவர் எனச் சுட்டப் பெறுவார் அனைவரையும் தொகுத்துப் பாடியிருப்பது சுவை பயக்கின்றது. வாசுகியம்மை பற்றிய பழைய வரலாற்றுக் குறிப்புக்களை, நூலின்கண் ஆசிரியர் சால்புற அமைத்துப் பாடியுள்ள அருமை, ஓதி மகிழத்தக்கது (96, 97).

'புலவர்க்குப் புலி' எனப்படும் அம்புலிப்பருவத்தை, முன்னைப் பழைய மரபு பிறழாமலும், பின்னைப் புதுமை நலம்பல பொலியவும் 'சீலன் இவன் நூற்குறள் சால அறி ருஷ்யர்கள் சினம் ஆர்ந்து கண் சிவப்பத் தம் மக்கள்மூலம் நின் சந்த்ர மண்டலம் ஆர்ந்து சாடுவர் உனை. அறிகுவாய்' (71) என்பன போலப்பாடியிருக்கும் திறன் வியந்து போற்றற் குரியதாம். சிறுதேர்ப் பருவத்தில் வரும் விசையுந்து (Scooter) பற்றிய குறிப்பும் (94), இன்சுவைத்திறம் வாய்ந்தது.

ஆசிரியர்க்குத் திருக்குறளிலும் திருவாசகத்திலும் உள்ள ஈடுபாடும் (46), சேக்கிழார் இளங்கோ கம்பர் வில்லிபுத்தூரார் (93), குமரகுருபரர் (4) ஆகியோர்பால் உள்ள பெருமதிப்பும், நூலில் ஆங்காங்கே புலப்படுத்தப் பெற்றுள்ளன. பரவை நாச்சியார் (84), இடங்கழி நாயனார் (85), அப்பர் சம்பந்தர் (86), மனுநீதிச்சோழனின் மைந்தன் வீதிவிடங்கன் (94) என்பவர்களைப் பற்றிய குறிப்புக்கள் திறன்தெரிந்து சிறந்த முறையில் இடமறிந்து பயன்படுத்தப் பெற்றுள்ளமை, ஆசிரியரின் இணையற்ற கவிதைக் கற்பனைத் திறனுக்கு இனியதோர் எடுத்துக்காட்டாகும்.

சிற்றிற் பருவத்தில் 'எம்சிற்றில் சிதையேல்; சிதைக்க அரசின் விதிகள் அனுமதியா' பிரமனின் அவதாரமாகிய நீ, படைத்தல் அல்லால் அழித்தல் அழகன்று; அழித்தியாயின், கொடுப்பானைத் தடுப்பான், ஊனைப்புசிப்பான், உள்ளத்து அழுக்காறு உடையான் முதலியோர் இல்லங்களைச் சிதைத்து அழி' என்பன போன்ற பகுதிகள் படித்து மகிழத்தக்கன.

பலசமயத்தவரும் போற்றும் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர்மீது பாடப்பெற்ற இப்பிள்ளைத் தமிழின் காப்புப்பருவத்தில், திருவள்ளுவரின் பொதுமைநெறியைப் பின்பற்றிப்

புதுமை முறையில் **அல்லா, அஹுராமஸ்தா, புத்தர்பிரான், வான்தந்தை, அருகபரமேட்டி** ஆகிய பிறசமயக் கடவுளரையும் நெறிமுறையே நினைத்துணர்ந்து பாடியிருக்கும் சிறப்பு, அறிஞர் அனைவர்க்கும் ஆராப் பெருவிருந்தாகும்.

“ அல்லா எனும் அருள்செய் நல்லார் எனும் அவரை
அல்லாது பிறதெய்வம் இல் ;
ஆதலாற் பணிமின் என ஓதலுற்றிடும் இறை......”
கனிவார்ந்த முகமதிறை நனிதேர்ந்த தூதரவர்
கவினுர்ந்த நபிநாயகம் ”

“ சகளதத் துவம்ஏழும் நிகழுருவி னிற்சார்ந்த
சகசன், அழல் மூலம் அருள்வோன்,
சாரதுஷ் டிரர்தொழும் அஹுரமஸ் தாஎனும்
தனிஇறையை நனிஏத்துவாம்”

“ சித்திர வதைசெய்து செஞ்சிலுவை யிற்பெய்து
செய்யாத செய்த கயவர்
‘சிந்தை தெளிவிலர் அவரை எந்தை மன்னித்திடுதல்
செய்வீர்’ எனச் செப்பிய
புத்திரனை ; “ஏத்துமின் பத்தியுடன் ஈசனைப்
போற்றுவீர் மனிதரை” எனப்
போதித்த ஏசுதனை யேபெற்ற வான்தந்தை
பொற்கழல் தனைப் போற்றுவாம்”.

என்பனபோல வரும் பகுதிகள், ஆசிரியரின் பண்பட்ட பரந்த மனப்பான்மையினையும், சிறந்த இனிய செஞ்சொற் கவிதைத் திறத்தினையும் மலையிலக்கென விளக்குவனவாகும்.

—ஆசிரியர்

---

## அன்பர்கட்கு வேண்டுகோள்

நமது மாநிலத்தில் எத்தனையோ பல வட்டாரங்கள், (Blocks) உள்ளன. அவைகளில் பாடல் பெற்றன அல்லாமல், புனிதம் மிக்க எத்தனையோ பல சிவன்கோயில் - பெருமாள் கோயில் - விநாயகர் கோயில்- முருகன் கோயில் - அம்பிகை கோயில்கள் அமைந்து திகழ்கின்றன.

ஒவ்வொரு கோயிலிலும், ஏதேனும் ஒரு சிறப்பும் தெய்விகமும் இருத்தல் கூடும். சிறுசிறு கோயில்களிலே கூட, ஏதாவது அழகிய சிற்பத் திருவுருவங்களோ, அரிய கல்வெட்டுக்களோ காணப்பெறுதல் இயலும்.

சாதாரண சிறு கிராமங்களிலும், தெய்விக சம்பந்தமான சிறப்பு விழாக்கள், இறையுணர்வை வளர்க்கும் இனிய நிகழ்ச்சிகள் முதலியன, நடைபெற வாய்ப்புக்கள் இருக்கின்றன.

அவைகளைக் குறித்துச் சுவையான பற்பல தகவல்களை, ஆங்காங் குள்ள அன்பர்கள் பலரும், இயன்ற அளவு சுருக்கமாக எழுதியனுப்பலாம்.

அவற்றுள் தகுதியுடையவை, எழுதியவர் பெயர் விவரங்களுடன், நமது ‘திருக்கோயில்’ இதழில் தொடர்ந்து வெளியிடப்பெற்று வரும். ஆங்காங்கு உள்ள அன்பர்கள் எழுதியனுப்ப வேண்டுகிறோம்!

— ஆசிரியர்.

# முப்புரம் எரித்த முதல்வன்

(திரு. மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்கள்)

மாமல்லபுரம், தமிழர்களின் சிற்பக் கலைக்கு ஒரு பெருஞ் சிறப்பிடம். அங்கே எத்தனையோ பல, அழகிய வியத்தகு சிற்பங்கள் சிறப்புற அமைந்துள்ளன. எழில் கனிந்த அச் சிற்பங்களுள் ஒன்றின் படத்தினை, யான் அண்மையிற் காண நேர்ந்தது. அதனைப் பேராசிரியர் திரு. பண்டித. இராம. மீனாட்சிசுந்தரம் பிள்ளை எம். ஏ. அவர்கள், எனக்கு அனுப்பி வைத்ததுடன், அதற்குரிய விளக்கத்தினைத் தருமாறும் கேட்டிருந்தார்கள்.

அந்தச் சிற்பத்தின் படத்தைக் கண்டபோது, நான் பெரிதும் வியப்பு அடைந்தேன். சிவபெருமானுடைய வீரட்ட மூர்த்தங்களில் ஒன்றான திரிபுராந்தக மூர்த்தியின் திருவுருவம் அது. திரிபுராந்தக மூர்த்தியின் நின்ற கோலமாக அமைந்த சிற்ப உருவங்களைத் தான் நான் கண்டிருந்தேன். இருந்த கோலமாக அமைந்த திரிபுராந்தக மூர்த்தியின் சிற்ப உருவத்தை இதற்கு முன்பு நான் கண்டது இல்லை. ஆகவே அந்தப் படத்தைக் கண்டு வியப்பு அடைந்தேன்.

இந்தப் படத்தைப் பார்க்கும்போது, சிவபெருமான் தம்முடைய இடது கையில் பிடித்துள்ள நீண்ட வில் முதலில் நம்முடைய கருத்தைக் கவர்கின்றது. உடனே இது கோதண்டராமன் திருவுருவம் என்று நினைக்கத் தோன்றுகிறது. இவ்வுருவத்தின் மற்றக் கைககளில் காணப்படுகிற மற்ற ஆயுதங்களைக் காணும்போதுதான் இது கோதண்டராமன் உருவம் அன்று, சிவபெருமானுடைய உருவம் என்பதை உணர்கிறோம்.

உயரமான ஆசனத்தின் மேலே கம்பீரமாகவும் உவகையோடும் அமர்ந்திருக்கிற சிவபெருமான் சடா மகுடத்துடனும், நான்கு திருக்கைகளுடனும் காட்சியளிக்கிறார். வலது காலை மடக்கி ஆசனத்தின் மேல் படிய வைத்து இடது காலைத் தொங்கவிட்டுச் சிவபெருமான் சுகாசன மூர்த்தமாக அமர்ந்திருக்கிறார். நாண் ஏற்றாத வில்லைத் தரையில் ஊன்றி அதை இடது கையினால் பிடித்திருக்கிற இவர், வலது கையிலே அம்பு ஒன்றை ஏந்திக்கொண்டிருக்கிறார். கூர்மையான அம்பின் தலைப்புறம் கீழ்நோக்கியும், இறகுகளுடன் கூடிய வால்புறம் மேல் நோக்கியும் இருக்கிறது. அம்பின் சிறகுகளின் மேலே அக்கினித் தேவனின் உருவம், மிகுந்த கோபத்துடன் காட்சியளிக்கிறது. அம்போடு சேர்ந்தாற் போல அக்கினித் தேவனின் உருவம் காணப்படுகிற போதிலும், அக்கினித் தேவன் அம்புடன் இணைந்திருக்கவில்லை. இந்த அம்பு சாதாரண அம்பு அன்று. தீயைக் கக்கும் ''எரிமுகப் பேரம்பு'' என்பதைக் காட்டுவதற்காகவே அம்புடன் சேர்ந்திருப்பதுபோலத் தீக்கடவுளின் உருவத்தை அமைத்திருக்கிறார், இந்த உருவத்தை அமைத்த சிற்பக் கலைஞர்! தீக்கடவுளின் முகத்தைச் சூழ்ந்து தீச்சுடர் அனலைக் கக்கிக் கொண்டு எரிகிறது. தீக்கடவுளின் கண்களும், கோரைப் பற்களும், அவர் சினங்கொண்டு சீறுவதைக் குறிக்கின்றன. ''இதோ எரித்து விடுகிறேன் பார்'' என்று சினத்தினால் துடித்துக்கொண்டிருப்பது போலத் தீக்கடவுளின் உருவம் அமைந்திருக்கிறது. சிவபெருமான் கையிலுள்ள அம்பு, அனலைக் கக்கும் எரிமுக அம்பு என்பதைத் தெரிவிப்பதற்காகவே, தீக்கடவுளின் உருவத்தை அம்புடன்

சேர்த்துச் சிற்பக்கலைஞர் சித்திரித்துக் காட்டியுள்ளார். சிவபெருமான் எரிமுகப் பேரம்பினால் திரிபுரத்தை எரித்தார் என்று புராணம் கூறுகிறது.

"திரிபுரம் எரியத் தேவர் வேண்ட
எரிமுகப் பேரம்பு ஏவல் கேட்ப"

என்று சிலப்பதிகாரக் காவியம் கூறுவது காண்க.

சிவபெருமான் திரிபுரம் எரித்ததை, மாணிக்கவாசகர் தாம் அருளிய திருவுந்தியாரில் அழகாகக் கூறுகிறார்.

"வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தன முப்புரம்-உந்தீபற
ஒருங்குடன் வெந்தவாறு—உந்தீபற

"ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தம் கையில்
ஓரம்பே முப்புரம்—உந்தீபற
ஒன்றும் பெருமிகை—உந்தீபற"

ஏகம்பர் (ஏக+அம்பர்-ஒரே அம்பை உடையவர்) ஆகிய சிவபெருமான் கையில், ஈரம்பு (இரண்டு அம்பு) இல்லை; ஒரே அம்புதான் இருக்கிறது. அந்த ஒரு அம்பைக் கொண்டே அவர், முப்புரத்தை எரித்து அழித்து விட்டார். இந்தக் கருத்தை, இவ்வுருவத்தை அமைத்த சிற்பி வெகு நன்றாகக் காட்டியுள்ளார். சிவபெருமான் கையில் ஒரே ஒரு அம்பை மட்டும் காட்டியிருப்பது மாத்திரம் அன்று. அம்பறுத் தூணி இந்தச் சிற்பத்தில் காணப்படவில்லை. வில்லைக் கொண்டு அம்பு எய்கிறவர்களுக்குத் தோளில் அம்பறுத் தூணி அவசியம் இருக்கும். ஆனால், ஏகம்பராகிய சிவபெருமானுக்கு அம்பறுத் தூணி தேவையில்லை. ஏனென்றால் அவர் ஏகஅம்பர்! இந்தக் கருத்தை வெகு நன்றாக விளக்கியிருக்கிறார், இந்தச் சிற்பத்தை அமைத்த சிற்பக்கலைஞர்! இந்தச் சிற்ப உருவத்தைப் பார்க்கிறவர்களுக்கு இந்த நுட்பமான பார்வையும் வேண்டும். சாத்திரக்கருத்தைத் தெரிவிக்கத்தானே சிற்ப உருவங்கள் அமைக்கப்படுகின்றன!

மேலும் இந்தச் சிற்ப உருவத்தை ஆராய்வோம். சிவபெருமானுடைய மற்றொரு வலது கையில் மழுவும் சூலமும் காட்சியளிக்கின்றன. (மழு-கோடரி). இந்த ஆயுதங்கள் பொதுவாகச் சிவபெருமானுடைய மூர்த்தங்கள் எல்லாவற்றிலும் காணப்படுவது வழக்கம். மழுவும் சூலவும் வெவ்வேறு தண்டுகளில் அமையாமல் இரண்டும் ஒரே தண்டில் அமைந்துள்ளன. சிவபெருமானுக்கே உரிய இந்த ஆயுதங்கள் இந்தச் சிற்பத்தில் அமையவில்லையானால், இந்த உருவத்தைக் கோதண்டராமன் உருவம் என்று கருதவேண்டியிருக்கும்.

சிவபெருமானின் இடது காலின் பக்கமாக, தண்டாயுதம் போன்ற ஒரு ஆயுதம் தொடையின் மேல் சாய்ந்துகிடக்கிறது. இடது தொடையின் மேல் சாய்ந்து கிடக்கிற இந்த ஆயுதத்தையும் வில்லையும், சிவபெருமான் தம்முடைய மற்றொரு இடது கையினால் அணைத்துக்கொண்டிருக்கிறார். கனத்ததாகக் காணப்படுகிற இந்த ஆயுதத்தைக் காண்கிறவர் சிலர், இது தண்டாயுதம்என்றும், இதைவைத்துக்கொண்டிருக்கிற இந்த உருவம் துவாரபாலகரின் உருவம் என்றும் கருதுவர். உண்மையில் இது தண்டாயுதம் அன்று. கட்டங்கம் அல்லது கட்டுவாங்கம் என்னும் ஆயுதம் இது. கட்டுவாங்கம் என்பது ஒரு கோயிலின் தலைப்பில் முழுமையான மண்டையோட்டைக் கட்டி வைத்திருக்கும் ஓர் ஆயுதம்! இது சிவபெருமானுக்கே உரியது. அப்பர் சுவாமிகளின் தேவாரத்தில் இது குறிக்கப்படுகிறது. பல்லவர்கள் காலத்துச் சிற்ப உருவங்களில் இது சாதாரணமாகக் காணப்படுகிறது. கட்டுவாங்கத்தைச் சுற்றிக் கொண்டு ஒரு நாகப்பாம்பு படமெடுத்து ஆடுவதை இடது கைக்குக் கீழே காண்க.

சிவபெருமானுக்கு இடது புறத்தின் மேலே இன்னொரு முத்தலை நாகம் படமெடுத்து ஆடிக்கொண்டிருக்கிறது. நஞ்சுண்டவராகிய சிவபெருமானுக்கு நாகப் பாம்புகள் உகந்த அணிகலன்களாக உள்ளன என்று சாத்திரங்கள் கூறுகின்றன.

அம்பையும் மழுவையும் பிடித்திருக்கிற விரல்களின் அமைப்பைப் பாருங்கள். இவற்றைக் கல்லில் அமைத்த சிற்பக் கலைஞரின் நுண்ணறிவை இவை புலப்படுத்துகின்றன.

திரிபுராந்தகமூர்த்தி அவுணர்களின் முப்புரங்களை எரிமுகப் பேரம்பினால் எய்து எரியச் செய்து அழித்தார் என்பது புராணக் கதை. இது பாமரமக்களுக்காகக் கூறப்படுவது. இதற்குச் சாத்திரக்கருத்தும் உண்டு. அது சைவசித்தாந்தக் கருத்து. இக்கருத்

தைத் திருமூல நாயனுர், தமது திருமந்திரப்பாட்டு ஒன்றில் நன்ருக விளக்கிக் கூறுகிருர்.

"அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புர மாவன மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யார் அறிவாரே"

என்பது அச்செய்யுள்.

கருங்கல்லிலே புடைப்புச் சிற்பமாக அமைந்துள்ள இந்தஅருமையான சிற்பம், ஏறத்தாழ மூன்று அடி உயரமும், இரண்டரை அடி அகலமும் உள்ளது.

இது அமைக்கப்பட்ட காலம் எது என்பதை ஆராய்வோம். சிவபெருமான் அமர்ந்திருக்கிற ஆசனத்தின் அமைப்பும், அவர் அணிந்திருக்கிற ஆடை ஆசனத்தின் மேலே தொங்கிக்கொண்டிருக்கிற அமைப்பும், பல்லவ அரசர் காலத்துச் சோமாஸ் கந்த மூர்த்தியின் அமைப்புப்போலக் காணப்படுகின்றது. மேலும், இவர் அணிந்திருக்கிற தடித்த பூணூல், பல்லவர் காலத்துச் சிற்பங்களில் காணப்படுவதுபோலவே இடது தோளின் மேலிருந்து மார்பின் மேல் வந்து வலது கையின் மேல் செல்லுகிறது. இவ்வித அமைப்புகளைக் கொண்டு, இந்தச் சிற்பம் பல்லவ அரசர்காலத்துச் சிற்பம் என்று உறுதியாகக் கூறலாம். இது மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோவிலைச் சேர்ந்து காணப்படுகிறபடியால், அக் கோயில் அமைக்கப்பட்ட காலத்தில் இச் சிற்பம் அமைக்கப்பட்டிருக்கவேண்டும். கடற்கரைக் கோயிலை அமைத்தவன், இராஜ சிம்மன் என்னும் இரண்டாம் நரசிம்மவர்மன் ஆகையால், அவர் காலத்தில் இந்தச் சிற்பமும் அமைக்கப்பட்டிருக்கவேண்டும். அதாவது இன்றைக்கு ஆயிரத்து இரு நூறு ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டிருக்கவேண்டும்.

இந்தச் சிற்ப உருவம், அருமையான கலைச் செல்வம்! நமது நாட்டிலே மூலை முடுக்குகளில் போற்றுவார் அற்று, அருமை பெருமை தெரியாமல் கிடக்கிற ஆயிரக்கணக்கான சிற்பக் கலைச்செல்வங்களில் இது ஒன்று. கடலிலிருந்து வீசுகிற குளிர்ந்த உப்பங்காற்றினுலும், வெயில் பனி மழையினுலும் தாக்குண்டு மழுங்கிப் போய், ஆயிரத்து இருநூறு ஆண்டுகளாக உயிருக்கு ஊசலாடிக்கொண்டிருக்கிறது.

திரிபுராந்தக மூர்த்தமாக அமைந்துள்ள இந்தச் சிற்ப உருவம், புராணக் கருத்தையும், சித்தாந்தக் கருத்தையும் எவ்வளவு தெளிவாகக் காட்டுகின்றது! இந்த உருவத்தில் காணப்படுகின்ற மழு, திரிசூலம், நாகப்பாம்பு முதலிய பொருள்களுக்கெல்லாம் ஒவ்வொரு சாத்திரக் கருத்து உண்டு. அவற்றை எல்லாம் இங்கு எழுதவேண்டிய அவசியம் இப்போது இல்லை. இத்தகைய அருமையான சிற்ப உருவத்தைப்போற்றிப் பாதுகாக்க வேண்டியது நம் அனைவர்க்கும் உரிய கடமையாகும்.

---

## செய்திச் சுருக்கம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான திருப்பனந்தாள் செஞ்சடையப்பர் கோயிலின், அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகப் பெருவிழா, 5—7—68 வெள்ளிக் கிழமை காலை மணி 7-23க்குமேல் 11-30க்குள் சிறப்புற நடைபெறும். மணி 8-57க்குக் கடம் புறப்பாடு. 9-30 மணி அளவில் மகா கும்பாபிஷேகம் நிகழும்.

—ஆசிரியர்.